

போகர்

மலை வாகடம்

தாமரை நூலகம்,
சென்னை - 600 026.

போகர் மலைவாகடம்

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண்: 241
முதல் பதிப்பு : செப்டம்பர் 1999
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 2012
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014
நான்காம் பதிப்பு *ஆகஸ்ட் 2017*
ஐந்தாம் பதிப்பு : ஏப்ரல் : 2022

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : போகர் மலைவாகடம்

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு : **ஏப்ரல் : 2022**

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 114

விலை : ரூ. 50

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

பதிப்புரை

இப்படி ஒரு நூல் இருப்பதாக இதுநாள் வரை தெரியாது. இது போகமுனிவர் எழுதியபடி முழுநூலாக நமக்குக் கிடைக்கவில்லை. அதைப்பற்றி அதிர்ச்சியாக இருந்தபோதிலும் இந்த மட்டுமாவது கிடைத்ததே என்று நினைக்கும் பொழுது மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

சிங்கம்புணரியைச் சேர்ந்த மகான் A.P.Y *ஆனந்தம்* அவர்கள் தமது சொந்த உபயோகத்திற்காக எழுதி வைத்திருந்த குறிப்புகள் சற்றே செப்பனிடப்பட்டு நூல் வடிவாக்கப் பட்டுள்ளது. இதை நூல் வடிவாக்கித் தந்தவர் சிங்கம்புணரி டாக்டர் *கே. வி. ராமன் ஆர்.ஐ. எம்.பி.* அவர்கள்.

இந்த நூலில் மலைவளம் பற்றி விரிவாகப்பேசப் பட்டிருக்கவேண்டும். ஆனால் போகமுனிவர் எழுதியபடி கிடைக் காததால் அதையெல்லாம் அறிவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மலைகளின் மேல் காணப்படும் உதகங்களைப் பற்றியும் கற்ப மூலிகைகள், தருக்களைப் பற்றியும் அவை இருக்குமிடங்களின் அடையாளங்கள் அங்கு வசித்த சித்தர்கள் ரிஷிகளைப் பற்றியுமே சிறு குறிப்புகள் போல் விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

முக்கியமாக உதகங்களைப் பற்றி இந்நூலில் காணப்படும் செய்திகள் வேறெங்கும் காணமுடியாதவை.

உதகம் என்றால் என்ன?

உதகம் என்பது ஒருவகை திரவம். நீர்! ஆனால் தண்ணீரா என்று கேட்டால் அல்ல. குடிநீர் அல்லது கஷாயம் போல் இலைகள், வேர்கள் முதலிய மூலிகைகளாலான குடிநீரா என்று கேட்டாலும் அல்ல என்பதே பதில். திராவகம்- தீ நீராஎன்று கேட்டாலும் அல்ல அல்ல என்றே கூறவேண்டும். பின் என்ன?

இவை எல்லாவற்றையும் விட மிகவும் வீரியம் வாய்ந்த- ஆற்றல் மிக்க நீர்த்தன்மையில் உள்ள ஒரு பொருள்.

மலைகளின் மேல் எங்காவது அபூர்வமாகவே காணப்படுகிறது. இந்த திரவத்தில் ஒரு இலை விழுந்தால் அது'கல்லாய்ப்போகும் என்பது ஒன்றே இந்த உதகம் என்ற திரவத்தின் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாகும்.

மலைமேல், கிணறுபோல் மிக ஆழமாக உள்ள குறுகலான குழிகளில் தேங்கிய நீரே உதக நீராயிற்று என்று சித்தர்கள் கருதுகின்றனர். இந்தக் குழிகள் இடிவிழுந்ததால் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் வேறு விதமாக அவ்வளவு ஆழமான, ஆழம்காண முடியாத- கிடுகிடு பாதாளக் குழிகள் உண்டாகியிருக்க முடியாது.

அக்குழிகளில் தேங்கிய தண்ணீரில் மலைமேல் காணப்படும் மூலிகைகள், உப்புகள், பாஷாணங்கள் (தாது ஜீவ வர்க்கங்களின் மிச்சம் மீதிகள்) இவை எல்லாம் கரைந்த கரைசல் இடி மின்னல்களால் வேதிக்கப்பட்டுக் கொடூரமான தன்மையடைந்து தேங்கியுள்ளதே உதகம்.

எல்லா உதகங்களும் ஒரே தன்மையுடையவை அல்ல. அவற்றின் தன்மையும், வீரியமும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவை, அவை இருக்கு மிடங்களின் வேதியல் தன்மைக் கேற்பவும் அவை எவ்வளவு தடவை இடி மின்னல்களால் தாக்கப்பட்டு உடல் அதிர்ந்து மாறுதல்களை அடைந்தன என்பதற்கு ஏற்பவும் அவை பலவிதமான குணங்களும் ஆற்றலும் உடையவையாக உள்ளன.

இதுவரை எந்த நாட்டிலும் உதகம்பற்றிய ஆய்வு செய்யப்படவில்லை. சித்தர்கள் பலநூறாண்டுகளுக்கு முன்பே இவை பற்றி நுணுக ஆய்ந்து அற்புதமான முடிவுகளைக் கூறியுள்ளனர் என்பதை நினைக்கும்போது தமிழன் பெருமை அடையாமலிருக்க முடியாது.

சித்தர்கள் தங்கள் சாதனைகளாலும் கண்டு பிடிப்புகளாலும் உலகத்தில் யாருமே எட்ட முடியாத அறிவியல் அற்புதங்களைப் பற்றிக் கூறியுள்ளனர். நடத்திக் காட்டியுள்ளனர் ஆனால்.

எப்படியோ நாம் அவர்களைப் புறக்கணித்து விட்டோம். அணுகாமல் தவிர்த்து விட்டோம். அல்லது அவர்கள் நம்மால் எட்ட முடியாத நிலையில் இருந்துவிட்டார்களா?

நமக்குத் தெரியவில்லை.

இனிமேலேனும் தமிழகம் விழித்துக் கொண்டு சித்தர்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், அவர்களுடைய ஆய்வுகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், இயன்ற வரை பின்பிற்றவும் முயற்சிக்க வேண்டும்.

சித்தர்களின் சிந்தனையின் பரிமாணத்தைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாதவர்களாக இருக்கிறோம். இந்த நிலை மாறினால் கொஞ்சம் கொஞ்சமாக நம்மிலும் பல சித்தர்கள் தோன்றும் காலம் ஏற்படவும் கூடும்.

கடைசியாக இந்நூல் இந்தவடிவில் கிடைக்க நமக்கு உதவிய டாக்டர் **K.V** *ராமன்* அவர்களுக்கும், இதைப் பாதுகாத்து வைத்திருந்து உலகத்திற்கு உதவும்பொருட்டு அருள் கூர்ந்து அளித்து உதவிய மகான் **A.P.Y** *ஆனந்தம்* அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

எஸ்.பி.இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருடளக்கம்

முற்றும்



போக மாமுனிவர். பழநி.

ஓர் கற்பனை வடிவம்

உ

ஓம் நமசிவாய

போகமாமுனிவர்

அருளிச் செய்த

மலைவாகடம்

உதகநீர்

உதகநீர் என்பது சாவற்றிருப்பதாகும, மழைபெய்து தண்ணீர் வந்தால் அது உதகத்தின் மேலே தான் நிற்கும், வற்றும் மரம் செடி, கொடிகளின் இலை குச்சி முதலியன உதகநீரில் விழுந்தால் அவை கல்லாகிவிடும். அவ்வமயம், கடும் மழை பெய்தால், அந்த உதக நீரையும், அதனுள் கல்லாகிக் கிடப்பவைகளையும் அடித்து இழுத்துக் கொண்டு வந்து ஆறு ஓடைகள் முதலியவற்றில் மணலாகச் சேர்த்து விடும்.

உதகநீரில் , கணவேதி, ஒரு நாள் வேதி, இருநாள் வேதி, திரிநாள் வேதி, பஞ்சவேதி சப்தவேதி, சதவேதி, மாதவேதி மண்டலவேதி , அறுபதுநாள் வேதி எனப் பத்துவித வேதிகள் உண்டு.

இவற்றை அடையாளம் கண்டுபிடித்து அததற்குரிய பாத்திரங்களில் தக்க மந்திரங்களைச் செபித்து எடுக்க வேண்டும் . அண்டத்தில் உள்ள உதக நீர் பிண்டத்தில் உள்ள விவரம் பற்றிச் சித்தர் நூல்கள் மூலம் அறியலாம்.

1. கணவேதி உதகம்

இதுவெள்ளையாய்க் கருநீர்போல நுரைத்து பிசுபிசுப்பாயிருக்கும் இதில் ஒரு குச்சியை விட மூன்றே முக்கால் நாழிகைக்குள் உதகம் பட்ட வரையில் கல்லாகிவிடும், இதை எடுப்பதற்கு கீழ்க்கண்ட மந்திரத்தை 108 உரு செபித்து வரவும்.

'ஓம் ஸ்ரீ திரி நேத்திர சுவாகா !'

குதிரைவால் முடியில் பேய்ச்சுரைக்குடுக்கையைக் கட்டி அதில் உதகத்தை எடுத்து உடன் சிறிது அரிதாரத்தூளையிட உடனே சிவப்பதுடன்இதிலிருந்து சவ்வாது மணமும் வீசும்.

'உதசணவேதி கம் என அறிந்து பின் மருந்துகளில் கூட்டவும் ஒரு பூசணிக்காயைக் குச்சியினால் குத்தி அதனுள் இரசத்தை விட்டு மூடிக் குதிரைவால் மயிரில் கட்டி உதகத்திலிட்டு வைக்கக் கல்லாகும். அதை எடுத்துப் பொடித்து வங்க உருக்கு முகத்தில் சிறிது தூவக் குளிகையாகும், அதனை வாயிலிடக் கெவுனமுண்டாகும், இப்பூசணிக்காய்த்தூளைப் பணஎடை வீதம் தேனுடன் உண்டுவர ஆயுள் அதிகரிக்கும்.

2. 'ஒரு நாள் வேதி உதகம்'

இது புகையீரல் கழுவிய நீர் போல் பிசுபிசுப்பாய் இருக்கும் குதிரைவால் மயிரில் பேய்ச்சுரைக் குடுக்கையைக் கட்டி முன் கூறிய மந்திரம் செபித்து உதகம் எடுத்து அதில் சிறிது பெருங்காயத் தூளையிட்டு நுகர காயத்தின் மணமில்லாதிருப் பின்

' ஒரு நாள் வேதி உதகம் ' - என்று அறியவும்.

வில்வக் குடுக்கையில் இந்நீரை எடுத்து அதில் 3 கழஞ்சு இரசம் விட்டு ஒரு நாள் முழுதும் வைத்திருக்க இரசம் வெண்ணை போலாகும்.

அதனைக் குப்பியில் இட்டு மணல் மறைவுப் புடமிட உருகிக் குளிகையாகும். அதனை வாயிலடக்கக் கெவுனமுண்டாகும் (இக்குளிகையினால் பற்ப, செந்தூரச் சுண்ணங்கள் செய்தும் பயன்படுத்தலாம்)

3. 'இருநாள் வேதி உதகம்'

இது சாணித் தண்ணீர் போல் பிசுபிசுப்பாயிருக்கும், குதிரைவால் மயிரினால் பழைய தேங்காய்க் குடுக்கையைக் கட்டி முன் கூறிய மந்திரம் செபித்து உதகமெடுத்து மாம்பழச்சாறு விட்டுக் கலக்கி 2 நாள் சென்று நுகர மாம்பழ வாடை இல்லாதிருப்பின் "இருநாள் வேதிஉதகம்" என்று

அறியலாம். வில்வக் குடுக்கையில் உதகம் சிறிது எடுத்து அதில் சிறிது வெள்ளித் தூளையிட்டு 2 நாள் வைத்தெடுக்க மணல் போலாகும். இதனைக் கல்வத்திலிட்டுக் கரைத்துப் புடமிட்டுச் சுண்ணமாக்கி நெய்யில் குழைத்துண்ண உடல் சித்தி பெறும்.

4. "திரி நாள் வேதி உதகம்"

இது கரிசல் காட்டுத் தண்ணீர் போல் குழகுழப்பாய் இருக்கும். இதில் குச்சியை விட்டு 3 தினம் வைத்திருக்க நீர் பட்டவரை கல்லாகும்.

"**ஓம் சாம்பவி சங்கரி ரட்சிக்க சுவாகா**" -என 108 உருச் செபித்துச் செம்பினால் குடுக்கை செய்து குதிரைவால் மயிரில் கட்டி உதகமெடுத்துப் பெருங்காயத் தூளைச் சிறிது போட்டு நுகர காயத்தின் மணமற்று இருப்பின் திரி நாள் வேதி உதகம் என அறியவும். கூவிளங் குடுக்கையில் இரசம், வெங்காரம், திப்பிலி, கிராம்பு இவை வகைக்கு 1. கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு கூவிள மரத்துண்டால் வாயை மூடிக் குதிரை வால் மயிரில் கட்டி உதகத்திலிட்டு எடுத்து உலர்த்திச் சீலை மண் செய்து மணல் மறைவுப் புடமிட இரசம் கெவுனக் குளிகையாகும் இதனைப் பற்ப , செந்தூர , சுண்ணங்களாகவும் செய்யலாம்.

5. "பஞ்ச வேதி உதகம்"

இது மஞ்சள் கலக்கிய தண்ணீர் போலிருக்கும் இதில் குச்சியை விட்டு 5 நாள் வைத்திருக்க பொரிக்கல்லாகும். குதிரைவால் மயிரினால் இரும்புத்தகட்டுக் குடுக்கையைக் கட்டி பின் வருமாறு

"**ஓம் சங்கரி அஷ்டபுசங்கன்னி ரட்சிக்க சுவாஹா**"

என்று 108 உரு செபித்து உதகம் எடுத்து அதில் ஈர வெங்காயம் எடுத்து அரைத்துக் கலக்கி நுகர வெங்காயமணம் இல்லாதிருப்பின் பஞ்சவேதி உதகம் என அறியவும். இதில் பாஷாணங்கள் பற்பமாக்கலாம், அப்பிரகம், கந்தகம், இரசம் கருங்காலிப்பட்டை இவை வகைக்கு 1 கழஞ்சு தூளை உதகநீர் விட்டுப்பிசைந்து குமட்டி, மாதுளம் பழச்சாற்றிலரைத்துக்

குகையில் இட்டுச் சீலைமண்செய்து கிளுவைக்கரிபோட்டு உருக்க குளிகை போலாகும். இதில் சிறிதளவு செம்பிலிட ஏழுவயதும் வெள்ளியிலிட 10 வயதும் ஆகும்.

6. " சப்த வேதி உதகம் "

இது சிறிது சிவப்பாயிருக்கும் இதில் குச்சியை விட்டு 1 வாரம் வைத்திருக்கக் கல்லாகும். குதிரை வால் மயிரில் பேய்ச்சுரைக் குடுக்கையைக் கட்டிப்பின்வரும் மந்திரத்தை 108 உரு சொல்லவும்.

" ஓம் பைரவி பிசாசு நாடர்மல் கட்டு கட்டு சுவாஹா "

உதகம் எடுத்து அதில் வேப்பெண்ணை விட்டு நுகர அதன் மணம் இல்லாதிருப்பின் சப்த வேதி உதகம் என்றறியவும் இதில் பாஷாணங்களை அரைத்துச் செந்தூரம் முதலியன ஆக்கலாம் வெள்ளாட்டுக் கொம்புக் குழாயில் சிறிது உதகநீர் விட்டு மேலே ஒரு கழஞ்சு சூதம் விட்டு அதன் மேல் மீண்டும் உதகம் விட்டு அது குளிகை ஆகும் வரை வெய்யிலில் வைத்து எடுக்கவும் அக்குளிகையில் சிறிது எடுத்து வங்கம் 1 கழஞ்சு எடுத்து உலையில் வைத்து உருக்கு முகத்தில் கொடுக்கச் சுரபிக் குளிகையாகும் இக் குளிகையை வாயிலிட கெவுன சித்தியுண்டாகும்.

7. தசவேதி உதகம்

இது அழுகிக்கிடக்கும் சகதித்தண்ணீர் போலிருக்கும். இதில் இட்ட குச்சி 10 நாளில் கல்லாகும் குதிரைவால் மயிரில் விளாங் குடுக்கையைக் கட்டி முன் கூறிய மந்திரம் செபித்து உதகம் எடுத்து அதில் ஒரு எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு 10 நாள் கழித்து நுகரப் பழவாடை இல்லாதிருப்பின் தசவேதி உதகம் என அறியவும். இந்த உதக நீரைச் செம்புக் குடுக்கையில் ஊற்றி அதில் வெண்பாடாணத்தை இட்டு 10 நாள் சென்று பார்க்க பாடாணம் நைந்து குருமணல் போலிருக்கும் இதை 10 எருவில் புடமிடச் சுண்ணமாகும் இதனை நெய்யுடன் சாப்பிட காயசித்தியுண்டாகும்.

8. " மாத வேதி உதகம் "

இது சிறிது மஞ்சள் நிறமுடன் குழகுழப்பாய் இருக்கும் இதிலிட்ட குச்சி 1 மாதத்தில் சொரிக் கல்லாகும். குதிரை வால் மயிரில் இரும்புக் குடுக்கையைக் கட்டி

" ஓம் கங்காளி கருணாகரி பேய்பிசாசு நாடாமல் காக்க சுவாஹா"

என்ற மந்திரத்தை 108 உரு செபித்து உதகம் எடுத்து அதில் வசம்புத் தூளையிட்டு நுகர அதன் மணம் இல்லாதிருப்பின் மாத வேதி உதகம் என அறியவும். இதில் பாடாணங்களைச் சுண்ணமாக்கலாம். தோல் நீக்கிய மஞ்சள் கிழங்கை அழிஞ்சில் குச்சியில் குத்தி உதகத்தில் இட்டுக் கல்லானவுடன் எடுத்துப் பொடித்துக் கொண்டு நாக உருக்கு முகத்தில் சிறிது சிறிதாய் தூவி வரச் சிவந்து பத்து வயதாகும்.

9. " மண்டல வேதி உதகம்"

இது சிறிது பச்சை நிறமுடன் பிசுபிசுத்து இருக்கும், நுரைத்தும் இருக்கும், இதிலிட்ட குச்சி 1 மண்டலத்தில் கல்லாகும், செம்புக் கம்பியினால் பேரண்டத்தைக் கட்டிப் பின் வரும் மந்திரத்தை

" ஓம் சுடலையாடி கோமேஸ்வரி காக்க சுவாஹா"

என்று 108 உரு செபித்து உதகமெடுத்து அதில் வெற்றிலைச்சாறு விட்டுப்பார்க்க அது முறியாதிருப்பின் மண்டல வேதி உதகம். இதில் பாடாணங்களைப்பறபம் முதலியன ஆக்கலாம் நரிவிளங்காய் சிறு குடுக்கையில் 5 கழஞ்சு இரசமும் 1 கழஞ்சு கெந்தகமும் விட்டு மேற்கட்டையால் வாயைமூடிக் குதிரைவால் மயிரில் கட்டி உடன் கள்ளிக் கொப்பும் கட்டி உதகத்திலிட்டுக் கள்ளிக் கொப்பு நிறம் மாறினால் இரசம் கட்டிக் குளிகையாகும் அதனை வாயில் இட கெவுனமுண்டாகும், நரை திரை மாறும்.

10. " அறுபது நாள் வேதி உதகம் "

இது சிறிது கருப்பு நிறமுடன் வழுவழுப்பாய் இருக்கும். இதில் இட்ட குச்சி 60 நாளில் கல்லாகும். செம்புக் கம்பியினால் இரும்புக் குடுக்கையைக் கட்டி.

' ஓம் பராபரி பராசக்தி காக்க சுவாஹா' -என்று 108 உரு செபித்து உதகம் எடுத்து அதில் வசம்புத் தூளையிட்டு நுகர அதன் மணம் இல்லாதிருப்பின் 60 நாள் உதகமென அறியவும். இதில் பாடாணங்களைச் செந்தூரம் முதலியன ஆக்கலாம். கருங் காணப்பயிரை உதக நீர் விட்டு அவித்து 32 பங்குகளாக்கித் தினம் 1 கூறு வீதம் காலையில் உண்டு வர காயசித்தியாகும், யானையின் வலிமையுண்டாகும்.

'உதகநீரின் பொதுப்பயன்கள்'

1. பச்சை மஞ்சட் கிழங்கை உதகநீரிலிட்டுக் கல்லானபின் எடுத்துப் பொடித்து 10 கழஞ்சு பொடிக்கு 1 கழஞ்சு இரசம் உதகம் இருந்த இடத்து மண் 1 கழஞ்சு கூட்டி உதகநீர் விட்டு அரைத்து உருட்டி உலர்த்தி சிறு கலயத்தில் விட்டு உதகத்திலிட்டு வைக்க கல் குளிகையாகும். அதனை வாயிலடக்க கவுனமார்க்கமாய்ப் போய் வரலாம். மேலும் இக்குளிகையைப் பணவெடை வெள்ளி உருக்கி முகத்தில் கொடுக்கப் பத்து வயதாகும்.

2. மேற்படி மஞ்சட் கிழங்கைப் பொடித்து வெருகடியாகத் தேன் கூட்டியுண்டுவர உடல் பொன்போலாகி யானையின் வலுவுடன் இருக்கலாம், பச்சரிசியும் பாசிப்பயறும் கூட்டிச் சமைத்துண்ணவும், காலை, மாலை பசும் பால் அருந்தவும் காலை மாலை வெய்யிலைத் தவிர்க்கவும்.

3. வாழைக்காயைக் குடைந்து உள்ளே துத்தநாகமும், இரசமும் வகைக்கு 1 கழஞ்சு வைத்துக் கலயத்திலிட்டு மேல் மூடி 3 நாள் உதகத்திலிட்டு வைக்கக் கல்லாகும் அதனைப் பொடித்து செம்பு உருக்கு முகத்தில் பழுக்கும் வரை தூவி வரப்பத்து வயதாகும்.

4. சாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, கெந்தகம் இவை வகைக்கு 1 கழஞ்சு கூட்டி உதகம் விட்டரைத்து உருண்டையாக்கி கலயத்தில் இட்டுக் குதிரை வால் மயிரில் கட்டி உதகத்தில் இட்டு வைக்கக் கல்லாகும் அதனைப்பொடித்து வெள்ளி உருக்கு முகத்தில் சிவக்கும் வரை தூவிவரப் பத்து வயதாகும்.

5. சிறு பூசணிக்காயைத் துளைத்து 10 பலம் இரசமும் 1 பலம் கந்தகத்தூளும் போட்டுக் காயினால் மூடி மேலே செம்புக் கம்பியினால் கட்டி உதகத்தில் இட்டு வைக்க காயும் இரசமும் கல்லாயிருக்கும். இரசத்தை மட்டும் எடுத்துப் பொடித்து வெள்ளீயத்தை உருக்கு முகத்தில் தூவிவர வெள்ளியாகும்.

6. அந்த வெள்ளியை உருக்க உருக்கு முகத்தில் போட்டு இரசக் கல்லின் பொடி வழிந்து தெரித்து கீழே விழும். அதை எடுத்துப் பாலில் கலந்து வாயிலடக்கக் கெனமுண்டாகும்.

7. அந்த கல்லான பூசணிக்காயுடன் 1 கழஞ்சு கோரோசணை கூட்டிப் பொடித்து நல்லெண்ணெய் புனுகு, சவ்வாது விட்டரைத்து மையாக்கித் திலகமிட எதிரிகளின் பாணப்பிரயோகம் முறிந்து போகும். எந்த மிருகமும் அருகில் நெருங்காது.

8. உதகத்திலுள்ள மணலை எடுத்து உலர்த்தி முறையே பன்றிநெய் சூதம் வெள்ளாட்டு நீர், தேன் இவற்றில் கலந்து அரைத்து உருட்டி உலர்த்தி சிறு கலயத்திலிட்டு செம்புக்கம்பியினால் கட்டி உதகத்தில் 3 தினம் வைத்தெடுத்துக் கல்வத்திலிட்டு குதிரைக்குளம்புத் தூளையிட்டு அரைத்துக் குகையிலிட்டு வெங்காரமிட்டு உருக்கச் செம்பாகும்.

9. அந்தச் செம்பைத் தகடாக்கிப் புல்லாமணக்கை அரைத்துக் குகை செய்து உலர்த்தி அதனுள் வைத்துப் பன்றி நெய்யும் வெங்காரமும் இட்டு உருக்கவும். இப்படி 2 முறை உருக்கி எடுக்கக் குளிகையாகும் இத்துடன் 10 பணவெடை செம்பும் 5 பணவெடை வெள்ளியும் கொடுத்து உருக்கச் சிவந்து பத்து வயதாகும்.

10. இரு கழஞ்சு இரசத்தைக் கல்வத்தில் இட்டு உதகநீரில் அரைத்து உலர்த்தவும் இப்படி இரு மாதம் வரை உதகநீர் விட்டரைக்க ரசம் மாப்போலாகும் அதற்குச் சமனெடை வங்கமிட்டு உருக்கக் குளிகையாகும், இக்குளிகையை வாயிலிடச் சகல ஆயுதமும் உடலில் பாயாது, சங்காரருத்திரனாவான் உடல் பொன்னிறமுடன் யானையின் வலுவுண்டாகும்.

மேற்கூறிய உதகநீர் வேலைகளை மழைக் காலங்களில் செய்யலாகாது. பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் தான் செய்ய வேண்டும், மண்குடங்களில் உதகநீரை எடுப்பின் பயன் இராது. மற்றும் மலைகளுக்குச் செல்ல விழைபவர்கள் குருபக்தி, தெய்வ பக்தியுடன் அவரவர் முறைப்படி இஷ்ட தெய்வத்தைப்பூசித்தும் , தேவ, முனி, ரிஷி சித்தர்களைத் துதித்தும் திரியாக்ஷரம், பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம், முதலிய மந்திரங்களில் ஒன்றைத் தியானித்தும் சுத்தியாகச் செல்லவேண்டும். மது, மாமிசங்களை நீக்கி அதனதற்குரிய மந்திரங்களையும் பூசை வழிபாடுகளையும் ஒழுங்கு தவறாது செய்து எடுப்பதே பயன்தரும்.

இங்ஙனம் மூலிகை, உதகம், முதலிய வகைக்குச் செல்பவர்கள் தனியே செல்லாமல் உத்தம சீடர்களையோ உயிர் தோழர்களையே.ா உடன் அழைத்துச் செல்லவேண்டும் மேலும் யோகாப்பியாசத் திடமும் வேண்டும். கற்பங்களை உண்ணநினைப்போர் தற்கால அளவுப்படியும் உடல் நிலைக்கு ஏற்பவும் எள்ளளவும் பத்தியம் பிசகாமலும் கையாள வேண்டும் இத்தனை விதிமுறைகளையும் ஒழுங்கபடக் கையாண்டாலும் முதல் சித்தனின் அருளும் தேவை என்பதை அறிந்து அதற்கேற்ப செயலாக்கி சித்தர்கள் நிலை அடையவும்.

அழுகண்ணி

திருநெல்வேலி மாவட்டத்தின் வள்ளியூருக்குத் தென் திசையில் இங்கிலாச பர்வதம் என்ற பெயரில் ஒரு மலை உள்ளது. அம் மலைக்கு வடகிழக்கில் கூப்பிடு தூரத்தில் பல வகை மரம் செடி கொடிகள் பல சூழ்ந்த கந்தன்காவும் அதன் நடுவில் வெள்ளைப்பாறை என்ற ஒரு மேடும் இருக்கிறது அந்த மேட்டில் நின்று பார்த்தால் வள்ளியூரும், பின் முருகன் ஆலயமும், குளமும் தெரியும். இதே மலையில் குறவர்கள் கும்பிடும் குமரனின் பீடமும் உள்ளது. இம்மலைக்கு வடமேற்கு மூலை மலைச்சரிவில் கணநாதர் ஆசிரமமும் அதன் வடபுறத்தில் கசிவுத்தரையில் ' ருதந்தி ' எனும் "அழுகண்ணி " என்று ஒரு வகை மூலிகையுண்டு, இதில் வெள்ளை , கருப்பு,

சிவப்பு, மஞ்சள் என நான்கு வகையுண்டு. இவை நான்கும் நலம் பயக்கும் இதன் இலைகள் கணப்பு இலைபோன்றும் , அவற்றிலிருந்து நீர் சொரிந்து கொண்டும் இருக்கும், இதன் இலைகளைப் பூர்வ பக்ஷம் சுபதினத்தில் பின்கண்ட

'வாமதேவி . வயிர தேவி' என்று 16 உரு செபித்துப் பிடுங்கிச் சூரணித்துக்கொண்டு வெருகடி யளவு வீதம் தேன், நெய், பால் சேர்த்து 1 மண்டலம் உட்கொள்ள நரை, திரை நீங்கி, கற்பகோடி காலம் வாழலாம் உப்பு, புளி நீக்கி காற்றிலும் வெயிலிலும் போகாமல் பத்தியமாக இருக்கவேண்டும் இதன் முழுவிவரத்தை போகர் கல்பம் 300 என்ற நூலில் காணலாம்.

' தொழுகண்ணி'

மேற்படிக் கசிவுத் தரையினின்றும் அரை நாழிகை தூரம் சென்றால் சித்தர் மலையுள்ளது. இம்மலைக்குத் தென்புறத்தில் உள்ள சிவானந்தர் ஆசிரமத்திற்கு மேற்பக்கமுள்ள கசிவுத்தரையில்

' தொழுகண்ணி' ச் .செடிகளைக் காணலாம், இதன் இலைகள் அழுகண்ணி இலைகள் போன்றும் சிறிது நீளமாயும் இருக்கும். தண்டு சிறிது கருத்திருக்கும், சூரியன் இருக்கும் திசையில் திரும்பி நிற்கும் , தொழுகண்ணிச்செடியின் சமூலமும், நுணாவேரும் சமன் கூட்டி அரைத்துப் பாதி விழுதை 1 குகையுள் வைத்து அதன் மேல் கந்தகத்தை வைத்து அதன் மேல் பாதிவிழுதை அதை மூடி உலையில் இட்டு உருக்கச் செம்பாகும், இந்தச் செம்பை லோகத்திற்குக் கொடுக்க. பேதிக்கும், அதையே செந்தூராமாக்கிச் சாப்பிட காயசித்தியாகும்.

தொழுகண்ணி, அழுகண்ணி, கொட்டைக் கரந்தை இலைகளைச் சமனாகச் சேர்த்துச் சூரணித்துக் கொண்டு வெருகடி அளவு வீதம் 1 மண்டலம் காட்டிற்குள் இருந்தும் பத்தியம் காத்தும் சாப்பிட நரை, திரை மாறும், 2 மண்டலம் கொள்ள யானையின் வலிவுடன் 300 வயது வரை வாழலாம் முழு விவரம் புலஸ்தியர் கல்பம் 300 என்ற நூலில் காணலாம்.

கணை எருமை விருக்ஷம்

மேற்படிக் கசிவுத் தரையின் பாதையில், சென்றால் ஒரு மனிதன் படுத்திருப்பது போல் ஒரு பாறையும், அதன் அருகிலேயே தலையற்ற சிலைபோல் ஒரு கல்லும் உண்டு, அக்கல்லினுள் மதியமான் என்ற மன்னன் புதைத்து வைத்த செல்வங்கள் உண்டு, வைரவன் காவல் இருப்பதால் அச்செல்வங்களை எப்படியும் அடைய முடியாது, அதன் வடபுறமுள்ள சூரியானந்தர் ஆசிரமத்திற்கு அருகில் '**கணை எருமை விருக்ஷம்**' உள்ளது.

இம்மரத்தை வலமாகச் சுற்றிவந்து கல்முனையில் குத்தினால் பால் வடியும், அதனைச் சிரட்டையில் பிடித்துக் கொண்டு தேன்கூட்டி உட்கொள்ள 33/4 நாழிகைக்கு மூர்ச்சையுண்டாகும், நாழிகைக்கு 1 முறைவீதம் தேனும் பாலும் கலந்து கரண்டியினால் கொடுத்து வர மூர்ச்சை தெளியும். இதன் மூலம் நரை திரை மாறிக் கல்ப உடலுடன் 1000 ஆண்டுகள் வாழலாம்

—சட்டைமுனி கல்பவிதி 101 —

" தில்லை விருக்ஷம் "

மேற்படித் தலையில்லாத சிலையைக்கடந்து வடக்கே போகும் பாதையில் சென்றால் வடகிழக்கில் செண்பகநாதன் காவு உள்ளது. இதன் மத்தியில் சொரூபானந்தர் ஆசிரமமும் அதன் அருகில் " தில்லை விருக்ஷம் " என்னும் முகம் வீங்கி மரமும் உள்ளது, இது கருப்பு நிறமாயும், கிளைகள் சாம்பல் வண்ணத்துடன் சிறியதாயும் , இலைகள் அத்தி இலைகள் போன்றும் உண்டு, இதன் பாலை அரைக்காற்படியளவு கைபடாமல் எடுத்து, அதில் தாமிரத் தகட்டைப் போட்டு 1 மண்டலம் வரை வைத்து எடுத்தபின் வீரம், பூரம் சேர்த்து மேற்படி மரப்பாலால் அரைத்து அந்தத் தகட்டிற்குக் கவசம் செய்து குக்குடபுடமிடச் சுண்ணமாகும், இந்தத் தாம்பிரச் சுண்ணத்தை நெய்யில் குழைத்து 3 நாள் உட் கொள்ள யானை வலுவுடன் காய சித்தி பெறலாம்-

—கருவூரார் வாத காவியம் 700.

நாள் வேதி உதகம்

மேற்படி செண்பகநாதன் காவுக்கு வடமேற்குத் திசையில் ஒரு மண்மலையும், அம் மலைக்கு மேற்புறம் தக்ஷிணாமூர்த்தி ஆசிரமும் உள்ளது. அதற்கு வடக்கில் அடுப்பு கூட்டியது போல்

மூன்று பாறைக் கற்களும், அதன் நடுவில். தண்ணீர் சுனைபோன்று " நாள் வேதி உதகம் " உள்ளது. அதில் இறங்கித் தண்ணீரைத் தொட்டால் உதகநீர்பட்டதும் கல்லாகி விடும் கரையின் ஓரம் உதகநீர் பட்டதால் கல்லாகிக் கிடக்கும் ஒரு மனிதனையும், நீரை அருந்தியதால் கல்லாகிக் கிடக்கும் ஒரு கொக்கையும் காணலாம், அதன் வாயிலாய் சுனையை அறிந்து கைப்படாமல், அகப்பையினால் சுனையின் மண்ணை எடுத்து வந்து காயப்போட்டு ஒரு குகையிலிட்டு 20 முறை புடமிட்டுப்பின் ஊதி எடுக்க அதன் சத்துக் கிடைக்கும். அதனைக் கல்வத்தில் இட்டு அரைத்துப் பசுவின் பாலில் கலக்கி மும்முறை சாப்பிட நரை, திரை மாறி அழியாத உடலையும் வலுவையும் பெறலாம்.

யோக ஞான சாஸ்திரத்திரட்டு 2 ஆம் பாகம்.

" சதுர மரம்"

மேற்படி உதக சுனைக்கு வடக்கே போகும், பாதையில் 1 நாழிகை தூரம் சென்றால் ஒரு பெரிய வனமும் அதன் நடுவில் ஏகநாதர் ஆசிரமமும் இதற்கு வடபுறத்தில் குஷ்டக்காரன் கல்லும் இருக்கின்றது அதன் அருகில் 'சதுரமரம்' உள்ளது இதன் இலைகள் தடித்து முறப்பாக இருக்கும் கதிர் வாங்கிப் பூக்கும் பட்டையை வெட்டினால் பால்வடியும். அப்பால் வீசம் படி எடுத்து வெள்ளைப் பாஷாணத்திற்கு சுருக்குக் கொடுக்கக் கட்டும் செம்பூத் தகட்டைப் பழுக்கக் காய்ச்சி சதுரமரப்பாலில் ஏழுமுறை சுருக்குக் கொடுத்த பின் கரி ஓட்டில் வைத்து ஊத ஏழரை வயது மாற்றாகும். அதைச் செந்தூரமாக்கித் தினம் 2 வேளை 8 நாட்கள் உட்கொள்ளக் காயசித்தியாகும்.

—சூலாங்கி நாதர் ஞானவிந்த இரகசியம் -30

'சத்த வேதிக் கற்கள்'

மேற்படிக் குஷ்டக்காரன் கல்லுக்கு நேர் வடக்கே செல்லும் பாதையில் இரண்டு நாழிகை தூரத்தில் பாதை இரண்டாகப் பிரிகின்றது மேற்கே போகும் பாதை மலையாளத்திற்குச் செல்லும். அதைத் தவிர்த்து வடக்குப்பாதையில் சென்றால் ...

நாழிகை தூரத்தில் ' களக்காடு மலை' வரும் அங்கிருந்து கிழக்கே நோக்கினால் களக்காட்டூர் தெரியும் அதே வழியில் சிறிது தொலைவில், பெரிய வனமும் அதனுள் மதிசிலமாமுனிவரின் ஆசிரமும் உள்ளது அதனருகில் ' சத்த வேதிக் கற்கள்' கிடைக்கின்றன அது உரித்த தேங்காய்போல் கருப்பாய் இருக்கும் அதனை எடுத்து காடாக்கினியாக மூன்று நாள் எரித்துப்பின் அதில் தண்ணீர் விடக் கற்கள் துண்டு துண்டாக உடையும். அதனை மாவாக்கிப்பின் அமுரிவிட்டரைத்து உலோகங்களுக்குக் கவசித்துப் புடமிட களிம்பு நீங்கும். இப்படிக் களிம்பு நீங்கிய செம்புக்குச் சமனெடை தாய் சேர்த்து உருக்க 7 மாற்றாகும்

— காலாங்கி ஞானசாத்திரத்திரட்டு.

" தும்புலா மரம்"

மேற்படிக் காட்டு மலைக் கானலுக்கு வடகிழக்கில் மூன்று நாழிகை தூரத்தில் வானளாவிய தீர்த்த மலையும் அதில் விழும் ஐந்து அருவிகளும் தெரியும் மேலே ஏறி அருவியின் வீழ்ச்சியை காண்பதற்கு எவ்விதப் பாதையும் இல்லை அருவிகளில் ஒன்றாகிய வான தீர்த்தத்திற்கு அருகில் சொரிமுத்தையன் ஆலயமும் அதன் அருகில் நீலகண்ட ரசமும் இருக்கிறது இதில் ஆள் இறங்கினால் உள்ளே இழுத்துச் சென்றுவிடும். அதனைக் கடந்து கீழே வரும் பாதையில் வந்தால் ' கல்யாணி தீர்த்தமும்' அங்கிருந்து அரை நாழிகை தூரத்தில் பெரிய கானலும் அதன் நடுவில் அகத்தியர் யாகம் செய்த நான்கு யாக குண்டங்களும் உள்ளது. இந்தக் கோவிலின் முன் ஓடும் பாபநாச நதியில் மூழ்கினால் முன்செய்த பாவங்ககள் யாவும் தீரும். இந்த நதியில் அகத்தியர் யாக குண்டத்தில் பிறந்த தொடையளவான கெண்டை மீன்கள் நீந்துகின்றன. அம்மீன்களைப் புசிப்பவர் கண்குருடாகி விடுவர் என்ற சாபம் இருப்பதால் அச்சம் கொண்டு எவரும் அவற்றைப் பிடிப்பதில்லை அம்மீன்கள் ஆற்றுப்படித்துறையில் வந்து படுத்துக் கொள்ளுமாம், அதனைக் காண்பவர்கள் அளிக்கும் பொரி கடலை போன்றவற்றையும் உண்ணும், நதியில் எவ்வளவு நீர் ஓடினாலும் மீன்கள் படித்துறையை விட்டு மறுபுறம் செல்லாது

இம்மீன்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன. இங்கிருந்து தென்புறம் வந்த வழியே மூன்று நாழிகை தூரத்தில் ஐந்தருவியும் , அதன் வடமேற்குப் பாதையில் நான்கு நாழிகை தூரத்தில் " வராகிமலை" யுள்ளது மலையடிவாரத்தில் செம்மண்தரையில் "தும்புலா மரம்" உள்ளது. இது சேங்கொட்டை மரம் போல் இலைகளுடன் இருக்கும் இம்மரப்பட்டையை வெட்டினால் பால் வடியும் அந்தப்பாலைப் பீங்கானில் பிடித்து அதில் சூதத்தை விட்டு வெய்யிலில் வைக்க வெண்ணெய் போல் மாறும் அதனைச் செந்தூரமாக்கிச் சாப்பிட நரை திரை மாறிக் காயசித்தி பெறலாம்.

— சதுரகிரிப் புராணம்.

"காட்டாமணக்கு மரம்"

முன் கூறிய வராகி மலையின் தென்புறம் செல்லும் வழியில் அரை நாழிகை தூரத்தில் மரம், செடி, கொடி களடர்ந்த வனத்தின் மேல் பக்கம் ' கம்பளி நாதன்' ஆசிரமம் உள்ளது. அதன் வடபுறம் கூப்பிடு தூரத்தில் உதகச் சுனையும் உள்ளது. அங்கு ஒரு மனிதன் நீர் அருந்தியதால் கல்லாகிக் கிடப்பதைக் காணலாம். இதற்கு மேல் புறம் செல்லும் பாதையில் கூப்பிடு தூரத்தில் ஒரு குண்டாறு ஓடுகிறது அந்த ஆற்றைக் கடந்து வடபுறம் 1 நாழிகை தூரத்தில் மண்கண்டமான இடத்தில் 'காட்டாமணக்கு மரம்' நிறைய உள்ளது அதன் கொம்பு முனைகளை ஒடித்தால் வடியும் பாலைக் கோப்பையில் பிடித்து அதில் வீரத்தைப்போட்டுப் பிசறி வெய்யிலில் வைக்க வெண்ணை போலாகும் அந்த வெண்ணெயைக் குகையினுள் வைத்து மணல் மறைவுப்புடமிட பற்பமாகும். அதனை உட்கொள்ள நரைதிரை மாறி யானைவலுவுடன் காயசித்தியாகும்.

— உரோமரிஷி சாத்திரம் 500

அரி நெல்லி மரம்

அந்த வராகி மலையின் வடபுறம் செல்லும் வழியில் நான்கு நாழிகை தூரத்தில் ' புலத்தியர் ஆசிரம ' மும் அதற்கு மேல் பக்கம் ஒரு காட்டாற்றிற்குக் கீழ்புரம் அரிநெல்லிமரம் உள்ளது நெல்லி

மரத்தைப் போலப் பெரியதாயும் எலுமிச்சம்பழ அளவு காய்களையும் உடைய இம்மரத்தின் கனிகளை வாயிலிட துவர்ப்பும், இனிப்புமுடன் சிறு கொட்டையும் காணும். இந்நெல்லிக்கனியை இடித்து 1 படிச்சாறு பிழிந்தெடுத்து அதில் சூதத்தைவிட்டு அடுப்பிலேற்றி சாறு வற்றுமட்டும் எரிக்க இரசம் வெண்ணெய் போலாகும். இதனைக் குப்பியிலிட்டு, வாயைப் பழுப்புக்கல்லால் மூடி மண்ணுக்குள் புதைத்து 20 எருவில் புடமிட குப்பியின் வாய்க்குள் செந்தூரம் வந்து நிற்கும். இச் செந்தூரம் 12 நாள் அரிசி எடை வீதம் தினமிரு வேளை தேனில் குழைத்துச் சாப்பிட்டுவர நரை திரை நீங்கி யானையின் வலுவுண்டாகும்.

– யாகோபு சிந்தாமணி .700

ஆச்சாமரம்.

மேற்படிக் காட்டாற்றுக்கு வடக்கே செல்லும் பாதையில் நான்கு நாழிகை தூரத்தில் 1 குட்டமும் அதன் வடபுறமும் 'திரிகாலக்யான முனிவர்' ஆசிரமமும், அதற்கு மேற்புறம் யானைபடுத்திருப்பது போன்ற இரு கற்களும் அதன் நடுவில் இரண்டு அடி அகலத்தில் திரிவேதி உதகச்சுனையும் உள்ளது இந்தக் கற்களுக்கு வடமேற்குப் பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் குற்றாலமலையும் பாபநாசமலையும்' கூடுமிடத்தில் உள்ள சிறிது கரிவான பாதையில் குற்றால மலை மீது ஏறினால் மலையின் மொட்டையான மேல் புறத்துக்குச் செல்லலாம். இந்தப் பாறையின் பாதையில் நான்கு நாழிகை தூரத்தில் உள்ள அருவி மலைக்கு வடக்கே செல்லும் பாதை குற்றால மலைக்கு மேற்புறச் சரிவிற்குச் செல்கிறது அருவி மலைச் சரிவின் வழியே கூப்பிடு தூரத்தில் ஒரு பெரிய மலையும் அம்மலையின் கீழ்ப்புறம் 'தேனருவி தீர்த்தமும்' உள்ளது. இத்தீர்த்தத்தில் மூழ்க பாவங்கள் போகும் இத் தீர்த்தத்தின் மேற்புறம் சிறிது தொலைவில் 'ஆச்சாமரம்' உள்ளது. இம்மரத்தின் அடி பெரியதாயும் வெண்மையாயும் இலைகள் இருவிரல் அகலமாயும் இருக்கும், இம்மரத்தைக் கல்லினால் தட்டி வடியும் பாலைச் சேகரித்து துருசுக்கட்டிக்கு 10 முறை சுருக்குக்

கொடுக்க வெண்மையாகும் இந்தத் துருசு கட்டியைச் செந்தூரமாக்கி உட்கொள்ள நரை, திரை மாறிக் காயசித்தியாகும்.

— சட்டைமுனி காவிய சாத்திரம்

'சரள தேவதாரு மரம்'

தேனருவிக்குக் கீழே கூப்பிடு தூரத்தில் செம்பாநதி தீர்த்தமும் அதனருகில் செம்பாதேவியின் இருப்பிடமும் உள்ளது. இதற்குக் கீழே இறங்கினால் குற்றால நாதன் ஆலயமும் அதே வழியில் குற்றாலநாதன் சன்னதியும் அதற்குத் தென்புறம் எக்காலமும் வீழ்ந்து கொண்டுள்ள அருவியும் உள்ளது. இந்த அருவியில் குளிக்கப் பாவங்கள் தீரும் . இதில் இறங்கினால் ஆளை உள்ளே இழுத்துச் சென்று விடும். அருவியின் அருகிலேயே யானைக்கசம் உள்ளது. எனவே அதனைத் தாண்டி கோவிலின் மேற்புறம் உள்ள பாதையில் மலையின் மீது ஏறித் தேனருவிக்குச் சென்று அங்கிருந்து வடக்குப் பாதையில் கூப்பிடு தூரத்திலுள்ள குண்டு மலையும் அவ்விடத்திலுள்ள அருள் சித்தர் ஆசிரமத்தையும் கண்டபின் அதற்கு வடக்கே செல்லும் பாதையில் நான்கு நாழிகை தூரத்தில் ஒரு பாதை மேற்கிலும் ஒரு பாதை வடக்கிலும் செல்லும் இதில் மலையாளம் செல்லும் மேற்குப் பாதையை விடுத்து வடக்குப் பாதையில் செல்ல ஒரு காவும் அதன் வடபுறத்தில் " கவுனக்குளிகைச் சித்தர்" குகையும் உள்ளது . இக்குகையினருகில் வடபுறத்தில் ' சரளத் தேவதாரு மரங்கள் ' உள்ளன. இதன் இலைகள் தேவதாரு இலைகள் போன்றும் மரத்தின் அடி வெண்மையாகவும், மரம் ஓங்கி வளர்ந்தும் மலர்கள் மணமுடன் இருக்கும் இந்த இலைகளின் சாற்றினால் 10 முறை வெண் பாஷாணத்திற்குச் சுருக்குக் கொடுத்து அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து 20 எருவில் புடமிட பற்பமாகும். பற்பத்தைத் தேனில் குழைத்துண்ண (8 நாள்) நரைதிரை மாறிக் காயசித்தி பெறலாம்

— சதுர கிரிப் புராணம்.

சோதிவிருக்ஷம்

மேற்படிச் சித்தர்குகைக்கு வடக்கே 2 நாழிகை தூரத்தில் 'செங்கோட்டை மலையும்' மலைக்கு வடக்குப் பாதையில் 1

நாழிகை தூரத்தில் உள்ள காட்டினுள் 'இராசரிஷி' ஆசிரமமும் உள்ளது. அதற்குத் தென்புறம் ஓடும் குண்டாற்றின் அருகில் சோதி விருக்ஷம் உள்ளது. இதன் அடி பெரிதாயும் இலை வட்டமாயும் மலர் மத்தம் பூவைப் போல் சிறியதாயும் காய் கொன்றைக்காய் போல் இருக்கும். மரத்தை வெட்டினால் பால் வடியும் சந்திரன் மறைந்துள்ள இருட்டு இரவில் மரத்தின் மீது மின்மினிப் பூச்சிகள் ஒட்டியுள்ளது போல் ஒளிமயமாய் தோன்றும். அம் மரத்தினடியில் நின்று கொண்டு

'அரியும் கிலியும் கழுகாய நம' - உரு 1008 செபித்துக் கன்னிநூல் காப்புக் கட்டிப் பச்சரிசிப் பொங்கல் இட்டுத் தேங்காய் பழம் உடைத்து தூபதீபம் கொடுத்து மரத்தின் மேற்புரணியைச் சீவிவிட்டுப் பட்டையை வெட்டிக் குழித்தைலமிறக்கி அதை இரும்புப் பாத்திரத்திலிட்டுக் காய்ச்சி வந்த பதத்தில் இறக்கி மண்பாண்டத்தில் இட்டு வேடு கட்டி 8 நாள் நெல்லுக்குள் புதைத்து வைத்திருந்து பின் எடுத்து 4 நாட்களுக்கு முன்றயே, 1, 2, 3, 4 கழஞ்சு வீதம் சாப்பிடவும். இதனை உட்கொண்டவுடன் மூர்ச்சையுண்டாகும். மயங்கியவுடன் படுக்க வைத்து 2 கால் பெருவிரல்களையும் சேர்த்துத் துணியினால் கட்டிக் கைகளை இருபுறமும் போட்டு வைத்து வாழைப்பழமும் நெய்யும் கூட்டிப் பிசைந்து ஊட்டி விட்டுப் பசுவின் பாலையும் வாயினுள் விட்டுவர ஏழாம் நாள் மயக்கம் நீங்கிக் கண் விழிப்பான் அவ்வமயம் பசுவின் பாலைக் காய்ச்சிப் பனங்கற்கண்டு கூட்டி சேர்த்து அருந்தச் செய்யவும் பின்னர் பாசிப்பயிறும் பச்சரிசியும் சேர்த்துச் சமைத்து உண்டுவர உடல் சோதியுடன் ஒளிபெறும் நீரும் மலமும் பேதிக்கும். இதே சோதி விருட்சத்தின் பாலை துணியில் நனைத்துக் காய வைத்துத் திரியாக்கி ஒரு அகலில் நெய் தீபம் ஏற்றிப் புத்தோட்டில் மைபற்ற வைத்து எடுத்துச் சிமிழில் பத்திரப்படுத்திக் கொண்டு பஞ்ச லோகங்களில் தடவிப்புடமிடப் பழுத்த பத்து வயது மாற்று ஆகும்.

இச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தத்தமது மத ஆசாரப்படி வழிபடுபவர்களாயும், அமைதியும், மன உறுதியும், வாசியும் தூய உடலும், ஏதேனும் ஒரு தியானமும்

உடையவர்களாக இருப்பது அவசியம் எனவும் மேற்படி விவரத்தைச் சுந்தரானந்தர் குரு நூல் 110 கூறுகிறது.

கருவாழை மரம்:

மேற்படிக் குற்றால மலையின் கெவுனக் குளிகைச் சித்தர் குகைக்குத் தென்மேற்கில் கூப்பிடு தூரத்தில் ஒரு பெரிய குண்டக்கல் உள்ளது . அக்கல்லின் மீது ஏறினாலும் , அசைத்தாலும் அசையுமேயொழிய ஒரு போதும் உருளுவதில்லை அதைச் சுற்றிலும் தரையிலிருந்து பாறை அமைந்துள்ளது கல்லின் மீது ஏறி ஈசான மூலை பார்க்க ஒரு வட்ட மரத்தினடியில் ஒரு மகான் நிட்டையில் இருப்பதையும் அருகில் ஒரு மூலிகைச் செடியையும் காணலாம். இக்காட்சியைக் கல்லை விட்டுக் கீழே இறங்கினால் காணமுடியாது மேற்கூறிய குண்டாற்றின் வடபுறமுள்ள குகை வாசலின் தெற்கே மூன்று நாழிகை தூரத்தில் யானைக் கசமுள்ளது அதில் இறங்காமல் கிழக்கே வரும் பாதையில் சிறிது தொலைவு வந்தால் ' வசந்தமாமுனிவர்' ஆசிரமத்தையும் அதற்குத் தென்புறம் சமதளமான செம்மண் தரையில்

'கருவாழை' மரங்களைக் காணலாம். அதன் பழங்கள் கருப்பாக இருக்கும். தோலை உரித்தால் உள்ளே அழுக்கு நிறம் தோன்றும். இதனைப் பிசைந்து வீரச் சுண்ணம் வைத்து எலுமிச்சை அளவு ஏழுநாள் 14 வேளைகள் சாப்பிட உடல் இறுகித் தேகசித்தியாகி நரை, திரை மாறும்.

– திருமூலர்கருக்கிடை –600

கரு ஊமத்தைச் செடிகள்.

மேற்படிச் செம்மண் தரைக்கு வடமேற்குப் பாதையில் கருங் கானலும் அதனுள் போத முனிவர் ஆசிரமமும் உள்ளது. இதற்கு வடக்கே எல்லைக்குட்டமும் குட்டத்திற்கு வடக்குப் பாதையில் அரை நாழி தூரத்தில் தண்ணீர் கதம்புத் தரையும் உள்ளது அவ்விடத்தில் ' கரு ஊமத்தைச் செடிகள்' நான்கு முழு உயரம் வரை வளர்ந்துள்ளன. அதன் தண்டு, பூ, காய் முதலியன கருப்பாய் இருக்கும் அதில் 1 பெரிய காய்பிடுங்கி அதனுள் ஒரு

பலம் இரசத்தை வைத்து வெயிலில் காயவிட்டு 7 சீலை மண் செய்து ஐந்து எருவில் புடமிட மணியாயிருக்கும். மணியை எடுத்து வாயிலடக்கக் கவுனக் குளிகையாகும் அஷ்டாங்க யோகமும் பலிக்கும்.

— திரு மூலர் கருக்கிடை 600

'மலை அரளி'

முன் கூறிய குண்டாற்றின் கீழ்ப்புறம் செல்லும் வழியில் 1 1/4 நாழிகை தூரத்தில் மதியமான் மலையும் அதன் வடபுறம் ஓடும் ஓடைக்கும் வடக்குத் திசையில் செல்லும் பாதையில் 1/2 நாழிகை தொலைவில் உள்ள பெரிய காவுக்குள் 'காங்கேய ரிஷி ஆசிரமமும் உள்ளது. அதற்கு மேற்கே செல்லும் பாதையில் சென்று அங்கிருந்து வடபுறம் செல்லும் பாதையில் 1/2 நாழிகை தூரம் சென்றால் அங்கு சதுப்புத் தரையைக் காணலாம் அவ்விடத்தில் ' மலை அரளி' விளைகிறது அம்மரத்தின் அடி சிறுத்து இலைகள் மாவிலை போல் சிறிது வெண்மையுடன் மஞ்சள் பூத்தும் காணும். இந்த இலையின் சாற்றால் கந்தகத்தை அரைத்து வில்லை தட்டிக் காயவிட்டுக் குகையினுள் வைத்து மணல் மறைவுப்புடம் இட பற்பமாகும். அதனை நெய்யுடன் சாப்பிட்டு வர உடல் சித்தி பெறும்

— குரு நூல் — கரு வூரார் வாத காவியம்.

'பப்பரப்புளியமரம்'

மேற்படி சதுப்பு நிலத்திற்கு வடகிழக்கே செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் சுரண்டையூர் உள்ளது அவ்விடமுள்ள மலையின் வடபுறம் ' காஞ்சன முனிவர் ஆசிரமம்' உள்ளது.

அதற்குத் தெற்கில் செல்லும் பாதையில் கூப்பிடுதூரத்தில் மலை ஓரத்தில் கேணியைப்போல்' பஞ்சவேதி உதகம்' உள்ளது. இந்த உதகத்திற்கு வடக்கே செல்லும் பாதையில் 'பப்பரப்புளியமரத்தை' க் காணலாம்.

'சோமவிருட்சம்'

மேற்படி மரத்தின் அருகில் செல்லும் வடகிழக்குப் பாதையில் புலிமலை உண்டு. இம்மலைக்குக் கிழக்கே செல்லும் பாதையில் குண்டாறும் அதனருகில் பெரிய குகையும்

உள்ளது அதற்கு வடமேற்கில் செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் ஒரு மலைத் திட்டும் உள்ளது. குகைக்கு நேர் கிழக்கில் 'சோமவிருட்சம்' உள்ளது மலையின் மேலே 'சமாதிச் சித்தர் குகையும்' குகைக்கு நேர் கிழக்கில் மேற்படி விருக்ஷம் உள்ளது இதன் தூர் சிவந்தும் இலைகள் கத்தி போல் சிறிதாயும் காய் பவள நிறமாயும் ஆலங்காய் போலிருக்கும். மரத்தைக் கல்லினால் தட்டி வழியும் பாலைக் கோப்பையில் பிடித்து அதில் 1 கழஞ்சு இரசத்தை விட்டு மூன்று நாள் வைத்திருக்க வெண்ணெய் போலாகும். அதில் சனவேதி உதகம் விட்டு வெய்யிலில் வைக்கக் கட்டியாகும். அக்கட்டியைச் செம்பில் 4க்கு1 கொடுக்கப் பத்து மாற்றாகும் அந்தச் செம்பைப் பற்பம் செய்து உண்ண நரைதிரை மாறிக் காயசித்தியாகும்

– சட்டை முனி கற்பவிதி 101

'எட்டிமரம்'

மேற்படி குகைக்கு வடமேற்குப் பாதையில் 1 நாழிகை தூரத்தில் ஓடும் தென் வடலான ஒரு ஆற்றின் வழியே வட புறத்தில் ஒரு காவும் அதன் மேற்பக்கத்தில் சாந்த மகரிஷி ஆசிரமும் உள்ளது. அதற்கு மேற்குப்புறமுள்ள ஒரு மண்மேட்டில் நின்று பார்க்கப் புளியங்குடி என்ற ஊர் தெரியும் அங்கிருந்து கீழ் பள்ளத்தில் 'எட்டிமரம்' உள்ளது. அதன் அடி பெருத்தும் இலைகள் எட்டி இலை போன்றும் பழம் பெரியதாய் சிவப்பாய் மஞ்சள் நிறமாயும் இருக்கும். இதன் கொட்டையைப் பொடியாய் நறுக்கிப் பாலில் ஊறவிட்டு எடுத்து காயவைத்துக் கடுகளவு முதல் ஒவ்வொரு கடுகளவாய்க் கூட்டிக் கொண்டே இருபதுநாள் உட்கொள்ள உடல் சித்தியாகும்

திருமூலர் கருக்கிடை 600

வெள்ளெருக்கு மரம்

மேற்படி மேட்டிற்கும், எட்டி மரத்திற்கும் வடமேற்குப் பாதையில் 2 நாழிகை தூரத்தில் வட்டப்பாறை இருக்கிறது அதில் நின்று பார்க்க ஊர்கள் தெரியும் அங்கிருந்து வடக்குத் திசையில் 'வாசியோகச்சித்தர் குகை' உள்ளது. அதனுள் பல சித்தர்கள் வாசம் செய்வர், அக்குகையினருகில் இரவு

நேரங்களில் சங்கின் ஓசை கேட்கும். குகைக்கு எதிரில் 'வெள்ளெருக்கு மரம்' உள்ளது. இதன் அடி பெருத்து இலைகள் எருக்கிலைபோல் இருக்கும். இதன் கொப்புகளைத் தட்டி வடியும் பாலைச் சிரட்டையில் பிடித்து அதில் துத்தத்தைப் போட்டு வெயிலில் வைக்கப் பச்சையின்றி வெண்மையாகும். அதனைக் குகையிலிட்டுச் சீலைமண் செய்து 10 எருவில் புடமிடச் சுண்ணமாகும். அதில் அரிசி எடை வீதம் சாப்பிட காயசித்தியுண்டாகும்.

— கருவூரார் –700

'சிவப்புக் கீழ்க்காய்நெல்லி'

மேற்படி குகைக்கு வடக்கே செல்லும் பாதையில் 2 நாழிகை தூரத்தில் கசிவுத் தரையும் 'தசவேதிச்சுனையும்' உள்ளது. இங்கு ஒரு மனிதன் நிற்பது போன்றதொரு கல்லும் உள்ளது. அந்த உதகச் சுனைக்கு வடக்கில் கூப்பிடு தூரத்தில் வனத்தினுள் 'வாத சாந்தி மகரிசி' ஆசிரமமும் உள்ளது. இதற்குத் தென்புறத்தில் 'சிவப்புக்கீழ்க்காய் நெல்லி' ச் செடிகள் உள்ளன. அவை 2 முழ உயரத்திலும் கீழ்க்காய் நெல்லி போன்ற இலைகளுடனும் இருக்கும். பெரிய காயையும், சிவந்த பூவுடனும் இருக்கும். இதன் இலைகளுடன் சிறுபுள்ளடி, செங்கழுநீர் இலைகள் கூட்டி (சமனாக) இடித்துப்பிழிந்து வீசம் படி சாறெடுத்து சாறு தீரும் வரை கந்தகத்தில் விட்டு அரைத்துப் பின் உதகநீர் விட்டு அரைத்து சுண்டையளவாக உருட்டி உலர்த்தி மண் குகையில் இட்டு உருக்கக் குளிகையாகும் அந்தக் குளியை வாயிலிட்டு இருக்கக் கெவுனமாகும்.

கருவூரார் சூத்திரம் குருநூல் –150

குங்கிலியமரம்

மேற்படி வனத்திற்கு மேற்கே வடபுறம் செல்லும் பாதையில் குமரிமலை உள்ளது. அதற்கு வடகிழக்கில் செல்லும் பாதையில் 4 நாழிகை தூரத்தில் ஒரு மண் திட்டு இருக்கிறது. திட்டில் நின்று பார்க்க 'வாசுதேவநல்லூர்' தெரியும்.அங்கிருந்து வடக்கே செல்லும் பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் 'காலாட்டிச்சித்தர்' குகையும் அதற்குத் தெற்கில் உள்ள

மயிலாடும் சோலைக்கு வடபுறம் ' குங்கிலியமரம் ' உள்ளது. இதன் அடி பெருத்துப் பல கிளைகளோடும் இருவிரல் அகலம் 1 விரல் நீளத்தில் கத்தி போன்று இலைகள் இருக்கும். இம்மரத்தை வெட்டி வழியும் பால் உறைந்தால் வெள்ளைக் குங்கிலியமாகும். உறையாத பாலைச் சிரட்டையில் பிடித்து உடன் சமன் பசும்பால் சேர்த்து அருந்தி வர யானை வலிவுடன் காய சித்தியாகும்

— சதுர கிரி தலபுராணம்'

'காயா மரம்'

மேற்படிப் பெருங்கானலுக்கு மேற்கே செல்லும் பாதையில் 4 நாழிகை தூரத்தில் உள்ள உயர்ந்த மலைக்கு வடகிழக்குப் பாதையில் 4 நாழிகை தூரத்தில் உள்ள வெள்ளைக்கல் பாறையின் அருகில் ஒரு தண்ணீர்ச் சுனையுள்ளது. சுனையுள் ஒரு செம்பு மட்டும் நுழையும் எவ்வளவு நீர் எடுத்தாலும் வற்றாது. அந்தச் சுவைமிக்க நீரை அருந்துவதுண்டு அங்கிருந்து மேற்கே செல்லும் பாதையில் சிறிது தூரத்திலுள்ள கருங்கானலுக்கு வடபுறம் ' தேவமகரிஷி' ஆசிரமம் உள்ளது. அதனருகில் ' காயா மரங்கள்' உள்ளன, அடி கருத்து பெருத்தும் இலை வட்டமாய் முனை நீண்டும் பூ சிறிதாயும் இருக்கும் .அதில் எப்போதும் காய்ப்பதில்லை அடி மரத்தின் மேற் புரணியைச் சீவிவிட்டு பட்டையை வெட்டி உதகநீர் விட்டு இடித்து வீசம் படிச் சாறு எடுத்துப் பீங்காலில் விட்டு அதில் சூதத்தையும் விட்டுப் புடமிடக் குளிகையாகும் அதனை வாயிலடக்க தேக சித்தியாகும்.

' சிவப்புத் தூதுவேளைச் செடிகள்'

மேற்படி கருங்கானலைக் கடந்து வடகிழக்கில் கூப்பிடு தூரத்தில் குளிர்கானல் என்றொரு வனமுண்டு. அங்கு கடுமையான குளிர்காற்று வீசும். அதற்கு வடபுறமுள்ள பெரிய வனத்தின் மேல்பக்கம் 'பற்பமகரிஷி ஆசிரமம்' அதன் மேற்கே செல்லும் பாதையில் 1 மண்மலையும் உள்ளது. அதன் அடி வாரத்தின் வடகிழக்கு மூலையில் 'சிவப்புத் தூதுவேளைச்

செடிகள் உள்ளன. அவை சகலத்திலும் சாதாரணமானவை. போல இருந்தாலும் மலரும் காயும் சிவந்து பெரிதாய் இருக்கும் இதன் சமூலத்தையும் உதகநீர் விட்டு இடித்து அரைக்காற்படி சாறுபிழிந்து பீங்கானிலிட்டு உடன் சூதத்தையும் வைத்து வெய்யிலில் வைக்கக் குளிகையாகும். அதனை முறைப்படி புடமிட்டுச் செந்தூராக்கி உட்கொள்ளக் காயசித்தியாகும்.

'செங்கரிப்பான்'

முன் கூறிய மண்மலை அடிவாரத்தினின்று வடபுறம் செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் உள்ள கூடற்பாறையின் மீது ஏறிப் பார்த்தால் சங்கரன்கோவில் கோபுரம் தெரியும். பாறைக்கு வடக்கே செல்லும் பாதையில் குண்டாறும் ஆற்றுக்கு மேல்புறம் செல்லும் பாதையில் 4 நாழிகை தூரத்தில் ஒரு கல்மலையும் உண்டு. அதனருகில் உள்ள குகையினுள் நவநாதர் உட்படப் பல சித்தர்கள் உள்ளனர் குகையினருகில் இருநாள் வேதி உதகம் உள்ளது. அங்கிருந்து நேர் வடக்கே செல்லும் பாதையில் சென்றால் 'செங்கரிப்பான்' செடிகளைக் காணலாம் . அதன் சமூலத்தைப் பிடுங்கி வந்து சிறிது சிறிதாக உதகநீர் விட்டு இடித்து அரைக்காற்படிச் சாறெடுத்து உடன் சமன் பசுவின் நெய் விட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்துப் பீங்கானில் வைத்துக் கொண்டு காலையில் மட்டும் விரலால் சிறிது எடுத்து உள்நாக்கில் தடவிவர அமுதம் சொரிந்து வரும் உட்கொள்ள காயசித்தியாம்.

– சூரியானந்தர் கல்ப ஞான சூத்திரம் – 25 :

'சர்க்கரை வேம்பு மரம்'

மேற்படி குகை வாசலுக்கு மேற்கே செல்லும் பாதையில் செடிகளடர்ந்த பாதர்மலை மிக உன்னதமாக வளர்ந்திருக்கும் அதற்கு வடக்கில் "அடவிச்சித்தர் குகை" உள்ளது. மலைக்குக் கீழ்ப்புள்ள செவ்வல் தரையில் 'வெள்ளை வேம்பு' எனும் 'சர்க்கரை வேம்பு' உள்ளது.

இதன் அடி வெண்மையும், இலை பொன்னிறமாயும், காய்பழம் வெண்மையாயும் இருக்கும். மரத்தூரில் வெட்டி விட்டு 1 மாதம் கழித்துப் பார்க்கப் பால் வழிந்து வெண்மையாய்க் கருவேலம் பிசின் போலிருக்கும். அதில் ஒரு பலம் எடுத்துப் பொடித்துப் பசுவின் பாலில் அருந்த யானை வலுவுடன் உடல் சித்தியாகும்

. – அகத்தியர் தத்துவம் – 300.

'வன்னி மரம்'

மேற்படி செவ்வல் தரைக்கு வடக்கே செல்லும் பாதையில் 2 நாழிகை தூரத்திலுள்ள கரும்பாறை மீது ஏறிப் பார்க்க அருகில் உள்ள ஊர்கள் தெரியும் பாறைக்குத் தென்மேற்கு மூலையில் 1 நாழிகை தூரத்தில் கல்லூற்றும் அதன் வடபுறம் சிறிது தொலைவில் உள்ள பெரிய காவுக்கு நடுவில் திட்டு ஓரத்திலுள்ள ஒரு குகையினுள் 'நாதாந்தர்' முதலிய பலசித்தர்கள் உள்ளனர். குகைக்கு முன்பாக 'வன்னிமரங்கள்' உள்ளன. இதன் அடி பெருத்துக் கருப்பாகவும் இலைகள் கடுக்காய் இலைகளைப் போன்றும் மலர் சிறிதாயும் இருக்கும். இலைகளைப் பிடுங்கி உரலில் இட்டு உதகநீர் கூட்டி இடித்து வீசம் படிச் சாறெடுத்து இலிங்கத்திற்குச் சுருக்குக் கொடுக்கக் கட்டும் அதனைச் செந்தூரமாக்கிப் பத்துதினம் சாப்பிட காயசித்தியாகும்.

'கற்புடையாள் முந்துதல் ஊற்று'

மேற்படி மண்திட்டுக்கு வடபுறம் கிழக்கு நோக்கி வர 'கற்புடையாள் முந்துதல்' என்றதொரு ஊற்றைக் காணலாம் ஊற்று தோன்றுமிடம் ஒரு குகை போலிருப்பதால் அது எங்கிருந்து வருகிறது. எனத் தெரியவில்லை. அங்குள்ள கருப்பண்ணசுவாமி கோவில் வழியாக ஆறு போல் வடக்கு நோக்கி பாயும் ஊற்றில் மூழ்குவதற்கு மக்கள் கூடுகின்றனர். சுற்றிலும் மலை புதர்கள் நிறைந்த இந்த ஆற்றிலிருந்து நீரெடுத்து குழாய்கள் மூலமாகச் சங்கரன்கோவில் தண்ணீர்ப்பஞ்சத்தை நீக்கியுள்ளனர். ஒரு கயவன் ஒரு இடைப்பெண்ணைக் கெடுப்பதற்காகத் துரத்தி வருகையில் அவள் பயந்து ஓடி இந்தக்குகையுள் மறைந்து விட்டதாகவும்

விரட்டிவந்தவன் கல்லாகிவிட்டதாகவும் அதனால்தான் மேற்படி ஊற்றுக்குச் சிறப்பு பெயர் வந்தது என்று கூறப்படுகிறது.

"சேம்பு ஊற்று"

மேற்படி முந்தலுக்கு 4 மைல் மேற்கே வடக்கு நோக்கிச் சென்றா ல் அங்க ஒரு கல்புடவினின்றும் வெளிவரும் " சேம்பு ஊற்று" காண லாம் . அதனருகில் சுமார் 60 க்கும் மேற்பட்டவர் தங்கும் அளவில் வெளி விசாலத்தைக் கொண்டதொரு குகையுள்ளது குகையினுள் செல்வதற்கு முதலில் குனிந்து கொண்டும் , பிறகு உட்கார்ந்து கொண்டும் முடிவில் படுத்து ஊர்ந்து கொண்டும் சென்றாலும் குகை முடிவை அறிய முடியாது. அருகிலுள்ள ஆடு மாடுகள் மேய்க்கும் இடையர்கள் தண்ணீர் பஞ்சம் வந்தால் குகையினுள் சென்று பால் வார்ப்பார்கள் எனவும் அதனால் சில மணி நேரத்திலேயே ஊற்றில் நீர் வந்து விடுமெனவும் ஆனால் சில ஆண்டுகளாக அப்படிச் செய்தாலும் தண்ணீர் வருவதில்லையெனவும் அங்குள்ள இடையர்கள் கூறுகின்றனர்.

" பாப்பாத்தி கெசம் "

சேம்பு ஊற்றுக்கு வடகிழக்கே ஒருமைல் தூரத்தில் ஆள் இறங்க முடியாத " பாப்பாத்தி கெசம்" உள்ளது. அருகில் ஒரு கல் ஆள் மாதிரி இருக்கிறது. வாசுதேவநல்லூர், சிந்தாமணி-நாதர் கோவில் பூசாரி நம்பி என்பவர் ஆலய பூசை முடித்து வீடு திரும்பும்போது காலைச் சுற்றிய பூனைக்கு பிரசாதத்தைப் போட்டுவிட்டு வெறும் கையுடன் வீடு திரும்பியதால் அவர் மனைவி பாப்பாத்தி என்பவர் கோபமுற்று மேற்படி கெசத்தில் குதித்து மூழ்கி விட்டாளாம், தொடர்ந்து வந்து தேடிய பூசாரியிடம் அங்கு நின்ற மகான் காரணத்தைக் கேட்டறிந்து உன் மனைவி கெசத்தில் மூழ்கி இறந்துவிட்டாள். உன் பெயரை இந்தப் பாறைக்குச் சூட்டுகிறேன் என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டாராம். அப்படிக் கூறியவர் அகத்தியர் எனவும் அவர் அந்த நம்பிப் பாறையில் தவம் செய்தவராகும் எனவும் வாசு தேவநல்லூர் தலபுராணம் கூறுகிறது.

" வட்டப்புடவு "

பாப்பாத்தி கெசத்திலிருந்து நேர்வடக்குத் திசையில் முஞ்சிமலையும் மலைக்கு மேற்கில் வடமேற்காக ஒரு கடவும் செல்கிறது. மலையாள நாட்டின் எல்லை வரை செல்லும் அந்தப் பயங்கரமான பாதையில் கொடிய மிருகங்கள் உலவுவதைக் காணலாம். முஞ்சி மலையின் மேல் அடிவாரத்தில் ஒரு குகையும். அதற்குக் கிழக்கே தொந்திச் செட்டி க்டை வைத்திருந்த " வட்டப்புட்வும் " உள்ளது இங்கிருந்து தென்கிழக்கில் 2 மைல் தூரத்தில் வடக்கு முகமாக ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றுநீர் கால்வாய் வழியாக முதலில் இராஜபோபாலப் பேரி என்ற குளத்திற்கும் பிறகு வாசு தேவ நல்லூர் பெரிய குளத்திற்கும் வந்து மீண்டும் பல குளங்களை அடைந்து முடிவில் கிழக்குக்கு கடலில் சென்று சங்கமிக்கின்றது.

" நம்பிமான் பாறை"

ராஜபோபாலப்பேரிக்குக் கிழக்கே 1 மைல் தொலைவில் ஒரு சிறிய மலையும் அதனுச்சியில் 1 லிங்கமும் உள்ளது. அங்கு ஒரு மகான் வந்து உலவுதைக் கண்டதாகப் பலர் கூறுகின்றனர். மற்றும் இங்கு பலரைத் துன்புறுத்திய மோகினி (மாயை) இருப்பதாயும் பலர் கூறுவர். மலைக்குக் கீழ்ப்புறம் 1 பர்லாங் தூரத்தில் ராமர் கோவில் உள்ளது. இந்தக் கோவில் உள்ள மலையே " நம்பி மான் பாறை" எனவும் இதுவே அகத்தியர் தவம் புரிந்த ராமர்மலை எனவும் விளங்குகிறது. இங்கிருந்து பார்க்கப் புளியங்குடி, வாசுதேவநல்லூர், தாருகாபுரம், மல்லிடக் குறிச்சி முதலிய ஊர்கள் தெரியும், இங்கிருந்து நேர்கிழக்கில் 4 மைல் தூரத்தில் மல்லிக்குறிச்சி மலையுள்ளது. இதன் மீது ஏறி இறங்க ஆறுமணி நேரம் ஆகும். உச்சியிலுள்ள சிறிய கோவிலில் மாதாந்திர வெள்ளிக்கு மட்டும் தீபமேற்றுவர். இதன் வடக்கே ஒரு நாழிக் கிணறும் கிழக்கே ஒரு குகையும், வடமேற்கு மூலையில் ஒரு குகையும் உள்ளது. கார்த்திகை தோறும் இரவில் மலையடிவாரத்தைச் சுற்றி ஒரு குதிரை ஓடி

வருவதாகக் கூறப்படுகிறது. இங்கு கிழக்கே 2 மைல் தொலைவில் ஒரு நீண்ட மலையும் அதன் அருகில் அரியூற்றும் அதன் அருகில் ஓர் அகன்ற மலையும் மலையடிவாரத்தில் மூடப்பட்டுள்ள ஒரு குகையும் உள்ளது. குகைவாயிலில் சூரியன் மறைந்தபின் மீண்டும் உதிப்பதற்குள் குகையை மும்முறை சுற்றி வந்து குகையின் முன் நின்றால் அதன் வாயில் திறக்கும் என்று எழுதிப்போடப்பட்டுள்ளது. இங்கிருந்து கிழக்கே ஒரு மலைத் தொடரில் வடபுறத்தில் 1 குகையும் ஊற்று சதம்பலும் இதைக் கடந்து 1/2 மைல் கிழக்கில் உருண்டு நீண்ட மலையும் அதில் நெடுந்தூரம் போகும் குகையும் உள்ளது. இக்குகையுள் நிறைந்துள்ள வெளவால்கள் உள்ளே ஆள் போக முடியாதபடி முகத்தில் அடிக்கின்றன. இங்கிருந்து நேர் தெற்கில் 1/2 மைல்தூரத்தில் ஆத்தடிப்பிள்ளையார் கோவிலும், அதற்கு 1/2 மைல் தெற்கில் சங்கரன் கோவில் இருக்கிறது. வருடந்தோறும் பிள்ளையார் கோவிலில் ஆடித்தவசு நடக்கும் போது தினமும் பல்லாயிரக் கணககானவர் வந்து தரிசிக்கின்றனர். கோயிலைக்கட்டிய உமாபதி ஆச்சாரி உப்பரன் கோட்டை உக்கிரவீரபாண்டியன் ஆகியயோரது சிலைகள் கோவில் தலைவாயிலில் நிற்கின்றன. மேற்படி குகைக்கு வடக்கில் கூப்பிடு தூரத்தில் வைரவன் கோவிலும் அதற்கு மேற்புறம் மண்மலையும், அதற்கு வடமேல் மூலையில் செல்லும் பாதையில் ஒரு தண்ணீர்ச் சுனையும், சுனைக்கு நேர் வடக்கில் 1 நாழிகை தூரத்தில் திரிகூட மலையும் உள்ளது.

" க்ஷீரி விருக்ஷம் "

முன்கூறிய கருங்கானலுக்கு மேற்புறம் வடக்கே செல்லும் பாதையில் 2 நாழிகை தூரத்தில் வரும் கானாற்றைக்கடந்து மேற்கில் போனால் அங்கு வனதேவதை கோவில் உள்ளது அதற்கு முன் புறமுள்ள தண்ணீர் சுனையில் மூன்று கையளவு நீரை அள்ளி அருந்த உடல் பொன்னிறமாகும், சுனைக்குச் சிறிது தூரத்தில் குமரிக்குட்டம் இருக்கிறது. அதில் நின்று பார்க்க 'சிவகிரி' என்ற ஊர் தெரியும். இங்கிருந்து 1 நாழிகை தூரத்தில்

'செகராசரிஷி' ஆசிரமமும் அதற்க வடக்கேயுள்ள கசிவுத் தரையில் 'கீரிவிருக்ஷம்' உள்ளது. அம்மரம் பெரிதாய் 1 விரல் நீளத்தில் முனை நீண்ட இலைகளுடன் பசுமை நிறமாய் இருக்கும். மரப்பட்டையை வெட்டி இடித்துச் சாறு பிழிந்து அதில் நிலப்பனை கிழங்கும், உப்பில் வேரும் சமன் கூட்டி அரைத்து 12 உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு 4 நாட்களுக்கு 1 வீதம் 1 மண்டலம் சாப்பிட்டு வர எவ்விதக் கொடிய விஷங்களும் பாதிக்காத உடல் பெறலாம். நச்சரவங்களையும் கையில் பிடிக்கலாம்.

"தேவதாரு மரம்"

மேற்படி கசிவுத் தரையினின்று செல்ல சோலைமலையின் புத்தூர், மலையைக் காணலாம். இம்மலையைக் கடந்து வர வாசிமலை தோன்றும். இம் மலைக்கு கீழ்புறம் சத்தகன்னியர் நீராடும் நாழிக் கிணறும் அதற்குத் தென்மேற்கில் 'அடவிச்சித்தர்' குகையும் இதனருகில் 'நாத முனிவர்' வசிக்கும் பாதாளக் குகையும் அதற்கு வடக்கே 4 நாழிகை தூரத்தில் மரங்களடர்ந்த கானலில் 'நாதமுனிவர்' ஆசிரமமும் இதனருகில் 'தேவதாரு' மரமுமுள்ளது. இதனடி பெருத்து இலைகள் சிறிதாயும் வட்டமாயும் மலர் அழுக்கு நிறமாயும் மணமுடன் இருக்கும் பூக்களை எடுத்து அதில் வீசம் படி கார் எள் ளெண்ணெய், 1/8. படி காராம்பசுவின்பால், தொட்டால் சிணுங்கி இலைகரிச்சான்கண்விழி ஆகியன கூட்டி வற்றக்காய்ச்சிக் காயவைத்துக் கல்வத்தில் இட்டு அரைத்து உடன் புனுகும், சவ்வாதும் சேர்த்துக் கொம்புச் சிமிளில் வைத்துக்கொண்டு திலகமிட தன் உருவைப்பிறர் பார்க்க இயலாது.

கருவூரார் வாதகாவியம் – 700

"இந்திர வீரமரம்"

மேற்படி நாத முனி ஆசிரமத்திற்கு மேற்கே செல்லும வழியில் 1/2 நாழிகை தூரத்தில் "சவரிமலையும்" அதற்குத் தெற்கில் தேக்கு மரக்கான லும் இருக்கிறது. அதைக் கடந்து 1/2

நாழிகை தூரத்திலுள்ள காளிப்பாறையின் மீது நின்று பார்க்க இராசபாளையம் என்ற ஊர் தெரியும். பாறைக்கு வடக்கே 'சொரிமுத்தையின்' கோவிலும்அதனருகில் பண்டாரக்கிழவன் கோவிலும் அதைக் கடந்து மலையின் மீதுள்ள அடர்ந்த கானதுக்குக்கீழ்புறம் 'வாசதேவமகரிஷி' ஆசிரமமும் உள்ளது. அதற்கு வடபுறம் 'இந்திரவீரமரம்' உள்ளது. இதன் அடி பெருத்து கையகல இலைகளுடன் நாலிதழோடு கூடிய வெண்மையான மலர்களும் இருக்கும். மரத்தை வெட்டி வடியும் பாலைச் சிரட்டையில் பிடித்து வெள்ளாட்டு கோமியம் விட்டுக் கலக்கி அருந்த மூர்ச்சையுண்டாகும். மூர்ச்சை தெளியும் வரை பசுவின் பால் கொடுத்துக் கொண்டு வர மூன்று நாட்களுக்குப்பின் தெளிவு ஏற்படும், பிறகு பச்சரிசியும் பாசிப்பயறும் கூட்டிச் சமைத்து உட்கொண்டு வரச் சட்டை கழன்று பொன்போல் ஒளியுண்டாகி உடல் சித்தி பெறும்.

"வேம்பின் மேல் புல் துருவி"

மேற்படி கானலுக்கு நேர் வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் 'பன்றிமலை' யும் அதற்கு வடக்கே சற்றுத் தொலைவில் "பேய்மலையும்" அதன் கீழ்ப்புறம் செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் "ராக்காயி அம்மன்" - கோயிலும் அதற்கு மேல் புறம் கூப்பிடு தொலைவில் "பாளையானந்தர்" குகையும் உள்ளன. குகைக்குத் தெற்கிலுள்ள வெள்ளைக்கல் பாறையில் நின்று பார்க்க "மம்சாபுரம்" என்ற ஊர் தெரியும். இங்கிருந்து சற்று வடக்கே செல்லும் பாதையில் வேப்ப மரங்கள் உள்ளன ளஅதில் "வேம்பின் மேல் புல்துருவி" இருக்கும் வேப்ப மரங்களைப் போல் இருக்கும். இதன் கிளைகளில் மட்டும் இலைகள் மாறுபட்டுத் தோன்றும். அதன் அடையாளத்தைக் கண்டு பிடித்து, ஞாயிற்றுக் கிழமை அமாவாசையில் காப்புக் கட்டிச் சேவல் பலி கொடுத்து மரத்தின் மீது ஏறிக் கிளையை வெட்டி வந்து அதே மரத்தினடியில் வைத்துத் தேங்காய், பழம், தீப, தூபம் கொடுத்து அதில் மூன்று மணிகள் செய்து கையில் கட்டிக் கொள்ள சகல சித்திகளும் கிட்டும்

— கருவூரார் வாத காவியம்

" கல்லத்தி மரம் "

மேற்படி வெள்ளைக்கல் பாறையினின்று வடபுறம் மலையின் மீது ஒரு நாழிகை தூரத்தில் " மேமலையுச்சியில் தொழுகண்ணிச்சித்தர்" வாழும் குகையுள்ளது . அதனருகில் உள்ளதொரு சுனையில் மூன்று கையளவு தண்ணீர் அருந்தச் சகல குட்ட நோயும் தீரும். சுனைக்குக் கீழ்புறம் வரும் பாதையில் கூப்பிடு தொலைவில் ஒரு ஆறு ஓடுகிறது. ஆற்றின் கரையினோரம் " கல்லத்தி மரங்கள் " உள்ளன. அதன் அடிபெருத்து இருவிரல் அகலத்தில் முனை நீண்ட இலைகளுடன் கணுக்களில் நெல்லியளவு காய் கொத்துக்களுடன் இருக்கும், காய்களை உதகநீர் விட்டு இடித்துச் சாறுபிழிந்து அதில் வெண்பாடாணத்தை சுருக்குக் கொடுக்கக் கட்டும்: அதனைச் சுண்ணமாக்கி உண்ணக் காயசித்தியாகும்.

" குருக்கத்தி மரம் "

மேற்படி ஆற்றக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் புலிக்கானலும் அதன் கீழ்ப்புறம் பேச்சியம்மன், ராக்காயிஅம்மன், வைரவர் கோவில்களும் அவற்றிற்கு வடபுறம் " சாங்கிய் மகரிசி" வனமும் உள்ளன. அதனருகில் உள்ள குண்டு மலையின் மீது நின்று பார்க்க திருவண்ணாமலைக் கோவிலும், பூஞ்சுனையும் அதனருகிலுள்ள நரிப்புடவு மலையும் தெரியும் . நரிப்புடவும் உட்புறம் மிகவும் விசாலமாயுள்ளது. அங்கு பல சித்தர்கள் உலவும் குண்டுமலையின் அடிவாரமாயுள்ள கானலுக்கு வடபுறத்தில் "குருக்கத்தி மரங்கள்" உள்ளன. அதன் அடிபெருத்து இலை கல்லத்தி இலைகள் போலும் இருக்கும், மரத்தைத் தட்டிவடியும் பாலைச் சிரட்டையில் பிடித்து பாலுக்கு அரைப்பங்கு உதகநீர் விட்டுக் கலக்கிச் சூரியபுடமிட்டு குழம்பான பின்னர் நெல்லியளவாகக் காலை தோறும் சாப்பிட உடல் பொன்னிறமடையும். ..

" சேங்கொட்டை மரம் "

மேற்படி குண்டுமலைக் கானலினின்று வடக்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள மிருகங்கள் வாழும் வனத்தின் ஓரம்

திருகைக்கல் மொட்டைக் கோபுரம் போல இருக்கும். அதன் மேல் புறம் 1 நாழிகை தொலைவில் கோட்டைமலையும் மலைக்கு நடுவில் செல்லும் பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் கருப்பண்ண சுவாமி கோயிலும் இருக்கிறது. கோவிலுக்குப் பின்புறம் " மார்நாட்டுச் சித்தர்" வனத்தின் ஓரத்தில் " சேங்கொட்டை மரங்கள் " உள்ளன. அதில் இரண்டு சாக்கு சேங்கொட்டை கொண்டு வந்து 2 பெரிய பானையில் இட்டு நிறையத் தண்ணீர்விட்டு வைத்திருந்து 1 மாதம் கழித்து 1 குழி தோண்டி 4 பாத்தி பிரித்து கொட்டைகளை கொட்டிப்பரப்பி அதன் மேல் 1 சாண் உயரம் மணலைப்போட்டு மூடவும். 3 மாதம் கழித்து அதன் எருவையிட்டுப் பரப்பி தண்ணீர் விட்டு அதில் வெங்காயத்தை நடவும் அந்தச் செடியில் விளையும் வெங்காயத்தைச் சாப்பிட்டுவர (" வேளைக்கு 4 வெங்காயம் வீதம்") நரை திரை மாறிக் காயசித்தியாகும்

—நூல் – போகர் சாகரம்.

" சீந்தில் கொடிகள் "

மேற்படி கருப்பண்ணசாமி கோவிலுக்கு நேர் கிழக்கே ஓடும் ஆற்றுக்கு மேல்புறம் 1 நாழிகை தூரத்தில் சந்தனமரக்காவும் அதனுள் 1/2 நாழிகை தூரத்தில் 1 பெரிய மலையும் உள்ளது மலையடி வாரத்தில் விழும் வற்றாத தீர்த்தத்தில் மூழ்க சகல பாவங்களும் தீரும். இங்கிருந்து தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் உள்ள பாறையின் மீது " அழகர் கோவில் " உள்ளது. கீழேயுள்ள தீர்த்தத்திலிருந்து வடக்கே செல்லும் பாதையின் கீழ்ப்புறத்தில்" கிராமரிஷி" ஆசிரமமும் உள்ளது. அதற்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் " சீந்தில் கொடிகள்" படர்ந்துள்ளன. அவற்றை உரலில் இட்டு இடித்து ஒரு மிடாவிற்போட்டுப் பிசைந்து வைத்து 4 ஆம் நாள் பார்க்கச் சீந்தில் உப்புப் பூத்திருக்கும் அதனை எடுத்து உலர்த்திக் கொண்டு தினம் இரு வேளை 1 வாரம் சாப்பிட உடல் பொன்னிறமுற்றுக் காயசித்தியுண்டாகும்–

– அகத்தியர் பரிபூரணம் 1200

" வேர்ப்பலா மரம் "

மேற்படி சீந்தில் கொடிகளுக்கு வடக்கே செல்லும் பாதையில் 2 நாழிகை தூரத்தில் அரியூற்றும் அதற்கு வடமேற்கில் "பிராணாயாமச்சித்தர்" குகையுமுள்ளது,

குகையினுள் பல சித்தர்கள் இருப்பர் . குகைக்கு மேல்புறம் செல்லும் வழியில் கானற்பலாக் காடுகள் உள்ளது. அதற்கு வடக்கே "வேர்ப்பலா" மரம் உள்ளது இது பெரியதாய் இருக்கும். இதன் வேர் சென்ற இடங்களில் பலாப்பழங்கள் பழுத்து அவ்விடத்தில் பூமி வெடித்து அதனின்றும் மணம் வரும். அந்த அடையாளம் கண்டு மண்ணைத் தோண்டிப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டுக் கொட்டைகளினின்றும் குழித்தைலமிறக்கி வைத்துக் கொண்டு காலையில் சிறு தேக்கரண்டியளவு சாப்பிட மூர்ச்சை யுண்டாகும் அதற்குத் தேனும் பாலும் கூட்டி யுண்ணக் கொடுத்துவர 3 நாள் கழித்து மூர்ச்சை தெளியும் உடலின் சட்டை கழன்று பொன் போலாகிக் காயசித்தியாகும்.

— கருவூரார் வாத காவியம் 700

"கருங்கொடி வேலி"

முன் கூறிய குகைக்கு வடக்கே செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் கொடிய மிருகங்கள் வாழும் பெரிய கானலும் அதன் கீழ்ப்புறத்தில் குண்டாறும் ஆற்றின் வடக்கே "மணிகட்டிச் சித்தர்" குகையும் அதனருகில் கரும்பாறையும் அங்கிருந்து 1 நாழிகை தொலைவில் கதம்புத் தரையும் உள்ளன. இங்கு கருப்பு நிற மலரையும் தண்டையும், இலைகளையும் உடைய 2 முழ உயரமுள்ள "கருங்கொடி வேலி" ச் செடிகள் ஏராளமாக முளைத்துள்ளன அதை

" ஓம் சரவணபவ " - எனப் பதினாறு உரு செபித்துச் செடியின் சமூலத்தைப் பிடுங்கிச் சாறெடுத்துக் குருவை அரிசிபோட்டு சமைத்துச் சோறு பொங்கி வருகையில் சாற்றை விட்டுச் சமைத்து உண்ண நரை, திரை மாறிக் காயசித்தியாகும்

— போகர் கல்பம் 300

"கருந்துத்தி"

மேற்படி கதம்புத் தரைக்கு வடமேற்கில் ஓடும் குண்டாற்றின் மேற்புறம் வாரணமலையும் , மலையின் மேலுள்ள வட்டப்பாறைக்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் பல

சித்தர்கள் வாழும் "கணையாழிச் சித்தர்" குகையும் உள்ளது. இங்கிருந்து மேற்கே செல்லும் பாதை மேலமலையாளத்திற்கும், வடக்கே செல்லும் பாதை வரிசை நாட்டு மலைக்கும் செல்கிறது நேர்கிழக்குப்பாதையில் உள்ள சதம்புத்தரையில் கருப்பு நிறமான மலர், தண்டு, இலைகளுடைய மூன்று முழ உயரமுள்ள "கருந்துத்திச்" செடிகள் உள்ளன. இதன் சமூலத்தை உதகநீர் விட்டு இடித்து சாறு எடுத்து 1/2 வீசம் படி அருந்த உடலின் சட்டை கழன்று நரை, திரை மாறும்.

"செந்தகரை"

மேற் சதம்புத் தரைக்குக் கிழக்கில் உள்ள மல்லநாட்டு மலைமீது வர அங்க ஒரு ஓடையும் அங்கிருந்து 2 நாழிகை தூர்த்தில் மச்சவீட்டு அரங்குகள் போல் சதுரமான பெரிய கல்லும் உள்ளது. அதனை மலையடிவாரத்தினின்று பார்க்க பெரிய கட்டிடத்தின் சுவர் போலத் தெரியும். அதன் மீது நின்று பார்க்க "வத்திராயிருப்பு" என்ற ஊர் தெரியும். அங்கிருந்து தெற்குப்பாதையில் 'கலிங்கநாதர் குகையும்' அதற்கு வடக்கில் 1 நாழிகை தூரத்தில் உள்ள சதம்புத்தரையில் "செந்தகரை"ச் செடிகள் இருக்கின்றன. அதன் தண்டு, மலர், இலையாவும் சிவப்பு நிறமடன் இரு முழ உயரத்திலிருக்கும். அதன் சமூலத்தை உதகநீர் விட்டு இடித்துச் சாறு எடுத்து விசம்படி யருந்த உடலின் சட்டை கழன்று நரை, திரை மாறிப் பொன்னிறமுடன் காயசித்தியாகும்.

"செங்கடுக்காய் மரம்"

மேற்படி குகைக்குக் கீழ்ப்புறம் 2 நாழிகை தூரத்தில் தாணிப்பாறைமலையும் அங்கிருந்து வடக்கே கூப்பிடு தூரத்தில் கருப்பண்ணசாமி கோவிலும் அங்கிருந்து கூப்பிடு தூரத்தில் குதிரை குத்திப்பாறைய்யும் அதற்கு வடக்கே ஒரு ஆறும் ஓடுகின்றது. ஆற்றுக்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் படிவெட்டிப்பாறையும் சிறிது தொலைவில் ஒரு காட்டாறும் அதற்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் கௌண்டின்ய ஆறும் ஓடுகிறது. அதற்கு மேற்புறம் 10 அடி தூரத்தில் உள்ள அத்தி ஆற்றுக்கு வடக்கில் "அத்திரிமகரிஷி" யாகம் செய்த பாறையும்

அதற்கு மேற்கில் அவரது ஆசிரமமும் உள்ளது. அதனருகில் சிகப்புக் காய்களையுடைய "செங்கடுக்காய் மரங்கள்" உள்ளன. காய்களைப் பசுவின் கோமியத்தில் அவித்துக் கொட்டையை நீக்கிச் சதையையும் தோலையும் சூரணித்து உடன் சர்க்கரை கூட்டித்தினமும் காலையில் வெருகடியளவாகச் சாப்பிடக் காயசித்தியாகும்.--

ஞானம் 9 – சுந்தரானந்தர் குருநூல் –110.

"வெள்ளைப்பனல் முருங்கை"

மேற்படி ஆசிரமத்திற்குக் கிழக்கேயுள்ள மலைமீது செல்லும் பாதையில் கிழக்கில் 1/2 நாழிகை தூரத்தில் உள்ள கோணவாசல் பாதையைக் கடந்து மேடேறினால் பசுமிதிப்பாறையும் அதற்குக் கிழக்கே கணபதிசாய்கையும் உள்ளன. அதற்குக் கிழக்கே பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் பாதையின் தென்புறம் கூப்பிடு தூரத்தில் 'வெள்ளைப்பணல் முருங்கை' மரம் உள்ளது . இதன் மலர்கள் வெள்ளை நிறமுடையது, மரப்பட்டையின் புறணி நீக்கித் தாம்பூலத்தின் உடன் சேர்த்து மென்று ஊறும் எச்சிலை இலையகல நீளமுள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தகட்டில் துப்பி பழுத்தத கட்டைச் செந்தூரமாக்கித் தேனுடன் குழைத்துச் சாப்பிடுவதாலும் காயசித்தியாகும் பாலும் சோறும் உண்ணவும்.

– ஞானம் 7 கருவூரார் குருநூல் சூத்திரம் – 150

"பேய்ச்சுரைக் கொடி"

மேற்படி புனல் முருங்கையின் இடத்தினின்று மேற்புறம் கூப்பிடு தொலைவில், சமதளப் பாறையும் , அதற்குத் தெற்கே வரும் ஓடைக்குக் கீழ்ப்புறம் கூப்பிடு தொலைவிலுள்ள மண்கண்டத்திற்குத் தெற்கில் பெரிய காவும், அதற்குக் கிழக்கில் அடர்ந்த கானலும் உள்ளன. அதன் மேற் சரிவில் "பேய்ச்சுரைக் கொடிகள்" உள்ளன. அதன் விதையினின்று குழித்தைலம் இறக்கிக் கலயத்தில் வைத்துக் கொண்டு மூன்று கழஞ்சு தைலத்துடன் பால், நெய், தேன் இவை சமன் கூட்டி சாப்பிட உடல் பொன்னிறம் அடையும். மூன்று மாதம் சாப்பிட 16 வயதுடையவனாவான் 1 ஆண்டு சாப்பிடப் பல காலம் இருப்பான். பாலும் சோறும் உண்ணவும்.

– கருவூரார் வாத காவியம் –700

" குறுவரிக் கற்றாழை"

மேற்படி ப்பேய்ச்சுரையின் இடத்தினின்றும் தென் மூலையில் செல்லும் வழியில் உள்ள அடர்ந்த வனத்தின் மேற்புறத்தில் "குறுவரிக் கற்றாழை" முளைத்துள்ளன. 11/2 சாண் உயரமும் வரிவரியாகப் பெருவிரல் கனத்திலுள்ள அந்தச் செடியின் சமூலத்தை இடித்துச் சாறெடுத்து அதில் இரும்புத் தகட்டை ஊறவைத்து எடுக்கத் தாமிரமாகும் அதனைச் செந்தூரமாக்கிச் சாப்பிட காயசித்தியாகும்.

– சதுரகிரித் தலபுராணம்

" மஞ்சள் பூ தைவேளை"

மேற்படி கற்றாழையின் இடத்தினின்று செல்லும் வடக்குப் பாதையில் கூப்பிடு தொலைவில் பிரியும் கிழக்குப் பாதையில் 1 மேடும் அதன் மீதுள்ள சமதளப்பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் பாதைக்கு தெற்கில் " சூரியானந்தர்" ஆசிரமமும் அதற்கு வடக்கில் ஓடும் ஆற்றிற்குத் தென்புறம் மலைச் சரிவில் அவரது குகையும் உள்ளது. ஆற்றின் நடுவில் கஞ்சா கடைந்த குண்டாவும் அதற்குக் கிழக்கே வற்றாத பொய்கையும் உள்ளது ஆசிரமத்திற்குத் தெற்கில் கூப்பிடு தொலைவில் " மஞ்சள் பூ தை வேளைச் " ச் செடிகள் உள்ளன. தைவேளைச் செடியைப் போலுள்ள இதன் பூ மட்டும் மஞ்சளாயிருக்கும். செடியின் சமூலச் சாற்றினால் சூதத்திற்குச் சுருக்குக் கொடுக்கட்டும் அதோடு செம்புத்தகடு சேர்த்து உருக்கக் கண் விட்டாடும் அதைக் கட்டியாக ஊதி எடுத்து நொறுக்கிமேற்படி சாற்றில் அரைத்துப்புடமிடச் செந்தூரமாகும் அதை வெள்ளியில் 10 க்கு 1 வீதம் கொடுக்கப் பத்து மாற்றாகும்.

– சூரியானந்தர் சாத்திரத் திரட்டு 4ஆம் பாகம் கல்பம் –25

" செங்கற்றாழைகள்"

மேற்படி மஞ்சள் பூ தை வேளையினின்று மேற்கே செல்லும் பாதையில் கூப்பிடு தொலைவில் உள்ள கசிவுத் தரைக்கு வடபுறமுள்ள ஓடைக்கு மேற்புறத்தில் 'செங்கற்றாழைகள்' உள்ளன அதன் மடல்களும் சோறும் சிவப்பாயும் பால் இரத்தம் போன்றும் இருக்கும்.

லா — லி — லு — என 108 உரு

செபித்து மடலைப் பிடுங்கி சோற்றைப்பீங்கானில் இட்டுப்பிசைந்து கழுவி உடன் சீனியும், நெய்யும் போட்டு உலர்த்திச் சூரணித்து தினமும் 2 வேளை வெருகடியளவாகச் சாப்பிட்டு வர. யானை வலிவுடன் காயசித்தியாகும்

— போகர் கல்பம் — 300

அக்த்தியர் பூரண சூத்திரம் . 216.

"செந்நாயுருவி"

மேற்படி இடத்தினின்றும் வடக்கே செல்லும் வழியில் மண்கண்டமான மேடும் அருகில் ஓடையும் அதற்கு வடக்கில் சமதளமான மண்தரையும் உள்ளன. அங்கு "செந்நாயுருவி" ச் செடிகள் உள்ளன. இதன் சமூலத்தை நறுக்கி வேண்டிய அளவு காரீயத்தைச் சட்டியிலிட்டு அதில் போட்டு சாம்பலாகும் வரை தேய்த்து வரச் செந்தூரமாகும். அதனைச் செம்பில் 10ல் ஒன்று கொடுக்கப் பத்து வயதாகும். செந்தூரத்தை அனுபானமறிந்து கொடுக்க 4448 வியாதிகளும் தீரும். குருமுப்பூவும் சேருதல் வேண்டும்.

— கருவூரார் வாதகாவியம் —700

"அமிர்த வள்ளிச் செடி"

மேற்படி செந்நாயுருவிச் செடியின் இடத்தருகில் கரும்பாறையும் அதன் அருகில் ஓடையும் அதற்கு வடமேற்கில் கூப்பிடு தொலைவில் வழியிலே "அமிர்த வள்ளிச் செடிகள்" உள்ளன அது குப்பை மேனி போலவும் இலை பழம் பாசி போலவும், பூ கொட்டாங் கரந்தை போலவும் இருக்கும். அந்தப் பூக்களைத் தினமும் சிறிதளவு 10 நாள் சாப்பிட வாயில் அமுரி ஊறிக் கொண்டே இருக்கும் அதனை விழுங்கிவரக் காய சித்தியாகும்.

"உரோம விருக்ஷம்"

மேற்படி அமுதவள்ளிச் செடிக்கு வடக்கே வந்து கிழக்கில் செல்லும் பாதையில் போனால் 1 மேடும் அதனுடைய முகப்பில் "இரட்டை லிங்கமும்" அதற்குத் தென்கீழ் மூலையில் "இராமதேவர் ஆசிரமமும்" அதனருகில் ஒரு ஆறும் உள்ளது.

ஆற்று நடுவில் ' உரோமவிருக்ஷும் இருக்கின்றது. சாம்பல் நிறமுடைய மரத்தினின்றும் உரோமம் சடை சடையாகவும் , பஞ்சு போல் மெதுவாகவும் இருக்கும்.

ஓம் சாம்பவிய அஷ்டபுஜம்கன்மா துர்காயா பரமேஸ்வரி நமோநமா – என 108 உரு

செபித்து மேற்பட்டையை எடுத்துச் சூரணித்துக் கொண்டு திரிகடி யளவாகத் தேனுடன் புசித்துவர நரை, திரை மாறி உடல் சித்தி பெறும். உண்டவனது அமுரி பஞ்சலோகத்தையும் வேதிக்கச் செய்யும். மேற்படி மரத்தின் தூரைத் துளைத்து அதனுள் இரசத்தைப் போட்டு அம்மரப்பட்டையினாலேயே மேற்படி 45 நாள் கழித்துப் பார்க்க இரசம் கட்டியாய் இருக்கும் அதனை எடுத்து முழப்புடமிட உருகி மணியாகும். அம்மணியை வாயிலடக்கிக் கொள்ளக் கத்தி வெட்டு குண்டு முதலியன உடலில் பாயாது. யானை வலுவுண்டாகும்

– ஞான சாஸ்திர திரட்டு சட்டை முனி கல்பவிதி 101.

" கரு நெல்லிமரம் "

முன்கூறிய உரோமவிருட்சம் இடத்தின்ருகில் உள்ள ஓடைக்குத் தெற்கில் அடர்ந்த காடும் அதற்கு மேற்கில் உள்ள நகவல் தரையில் " கரு நெல்லி மரமும் " உள்ளன. இது சாதாரண நெல்லி மரங்களைப் போல இருப்பினும் அடி, கிளை, காம்பு முதலியன கருப்பாய் இருக்கும். இதன் பட்டையை இரும்பு படாமல் " ஓம் அரகர சிவசிவா அரோகர அரோகர " என 1008 உரு செபித்துத் தட்டி எடுத்துச் சூரணித்து உடன் குருவை அரிசியும் காராட்டுப்பாலும் கூட்டிச் சமைத்து உண்டு வர உடல் சித்தி பெறும்

– கருவூரார் வாத காவியம் – 700

" நாகப்படக் கற்றாழை "

மேற்படி கருநெல்லியினிடத்தில் அருகில் பாம்புப்படம் எடுத்தது போன்று மடலில் வரிவரியாய் நீர்வடிந்து கொண்டேயிருக்கும் " நாகப்படக் கற்றாழை " உள்ளது. இதன் சமூலத்தைப்பிடுங்கிப் பால்விட்டு கலக்கி அருந்த 1 முகூர்த்தம் வரை மூர்ச்சையாயிருக்கும். அப்போது அருகிலிருந்து ஒருவர்

மூர்ச்சை தெளியும் வரை பால் அடிக்கடிக் கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். இதனால் நரை, திரை, மாறி யானையின் வலுவுண்டாகும்.

— சதுரகிரித் தலபுராணம்.

" தைலக் கிணறு "

மேற்படி நாகபடக் கற்றாழையினிடத்திற்கு வடகிழக்கிலுள்ள , சமதளத்தில் இருந்து கிழக்கே செல்லும் பாதையில் பெரிய பசுக்கிடையும் அங்கிருந்து கிழக்கில் வற்றாத நவ்வல் ஊற்றும், பாறையும் அதனருகில் பாம்புக் கேணியும், அதற்குக் கிழக்கில் கூப்பிடு தொலைவில் வழுக்கும் பாறையும் அப்பால் சரளைப்பாறையும் உள்ளன. அதனருகிலுள்ள பச்சரிசி மேட்டைக் கடந்து தேக்கம் பண்ணை மலைவழியில் கிழக்கில் 1/2 நாழிகை தூரத்தில் சின்னப் பசுக்கிடையும், ஒட்டைப்பலாவும் ஒப்பிலாசாயையும் அதற்குக் கிழக்கேயுள்ள கானாற்றின் தென்புறம் பலாமரமும் , கருப்பண்ணசாமி கோவிலும் சாமிக்குப்பின்னால் " காலாங்கி முனிவர் தைலக்கிணறும் " உள்ளன. அந்தக் கிணற்றுக்குக் கல்கதவும் போட்டு மூடி அதன்மீது பாறைக் கல்லைத் தூக்கி வைத்துள்ளது காவல் பலாவடிக் கருப்பனது உத்தரவின் பேரில் அந்தத் தைலத்தை எடுக்கலாம். ஆற்றினுள் பேச்சிப்பாறை இருக்கிறது ஆற்றின் வடபுறம் மேட்டில் " துர்வாசரிஷி" ஆசிரமமும் அதற்கு வடக்கில் " தில்லைமரம் " உள்ளது. இங்கிருந்து கூப்பிடு தொலைவில் கிழக்கில் வெள்ளைப்பாறையும் , சந்தன மகாலிங்க சுவாமி கோவிலும் ஓடையும் ஓடையின் மேட்டினின்று சிறிது தொலைவில் தெற்கு, வடக்கு , மேற்கு ஆகிய திசைகளில் பிரியும் முச்சந்தியும் உள்ளது அதில் தெற்குப் பாதையில் வழிபடு ஆற்றைக்கடந்து மேடேறினால் " சுந்தரர் கோவிலும்" ஆற்றின் தென் ஓரத்தில் " மகாலிங்கம் " கோவிலும் உள்ளன. இக் கோவிலின் மலைவளங்களைச் சதுர கிரித் தலபுராணம் நன்கு விளக்கும்.

" வெண்ணாவல் மரம் "

இந்த மலைக்கு மேற்கில் மேருகிரி, கைலாயகிரி, சந்திரகிரி, விஷ்ணுகிரி ஆகிய நான்கும் வடக்கில் கும்பகிரி, மயேந்திர கிரி, சஞ்சீவிகிரி, இந்திரகிரி ஆகிய நான்கும் கிழக்கில் சூரியகிரி,

குபேரகிரி சிவகிரி, சக்திகிரி ஆகிய நான்கும் தெற்கில் பிரம்மகிரி, சித்தகிரி இராமகிரி, உதயகிரி ஆகிய நான்கும் அரணாக இருப்பதால்தான் இம்மலைக்கு ' சதுரகிரி' என பெயர்வந்ததாம். சுந்தர மகாலிங்கம் கோவிலுக்கு வடபுறம் செல்லும் வழியில் ஒரு ஆறும் அதனைக் கடந்து வடக்கில் கூப்பிடு தூரத்தில் மேற்கு முகமாக உள்ள அடர்ந்த காட்டைத் தாண்டி 1/2 நாழிகை தொலைவில் பெரியகாவும் அதனுள் 1/2 நாழிகை தூரத்தில் ' சந்தன மாகாலிங்கம் ' கோவிலும் அதற்கு வடக்கில் காளிக்கானலில் இருந்து வரும் ஓடைத்தீர்த்தமும் உள்ளன. இந்தச் சந்தன மகாலிங்கத்திற்கு தேவ,ரிஷி, முனிவர்கள் தவிர மனிதர்களின் பூசை வழிபாடு கிடையாது. இக்கோவிலின் தென்மேற்கு மூலையில் சிறிது தூரத்தில் " சட்டைமுனி " குகையும் குகைக்குத் தெற்கில் கூப்பிடு தொலைவில் உள்ள சம தளத்தில் " வெண்ணாவல்" மரமும் உள்ளன. இதன் இலைகள் நீண்டும் பூ, காய், பழம், மரம் வெண்மையாயும் இருக்கும் பழம் இனிக்கும் வேரின் பட்டையை நீக்கி எடுத்துக் குழித்தைலமிறக்கி அதில் தாமிரத் தகட்டைக்காய்ச்சி 40 முறை தோய்த்து எடுக்க வெண்மையாகும். அதனைச் செந்தூரமாக்கி 3 நாள் சாப்பிடக் காய சித்தியாகும்.

— அகத்தியர் பூரண்சூத்திரம் 216

" வனப்பிரமி "

மேற்படி வெண்ணாவலிடமிருந்து அருகில் குமுதம் போல் ஒரு மண்மலையும் , மலைக்குத் தெற்கில் உள்ள சமதளமான மண் கண்டத்திற்குப் பத்துமுழ நீளத்திற்குள் ' வனப்பிரமி ' உள்ளது. இது கொடியாக படர்ந்தும் இலை நெல்லியிலை போலச்சிறிது தடிப்பாயும் இருக்கும். ஞாயிற்றுக்கிழமை , பூச நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் சாபநிவர்த்தி செய்து சமூலம் எடுத்துச் சூரணித்துப் புளித்த காடியில் கலக்கித் தினம் 1 கரண்டி உள் கொள்ள காயசித்தியாகும்

— போகர் கல்பம் 300

"முப்பிரண்டை"

மேற்படி வனப்பிரமி இருக்கும் இடத்தினருகில் "முப்பிரண்டை"க் கொடிகள் படர்ந்துள்ளன. இது மற்றவை போலன்றி மூன்ற பட்டைகளுடன் இருக்கும். அதனை " வங் ரங் கிலி" - என 108 உரு செபித்து சூதத்திற்கு சுருக்குக் கொடுக்கக் கட்டும். அதில் சமனெடை நாகத்திற்குக் கொடுக்க கண்விட்டாடும் , இரண்டும் உருகி நிற்கும். இந்த எடைக்கு எடை கெந்தி கூட்டி மேற்படி பிரண்டைச் சாற்றால் அரைத்து வில்லை தட்டி உலர்த்திக் குகையிலிட்டுச் சீலை மண் செய்து 10 எருவில் புடமிடச் செந்தூரமாகும். அதனைத் தேனில் குழைத்துச் சாப்பிட நரை, திரை மாறிக் காய சித்தியாகும்

– கருவூரார் வாதகாவியம் 700

" கரிப்பான் "

மேற்படி சட்டை முனிவர் குகையிலிருந்து கிழக்கே வரும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் சந்திக்கும் வடக்கே 4 நாழிகை தூரத்தில் கும்ப மலையும், அதனருகில் " அகத்தியர் " வாசம் செய்யும் ஒரு குகையும் உள்ளன. மலைமீது 1 நாழிகை தொலைவில் 'கரிப்பான்' செடிகள் உள்ளன. அதனைப் பூசமும் ஞாயிறும் கூடும் தினத்தில் சமூலத்தை எடுத்து நிழலில் உலர்த்திச் சூரணித்து வெருகடியளவாகக் காடியில் அரைத்து அருந்தவும். பாகல் , கத்தரி, கடுகு, நீக்கவும். இப்படியாக 1 மாதம் சாப்பிடச் சகல நோயும் தீரும் 4 மாதம் சாப்பிட உடல் அழகு பெறும் , 6 மாதம் சாப்பிட சகல சித்திகளுண்டாகும் 10 மாதம் சாப்பிட 100 ஆண்டுகள் வாழலாம்.

– உரோமரிஷி –500.

" சோதிப்புற்கள் "

மேற்படி கரிப்பான் செடிகளுக்கு அருகில் இன்டஞ் செடிகள் படர்ந்துள்ளன. அதனுள் நுழைந்து கூப்பிடு தூரத்தில் செல்ல மண் கண்டமும், அதன் தென் மேற்கு மூலையில் 'சோதிப்புற்கள் ' ஏராளமாக முளைத்துள்ளன. அவை புல்லைப்போல் மஞ்சள் நிறமுடனும், 4 விரல் உயரமும் இரவில்

தீ போல் ஒளியுடனும் காணும். அதனைப் பால் விட்டரைத்துப் பாக்களவு வீதம் 40 நாள் சாப்பிட நீண்ட ஆயுள் கிட்டும். புல்லை அரைத்துக் குகை பிடித்து அதனுள் வேண்டிய அளவு இரசம் விட்டு நன்கு பொதிந்து சீலைமண் செய்து 100 எருவில் புடமிட சூதம் கட்டிச் செந்தூரமாகும். இதில் வெள்ளி 100க்கு 1.விட 10 மாற்று ஆகும் , செந்தூரத்தை நெல் எடை சாப்பிட சகல யோகமும், யானையின் வலுவும் உண்டாகும்.

– அக்த்தியர் தத்துவம் – 300

" சிவந்த இலைக்கள்ளி "

மேற்படி கும்ப மலைக்கு மேற்கில் உள்ள பல வனங்களையும் மலை ஆறுகளையும் கடந்து வர முனீஸ்வரன் எல்லை வரும். அங்கிருந்து படிவெட்டிப் ப்ாறை வழியே 2 நாழிகை தூரத்தில் காற்றாடி மேடையும் அதனைக் கடந்து கூப்பிடு தொலைவில் குடைக்காரன் கல்லும், முடங்கி வழியும் ,கங்கன ஆறும் , அங்கிருந்து கூப்பிடு தொலைவில் குளிராட்டிப் பொய்கையும் இதன் தென்மேற்கு மூலையில் " போக முனிவர் வனமும் " அதற்கு மேற்கில் கூப்பிடு தொலைவில் தில்லை விருக்ஷமும் அதற்கு தெற்கில் சீயக்காய்ச் செடிகளுள்ள புதையும், அதற்கப்பால் வட்டப்பாறையும் உள்ளன. பாறைக்கு மேற்கிலுள்ள பெரிய வனத்தின் கீழ்ப்புறம் உள்ள ஓடையின் அருகில் ' சிவந்த இலைக்கள்ளி ' ச் செடிகள் உள்ளன. இதன் இலையை அரைத்து இரு குகை செய்து உலர்த்தி செம்புத்தொட்டிப் பாஷாணத்தைச் சுத்தித்து அறுவகைச் செயநீரில் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி - மேற்படி குகையினுள் வைத்து அதே குகையால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கன புடமிட பற்பமாகும். அதனை நெய்யுடன் சாப்பிட்டால் காயசித்தியாகும்.

– போகர் கல்பம் 300.

" ஏரழிஞ்சில் மரம்"

மேற்படி பேர்க்ரிஷி ஆசிரமத்திற்குத் தெற்கே வரும் பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் அழகிய பூஞ்சோலையும் அதனுள் 'புசுண்டர் ஆசிரமமும்' அதற்கு வடமேற்கில் கூப்பிடு

தொலைவில் 'மாத வேதிச் சுனையும்' அதற்கு மேற்கில் அழுகண்ணிச் செடிகளும் உள்ளன. அங்கிருந்து மேற்கில் கூப்பிடு தொலைவிலுள்ள மண் திட்டிற்கு வடக்கில் செல்லும் பாதையில் சிறிது தூரத்தில் குண்டுக் கற்களால் ஆன பாதையும் அப்பாதையில் கல்லெறி தூரத்தில் தொழுகண்ணிச் செடிகளும் உள்ளன. புசுண்ட மகரிஷி ஆசிரமத்திற்குத் தென் மேற்கில் 1/2 நாழிகை தூரத்தில் எல்லைக் குட்டமும் மண்மலைக்காடும் அங்கிருந்து கூப்பிடு தொலைவில் மரங்கள் சூழ்ந்த "உரோமரிஷி" ஆசிரமமும் அதற்குக் கீழ்புறம் சற்று தூரத்தில் "ஏரழிஞ்சில் மரமும்" உள்ளன. இம்மரத்தை சுற்றித் தூரில் வைக்கோலைச் சுற்றிச் சாணியைத் தடவி வைத்தால் பழம் பழுக்கும் சமயம் கீழே விழும் விதை சாணியிலும் வைக்கோலிலும் விழும் அதனை

ஓம் வைராவா ஓங்கார வைரவா - என 1008 உரு

செபித்து எடுத்துக் குழித் தைலம் இறக்கலாம் அல்லது சூடன் கூட்டி அரைத்து வெய்யிலில் வைக்க 7 நாளில் தைலம் இறங்கும். செந்தாமரைத் தண்டு நூலைத் திரியாக்கி மேற்படி தைலத்தால் விளக்கு எரித்து வரும் புகையை பேரண்ட ஓட்டில் மைபற்றவைத்து எடுத்து நகக்கண் உள்ளங்கை புறங்கை இவற்றில் தடவி நெற்றியிலும் திலகமிடப் பிறர் கண்ணுக்கு மறையலாம். சர்வ லோகமும் தெரியும்.

"செங்கொடி வேலி"

முன்கூறிய ஏரழிஞ்சில் மரத்திற்கு வடக்கில் போகும் பாதையில் கூப்பிடு தூரத்தில் கடும் பாறையும் அதற்கு மேற்கில் சற்று தள்ளி பேச்சிப் பாறையும் அதற்குக் கீழ்புறமுள்ள கசிவுத் தரையில் சிவப்புத் தண்டுகளையுடைய 'செங்கொடி வேலிச் செடிகள்' உள்ளன. அதன் இலைச் சாற்றைச் சாதத்தில் இட்டு உண்ணக் கிழத்தன்மை நீங்கும். பட்டை அல்லது தண்டைச் சாதத்துடன் சாப்பிட உடல் பொன்னிறமுடன் நரை, திரை மாறி நீர், மலம் பேதித்து யானை வலிவுடன் நீண்ட காலம் இருக்கலாம் பால், அன்னம் உண்டு அறுசுவை நீக்கவும்.

— கருவூரார் வாத காவியம் — 70

" சாயா விருக்ஷம் "

மேற்படி செங்கொடி வேலிக்கு அருகில் உள்ள (கூப்பிடு தொலைவில்) திட்டின் வடக்கே பெரிய கெவியும் அதனைக் கடந்து மேடேற இன்னொரு வாதமேடும், அதற்கும் வடக்கிலுள்ள சதம்புத் தரைக்கு மேற்புறம் கருங்கொடி வேலிச் செடிகளும் உள்ளன. உரோமரிஷி வனத்தின் தென்புறம் சற்றுத் தள்ளி உள்ள மண்மலைச் சரிவுப் பள்ளத்தில் இறங்கிச் செல்ல " யூகி முனிவர் வனமும் " அதற்கு வடமேற்கில் மண் திட்டும் உள்ளன. இதற்கு வடக்கில் உள்ள ஓடையில் " காந்த மரம் எனப்படும் . ' சாயா விருக்ஷம் ' உள்ளது இதன் நிழல் சாயாமல் இருந்த நிலையிலேயே இருந்ததால் இப்பெயர் வந்தது. சாம்பல் நிறமுடைய மரத்தின் இலைகள் புன்னை இலை போலும் காய் சுருண்ட வெள்ளரிக்காய் போலும் இருக்கும். இம்மரப்பட்டையைச் சீவி வடியும் நீல நிறப்பாலில் சூதத்தைவிட்டு சூரிய புடமிடக் கட்டும். பால் பிசின் போல் ஆகும். இதைப் புசித்துவர நாதம் இருகும். கட்டிய சூதத்தைச் செந்தூரமாக்கி நெய்யில் குழைத்து 10 நாள் காலைமாலை உண்ண காயசித்தியாகும்

– மச்சமுனி – 800

" சேர்ந்தாடும் பாவைச் செடிகள் "

மேற்படி சாயா விருக்ஷம் உள்ள இடத்தினின்றும் கூப்பிடு தொலைவில் செம்மண் தரையில் " சேர்ந்தாடும்பாவைச் செடிகள் " உள்ளன அவை குத்துக்கால் சம்மட்டிச் செடிபோலும் இலை பொடியாயுமிருக்கும். இந்த இலைச் சாற்றில் சூதத்திற்கு சுருக்குக் கொடுக்கக் கட்டும். கட்டிய சூதத்தைச் சாயாவிருக்ஷப்பாலில் 7 நாள் ஊறவைத்துப் புடமிட்டுச் செந்தூரமாக்கிப் பசுவின் நெய்யுடன் உட்கொள்ள நரை, திரை, மாறி உடல் சித்தியாகும் .

–சதுரகிரித்தலப்புராணம்.

" பஞ்சதரு (கற்பகதரு) "

மேற்படி யூகிமுனி வனத்திற்கு மேற்கில் வந்து தெற்கே போகும் பாதையில் 1/2 நாழிகை தூரத்தில் உள்ள ஆற்றைக் கடந்து மேடேற பனிஙர் குடிலும் அதனருகே சுந்தரலிங்கர் சன்னதியும் அங்கு தென் வடலாக ஓடும் ஆற்றின் மேல்

பாகத்தில் " சுந்தரானந்தர் குகையும் " அங்கிருந்து மேட்டில் தெற்கே போகும் பாதையில் சற்றுத் தொலைவில் மகாலிங்கர் சன்னதியும் இருக்கின்றன. இதற்குப்பின்புறம் " பஞ்சதரு எனும் கற்பகதரு" உள்ளது. இம்மரத்தின் தூரினின்று ஐந்து கொம்புகள் பிரிந்து ஒவ்வொன்றிலும் வெவ்வேறு விதமான இலைகள் காணும். இதன்பட்டையைத் தினமும் 1 காசெடை வீதம் பாலில் அரைத்துப் பாலுடன் அருந்த உடல் வலிவு பெறும். இம்மரத்தைத் தட்டி பால் எடுத்து காசெடை வீதம் 1 மண்டலம் உட்கொள்ளத் தேக சித்தியாகும்

— சதுரகிரித் தலபுராணம் .

" சஞ்சீவி மூலிகை"

மேற்படி தருவிற்கு மேற்கில் கூப்பிடு தொலைவில் வட்டச்சுனையும் ஒரு ஓடையும் அதற்கு மேற்புறம் உள்ள கானலினருகில் கரும்பாறையும் அதற்கு வடக்கே செங்கடுக்காய் மரங்களும் உள்ளன. இங்கிருந்து மேற்கில் கூப்பிடு தொலைவிலுள்ள செம்மண் தரையில் " எமனை வென்றான்" எனும் "சஞ்சீவி மூலிகை" இருக்கிறது. இவை சிறியதாக நல்ல மணமுடன் காவல் முள் போன்ற இலைகளுடனிருக்கும். இந்த இலைச் சூரணத்தை பேய்ச்சுரைக் குடுக்கையினுள் அடைத்து வைத்துக் கொண்டு அகால மரணம் அடைபவர்களது நாசியினுள் குழாய் வழியாக ஊத உயிர்பெற்றெழுவர். வெட்டுப்பட்ட சதைகளில் இந்த இலைச் சாற்றைப்பிழிய வெட்டுப்பட்ட இடம் தெரியாமல் மறைந்துவிடும். இலையின் சாற்றை மூர்ச்சையுண்டோர்களது மூக்கிலிட மூர்ச்சை தீரும்.

— சதுரகிரித் தலபுராணம்.

" பறவைப்பாம்பு, கருங்குரங்கு"

மேற்படி இடத்தினின்று மஞ்சள் ஊற்றும் அதற்கு வடக்கே சற்றுத் தொலைவில் கல்புடவும் அதன் கீழ்ப்புறம் சதம்புத்தரையில் சாதாரண நெல்லி மரங்களும் அங்கிருந்து கிழக்கேயுள்ள கசிவுத் தரையில் ' அழகானந்தர் ' ஆசிரமும் அதற்குவடபுறம் கருநெல்லி மரமும் உள்ளன. இங்கிருந்து

கிழக்கே கூப்பிடு தொலைவில் கருங்கானலும் அதில் ஓடும் ஓடைக்கு மேல்புறம் ' மாவுலிங்க மரமும் ' நடுவில் அரிநெல்லி மரமும் உள்ளன. இங்கிருந்து கிழக்கே மகாலிங்கர் சன்னதியும் அதற்குத் தெற்கில் ' பறவைப் பாம்பு, பறவைக்கீரி, பறவை சாட்டான் ' முதலியன வசிக்கும் அடர்ந்த சன்னாசி வனமும், வனத்தின் மேல் மூலையில் உள்ள அத்திமரத்தின் மீது மண்டிக்கிடக்கும் ' கருங்கழுகுகள் ' ஆள் வாடை கண்டால் பறந்து விடும். எனவே அதன் இறகுகள் மரத்தினடியில் உதிர்ந்து கிடக்கும். நாவற்பழம் போல் கருப்பு நிறமுடைய அந்த இறகுகளை எடுத்துக் கண்முன் வைத்துப்பார்க்க 11 லோகமும் தெரியும். இறகை எரித்து கருக்குடன் நெய், புனுகு, சவ்வாது விட்டரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு திலகமிட தூரத்திலுள்ளவர் அருகில் தெரிவர். தன் உருவைப் பிறர் அறியாமல் முற்றும் துறந்த மெய்ஞானியாவர்.

— கருவூரார் வாத காவியம் –700

" உரோம வேங்கை மரம் "

மேற்படி சன்னாசி வனத்திற்குத் தெற்கில் 1 நாழிகை தூரத்தில் ஓடையும் சங்கிலிப்பாறையும் அங்கிருந்து கூப்பிடு தொலைவில் 'பிரம்மமுனி' ஆசிரமும் அங்கிருந்து தென்கிழக்கில் உள்ள மண்திட்டில் 'உரோமவேங்கைமரம் ' உள்ளது. இது வேங்கைமரம் போல் இருப்பினும் அதன் விழுதுகள் கவரிமான் சடை போல் 1 முழநீளத்தில் தொங்கும் மரப்பட்டையை வெட்டக் குருதி போல் பால் வழியும் ' அரகரா சிவசிவா ' - என 108 உரு செபித்து அந்தப் பாலை எடுத்துப் பொன்னுக்குச் சுருக்குக் கொடுத்துப் பற்பமாக்கி சாப்பிட உடல் சித்தியாகும். அந்தப்பாலில் சாதி லிங்கத்தை சுருக்கக் கொடுக்கக்கட்டும் (இரண்டு நாள் ஊறவிட்டாலும் கட்டும்) அதனை உமிக்காந்தலிலிட மெழுகாகும் அதில் சிறிது வெள்ளி உருக்கி முகத்தில் கொடுக்கப் பழுத்து 10 மாற்றாகும். அதனைச் செந்தூரமாக்கியுண்ண காயசித்தியாகும்

— போகர் கல்பம் –300

" இருப்பவல் செடி "

மேற்படி ஷோடி வேங்கை யினின்று சற்று தூரத்தில் செவ்வல்தரையில் " இருப்பவல் செடிகள் " இருக்கின்றன. இதன் இலைகள் அவலைப் போலிருக்கும். செடிகள் சமூலத்தை அரைத்து இரும்புத் தகட்டிற்குள் பொதிந்து பழுக்கக் காய்ச்சி இதன் சாற்றில் சுருக்கிட்டு எடுத்து உருக்கிப் பயிற்றங் கள்ளிச் சாற்றில் சாய்த்திட வெள்ளி போலாகும், மீண்டும் அச்சாற்றில் சுருக்கிட்டு இலையை அரைத்துக் கவசம் செய்து கெசபுடமிடச் செம்பாகும். அதனைச் செந்தூரமாக்கி உண்ண தேகம் சித்தியாகும். — கருவூரார் வாத காவியம் 700.

" சுணாங்க விருக்ஷம் "

மேற்படி பிரம்ம முனிவனத்தின் தெற்கே 1 நாழிகை தூரத்தில் மலைச் சரிவில் ' காலாங்கிநாதர் குகையும் ' அதற்குக் கீழ்புறம் சற்றுத் தொலைவில் ' தசவேதி உதகச் சுனையும் ' அதற்குக் கீழே சோதி விருக்ஷமும் உள்ளன. குகைக்குத் தெற்கே கூப்பிடு தொலைவில் உள்ள பசுக்குகைக்கு வடபுறம் கற்கண்டு மலைகளும் அதற்குக் கீழ்புறம் அடிவாரத்தில் ' சுணங்க விருக்ஷம் ' இருக்கிறது. அதனடி கருத்தும் இலைகள் விரலளவு நீளத்தில் சுருக்குகளுடன் தடிப்பாகவும் இருக்கும். நாய்க்குட்டியின் வடிவிலுள்ள அம்மரத்தின் கனிகள் கீழே விழுகையில் நாய் போலக் குரைத்துக் கொண்டே விழும். அப்படி விழுந்தபழம் 10 வினாடி கழித்து மீண்டும் அம்மரத்துடன் போய் ஒட்டிக் கொள்ளும் அக்கனியை அறுத்துப் பார்க்க வெண்ணெய் போலிருக்கும்.

'ஓம் அரகர சிவசிவ சரவணபவா' - என 108 உரு செபித்து எடுத்து துட்டெடைவீதம் சாப்பிட 12 நாள் வரை மூர்ச்சை யுண்டாகும். அப்போது அருகில் ஒருவர் இருந்து பாலும் தேனும் கூட்டி மூர்ச்சை தெளியும் வரை கொடுத்துவர 13 ஆம் நாள் மயக்கம் தெளியும். இதனால் சகலசித்திகளுடன் தேகசித்தியுண்டாகும்

— புலஸ்தியர் கல்பம் 300.

" பவளத் துத்திச் செடி "

மேற்படி பசுக்குகைக்கு வடக்குப் பாதையில் மகாலிங்கர் சன்னதியும் அங்கிருந்து கிழக்கே 1/2 நாழிகை தூரத்தில் கன்னிமார் கோயிலும் பளிங்கர் குடில்களும் அங்கிருந்து தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் அடர்ந்த 'நந்தீஸ்வரர் வனமும்' வனத்திற்குத் மேற்கிலுள்ள மண்திட்டில் " கணைஎருமை" விருக்ஷம் உள்ளன. மண்திட்டிற்கு வடக்கில் சற்றுத் தொலைவில் மணற்பாங்கான தரையும் அதற்கு வடக்கில் கூப்பிடு தொலைவில் " பவளத்துத்திச் செடிகள் " உள்ளன. துத்திச் செடிபோல் 1 ஆள் உயரத்தில் சிவப்பு நிறமுடன் இருக்கும். அதனிலைச் சூரணத்தை வெருகடியளவு ஆவின் நெய் கூட்டி 1 வாரம் உட் கொள்ள காயசித்தியாகும்.

— கருவூரார் வாதகாவியம் —700

" கருநொச்சிச் செடிகள்"

முன்கூறிய தன்வந்திரி வனத்திற்கு வடக்கே வரும் பாதை நேர்கிழக்குப்பாதையுடன் சேருகிறது. அதனின்றும் தெற்குப் பாதையில் செல்ல வடபுறத்தில் எமபுரக்கானலும் , தென்கிழக்குப்பாதையில் சற்றுத் தூரத்தில் வாத மேடும் அங்கு வெள்ளைப் பிள்ளையார் கோயிலும் அங்கிருந்து சற்று தொலைவில் சதம்புத் தரையும் அங்கிருந்து தெற்கில் 'குருராசரிஷி' வனமும் உள்ளன. வனத்திற்கு வடக்கே மூன்றடி உயரத்தில் கருப்பு இலைகளையுடைய ' கருநொச்சிச் செடிகள் ' உள்ளன அதன் வேரை ' ஓம் ஸ்ரீங் வருக வருக ' -என 16 உரு செபித்துப் பிடுங்கிச் சூரணித்துச் சிறுநீரில் பிசைந்து வெள்ளி, செம்பு சேர்த்து உருக்கு முகத்தில் கொடுக்கப்பேதிக்கும். அதைச் செந்தூரமாக்கி உண்ண உடல் சித்தியாகும்.

— புலஸ்தியர் கற்பம் — 300

" கருநாரத்தை மரம் "

மேற்படி நொச்சிச் செடிக்கு தெற்கில் சற்று தூரத்தில் 'கருநாரத்தை மரமுள்ளது'. அதன் அடி கருத்தும் பெருத்தும் காய்,

பனங்காய் போலும் இருபிளவான இலைகளும் வண்ண மலர்களுடனும் இருக்கும். இதன் பழச்சாற்றில் செம்பை உருக்கிச் சாய்க்க பேதிக்கும். அதனைச் செந்தூரமாக்கி உண்ண யானை வலுவுடன் தேக சித்தியாகும்.

" நாகதாளிச் செடி "

மேற்படி குருராசரிஷி வனத்திற்கு வடக்கே வந்து கிழக்கே 1/2 நாழிகை தூரம் செல்ல மண்மேடும் அதனருகிலுள்ள வனத்தில் ' கொங்கணவர் ' ஆசிரமும் அங்கிருந்து தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் ' சோதி விருக்ஷம் ' உள்ளது. இங்கிருந்து வடக்கே சற்று தொலைவில் பூஞ்சுனையும் சுனையின் வடக்கே ' சீயக்காய்ச் செடிப்புத்ரும் ' புதருக்குத் தெற்கே ஒரு பெரிய குத்துக்கல்லும் அங்கிருந்து தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் மணல் தரையும் உள்ளது. அங்கு 'நாகதாளிச்' செடிகள் இருக்கின்றன அதன் சமூலத்தை

"ஓம் வாசுகி அனந்தபற்ப சங்கு பாலகா " - என 1008 உரு செபித்துப் பிடுங்கிச் சூரணித்து வெருகடியளவு தேனுடன் 1 மண்டலம் உட்கொள்ள குபிடம், குன்மம், காசம், ச்யம், முதலிய கொடும் நோய்கள் நீங்கும்.

— சுந்தரானந்தர் குருநூல் 110.

" சிவந்த புனல் முருங்கை மரம் "

மேற்படி கொங்கணவர் வனத்தின் கிழக்கே எல்லைக் குட்டமும் அங்கிருந்து தெற்குப்பாதையில் மலை மெத்தாப்பிற்குப் போய்த் தென் சரிவில் 3 நாழிகை தொலைவில் வரத் தபோவனம் என்ற மாவூற்றும் வரும். இது சிவன் தன் ஜடாமகுடத்தினின்றும் 1 துளி தீர்த்தத்தைச் சித்தர்களுக்காக விட அத்துளி ஊற்றாகி நாளடைவில் பெரிய தெப்பமாக பெருகி உள்ளது என்பர். பல முனிவர்கள் யாகம் செய்து ஓமம் வளர்த்துத் தவம் புரிந்து சிவபெருமானைத் தரிசித்தபின் இறைவனை இடையிறாது தரிசிக்க வழி செய்ய வேண்டும் என வேண்ட, சிவனும் கருணை கொண்டு

மகாலிங்க மூர்த்தியாக வடிவெடுத்துத் தரிசனம் கொடுத்துக் கொண்டு இருப்பதாகவும் அதனால் அந்த மாவூற்றில் முழுகப் பாவங்களும் தீரும் எனவும் கூறுவர். இதற்கு வடக்கில் உள்ள உதயகிரியில் மலைமீது சற்றுத் தொலைவில்' உதயகிரிச்சித்தர்' வாழும் குகையும் அதன் வடக்கே சோதி விருட்சமும் உள்ளன. இங்கிருந்து கிழக்கே சற்றுத்தூரம் சென்ற பின் வடக்குப் பாதையில் 1/2 நாழிகை தூரம் செல்ல எல்லைக்குட்டமும், எமபுரக்கானலும் அதற்கு மேற்புறம் செல்லும் பாதையில் சற்றுத் தொலைவில் யானை படுத்திருப்பது போன்றதொரு கல்லும் அதற்குத் தெற்கில் சற்றுத் தூரத்திலுள்ள மண் தரையில் 'சிவந்தபுனல்முருங்கை' மரங்கள் உள்ளன. இம்மரப்பட்டையைத் தட்டியெடுத்து கழஞ்சளவு இரும்பை விரல் நீளத் தகடாக்கி. உமியோட்டில் கரியிட்டு ஊதிப் பழுக்கும் சமயம் அதில் மேற்படிப்பட்டையை காசளவு வீதம் பாக்குடன் கூட்டி மென்ற சாற்றை உமிழப் பத்துவயதாகும். அதன் பிசினை, உப்பு, புளி, நீக்கிப்பணஎடை வீதம் 1 மண்டலம் உட்கொள்ள கல்பகோடிக் காலம் வாழலாம் (மேற்படி சதம்புத்தரையின் வடக்கே 'பிரிஞ்சவமுனிவர் ஆசிரமமும்' அதற்கு வடகிழக்கு மூலையில் உள்ள சதம்புத் தரையில் சஞ்சிவி மூலிகையும் உள்ளன.)

"பால்பட்டை மரம்"

மேற்படி சரளத் தரைக்குக் கூப்பிடு தொலைவில் மேற்கில் மலையோடையும், அதனைக் கடந்து சற்றுத் தூரத்திலுள்ள ஆற்றோரத்தில் யானைக் குட்டியைப் போன்ற வெள்ளைப்பிள்ளையாரும் உள்ளன. அதனை அருகில் சென்று பார்க்கப் பாறைபோலும் தூரத்தில் பார்க்கப் பிள்ளையார் போலும் தோன்றும் அதற்கு மேற்புறம் செல்லும் பாதைக்கு வடக்கே பெரிய வனமும் அதனுள் ' மேகசஞ்சாரரிஷி' ஆசிரமமும் அதனருகில் சேங்கொட்டை மரங்களும் உள்ளன. பிள்ளையார் கோயிலுக்கு மேற்கே 1 நாழிகை தூரத்தில் பாதையின் வடக்கே வாத மேடும் அங்கு 18 சித்தர்கள் கூடி இரசவாதம் செய்கையில் சுட்டதால் உருக்குப் போல் கருப்பு நிறமுடன் கற்குவியலும் அங்கிருந்து மேற்கில் சற்றுத்தூரத்தில்

தென்புறத்தில் 'தத்துவ ஞானசித்தர்' குகையும் அதன் மேற்கில் 'சோமவிருக்ஷமும்' உள்ளன. குகைக்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத் தில் சிறு குட்டமும் அதற்கு மேற்கே 3/4 நாழிகை தூரத்தில் 'கன்னிமார் கோவிலும்' அங்கிருந்து தெற்கில் சற்று தூரத்திலுள்ள 'கால மகரிஷி' ஆசிரமத்திற்கு மேல்புறத்தில் "கரு ஊமத்தைச் செடிகள்" உள்ளன. சதுரகிரி மகாலிங்கர் சன்னதிக்கு வடக்கே ஒரு ஆறும் ஆற்றின் தென்புறம் பிரியும் வடக்குப் பாதையில் (மேற்குப்பாதை தானிப்பாறை செல்லும்) 2 நாழிகை தூரத்தில் குளிராட்டிப் பொய்கையும் அதற்குத் தெற்கில் எல்லைக் குட்டமும் அதற்கு மேற்கில் சற்றுத் தொலைவில் 'வீடணமுனிவர்' ஆசிரமமும் உள்ளன. இதற்கு வடபுறத்தில் 'பால்பட்டைமரம்' உள்ளது. இதனடி பெருத்து வெள்ளையாயும் சிறிய மலர்களும் 2 விரல் கடையளவு இலைகளும் கொண்டு கடுக்காயளவு காய்களுடன் பழங்களைக் கொண்டு பறவைகள் தின்பது போல மென்மையாகவும் இருக்கும். இம்மரப் பட்டையை மேற்புறணி நீக்கி அரைத்துப்பாலுடன் அருந்த யானை வலுவுடன் தேக சித்தியாகும்

— திருமூலர் கருக்கிடை 600

"அகில் மரம்"

மேற்படி பால்பட்டை மரத்தினின்று மேற்கே செல்லும் பாதையில் (வடக்குப் பாதை முனீசுவரர் எல்லை செல்லும்) 1/2 நாழிகை தூரத்தில் குபேரகிரி மலையும் அங்கிருந்து திருகைக்கல்பாறையும், அதனருகில் வற்றாத நீரையுடைய துலுக்கன் மொட்டை ஊரணியும் அதற்கு மேற்கிலுள்ள 'யாகோபுமுனி' ஆசிரமத்திற்கு வடபுறம் சற்றுத் தொலைவில் 'அகில்மரமும்' உள்ளது. இம்மரம் பெரியதாயும் 1 அங்குல நீளமுள்ள இலைகளுடனும் காய் சுண்டைக்காய் அளவாகப் பறவைகளால் உண்ணப் படுவதாயும் இருக்கும். இம்மரப்பட்டையை சந்தனம் போலரைத்து உடலில் பூசிவர வலுவின்றி பருத்துள்ள தூலதேகத்தை இருகச் செய்து உடலின் துர்நாற்றம் கை, கால் அசதியை நீக்கித் திட சரீரமாக்கும்.

'பாதிரி மரம்'

மேற்படி ஆசிரமத்தின் மேற்குப் பாதையில் சற்று தூரத்தில் எருது விரட்டிக் கானலும் அங்கிருந்து 1/2 நாழிகை தூரத்தில் சின்ன வாழி, பெரிய வாழி என்ற கானலும் அங்கு 'பிருங்கி முனிவர் ஆசிரமமும் அதற்கு மேற்கில் 1/2 நாழிகை தொலைவில் தேக்கம் பண்ணையும் எல்லையும், வடக்குப். பாதையில் ' பண்டாரப்பன்' கோயிலும் உள்ளது. இங்கிருந்து வடக்கே கீழிறங்கி கூப்பிடு தூரத்தில் வாழி மெத்தை தொழுக்கானலும் அங்கிருந்து மேற்குப் பாதையில் கட்டளை கெசத்தினுள் ' பாதிரி மரமும் ' உள்ளன இதன் அடி பெருத்து 2 விரற்கடையகலமுள்ள இலைகளுடன் குளிர்ந்த மணமுடைய மஞ்சள் நிறப்பூக்களைக் கொண்டிருக்கும். இம் மரத்தின் வேரைக் குழித்தைலமிறக்கி பணவெடை வீதம் தேனுடன் 5 நாள் காலையில் மட்டும் அருந்தத் தேசசித்தி யுண்டாகும்.

" கடுக்காய் மரம் "

மேற்படி யானைக் கெசத்தினின்றும் 1/2 நாழிகை தூரத்தில் கரும்பாறையும் அங்கிருந்து மேற்கில் வருசநாட்டு மலையும் மலைமீது 2 நாழிகை தூரத்தில் ஊர்களும், மேலும் 1நாழிகை தூரத்தில் பால்வண்ணன் கோவிலும் அங்கிருந்து மேற்குப் பாதையில் உள்ள வனத்தில் ' காளிங்க மகரிஷி ' ஆசிரமமும் உள்ளன. அருகில் உள்ள சதம்புத்தரையில் ' கடுக்காய் மரம் ' இருக்கிறது. மரம் கருப்பாயும் புரசு இலைகள் போல் சிறிய இலைகளுடன் வாதாங்கொட்டையளவு வழுவழுப்பான மஞ்சள் நிறக் காய்களுடன் இருக்கும். இதன் பிஞ்சுக் காயைக் குடிநீரிட்டு அருந்த மலம் இளகும், நுரையீரல் நோய் தீரும். விதை நீக்கிய 12 பலம் கடுக்காய் 1/4 படியளவு குடிநீரிட்டு இறக்கி அதில் திரிகடுகு, ஓமம், இஞ்சி, சிவதை வகைக்கு 1 ரூபாய் எடை சூரணம் போட்டு 1/8 படி பசுநெய், சிறிது சர்க்கரை கூட்டி லேகியம் கிண்டி புன்னையளவு சாப்பிட்டு வரக் காயசித்தியாகும்.

– போகர் கல்பம் 300.

" தேற்றான் மரம் "

மேற்படி சதம்புத் தரைக்கு மேற்கே 2 நாழிகை தூரத்தில் மயிலாடும் பாறையும் அதற்கு மேற்கேயுள்ள சிற்றாற்று ஓடையைக் கடந்து 1 நாழிகை தொலைவில் உள்ள கருங்கானலுக்குள் ' மார்கால மாமுனிவர் ஆசிரமம்' அதற்கு 1/2 நாழிகை தூரத்தில் நரசிங்கபுரக் கோட்டையும் அங்கிருந்து கொங்குரேவுக்கானலுக்கு பிரியும் பாதையைக்கடந்து 1 நாழிகை தொலைவில் கடமலைக் குண்டும், அதற்கு மேற்கே 2 நாழிகை தூரத்தில் கோலைமலையான் கோம்பையும் உள்ளன. கோம்பைக்கு வடக்கே சற்றுத் தொலைவில் ' தேற்றான் மரங்கள்' உள்ளன. இதன் அடி சிறுத்து சாம்பல் நிறமுடன் இலை நவ்வல் இலை போல் வெண்மையாயும், சிறிய மலர்களுடன் சுண்டையளவு காய்களுடனுமிருக்கும், வெண்மை நிறத்தில் உருண்டை வடிவமுள்ள இதன் கொட்டையைப் பாலில் ஊறவைத்து அரைத்து பாலுடன் உட்கொள்ள பித்த காசம், ஈளை நீங்கி காயசித்தியாம்.

' சுரப்புன்னை மரம்'

மேற்படி கோம்பைக்கு மேற்கே 2 நாழிகை தூரத்தில் எருது விரட்டி மலையும் அதற்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் குதிரை மலைக்கானலும் (இங்கிருந்து பார்க்க சீப்பாலக் கோட்டைதெரியும்) அங்கிருந்தே மலைமீது 2 நாழிகை தூரத்தில் உள்ள அடர்ந்த வனத்தில் " கங்கால மாமுனி " ஆசிரமமும் அதற்கு வடக்கே 11/2 நாழிகை தூரத்தில் வடபுறம் வட்டப் பாறையும் உள்ளன. பாறைக்கு மேற்கே கூப்பிடு தூரத்தில் "சுரப்புன்னை" மரம் இருக்கின்றது. அது புன்னை மரம் போன்றும் இலைபுன்னை இலைபோல் சற்றுப் பெரியதாயும் காய்புன்னைக்காய் போன்றும் இருக்கும் . இதன் வேரைக் குடிநீரிட்டு அருந்த சுரம் போகும். காயசித்தியுண்டாகும்.

" கல்தாமரை "

முன்கூறிய் சுருளிமலை எல்லையான வட்டப்பாறைக்கு வடமேற்குப்பாதையில் 1 நாழிகை தூரத்தில் குண்டாறும் அதற்கு வடக்கில்' சனவேதி உதகம்' சுனையும் அதற்கு மேற்கில்

சற்றுத் தொலைவில் ' கமலமாமுனி ' குகையுமுள்ளது. குகைக்கு வடக்கில் 'கல்தாமரை' இருக்கிறது. இதன் இலைகள் பார்வைக்கு ஒன்றாகத் தோன்றினாலும் விரலினால் அழுத்திப் பார்க்க 4 ஆக விரியும். சடைபோலுள்ள இதன் வேரில் 1 இரும்பு ஊசியைச் செருகினால் தாமிரமாகவும் அதையே பிடுங்கி வேறு இடத்தில் செருக் வெள்ளியாகவும் , மற்றொரு இடத்தில் செருக தங்கமாகவும் 10 வயதுடன் மாறும் இம்மூலிகையைக் கீழ்ச் சொல்லும் மந்திரத்தை

' சிவசிவா மனோன்மணி வருக வருக ' - என 16 உரு செபித்துப் பிடுங்கிக் கீழே போட்டு மிதித்துக் கொண்டு வானைப் பார்க்க பகலில் விண்மீன்கள் தெரியும். இக்குறியைக் கண்டு சமூலத்தைப்பிடுங்கி நிழலில் உலர்த்திச் சூரணித்து வெருகடியளவு மண்டலம் உட்கொள்ள உடல் சித்தியாகும்.

—போகர் கல்பம் —300

" முண்டக விருக்ஷம் "

மேற்படி குகைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்தில் வன்னியூற்றும் அதற்கு மேற்கே 1/2 நாழிகை தொலைவில் களாக்காய் வனமும் அதற்கு வடக்கில் ' வேதாந்த சித்தர் குகையும் ' அதற்கு வடபுறம் கானாறும் ஓடுகிறது. ஆற்றின் வடகரையின் கீழே " முண்டக விருக்ஷம்" உள்ளது. கோபுரம் போல் நிற்கும் இதனை" ஓம் வைரவா ஓங்காரவைரவா வருக வருக " என 16 உரு செபித்து கல்லினால் தட்டப் பால் வரும், பாலை, இரும்புக் கம்பியை கையில் பிடித்துக்கொண்டு அரைவீசம் படி அருந்த 30 நாழிகை வரை மூர்ச்சையாகும் அவ்வமயம் அருகில் ஒருவர் இருந்து பசும் பால் சிறிது சிறிதாக புகட்டி வர மயக்கம் தெளியும். பின் உடலின் சட்டை கழன்று கண்ணடி போல் ஒளிரும், இவரது நீர், மலம், இரும்பில் பட்டால் பேதிக்கும் அஷ்ட யோகமும் கிட்டும்

— கருவூரார் வாத காவியம் —700

" செங்கற்றாழை"

மேற்படி கானாற்றுக்கு மேற்கில் உள்ள உதகச் சுனையருகில் உள்ள மூங்கில் வனத்திற்கு வடக்கே " இருநாள்

வேதி உதகச்சுனையும்" இதனருகில் பின்னிப்பாறையும் அதனருகில் உள்ள காளிக் கானலுக்குள் 'பூதநாராயணசித்தர்' குகையும் அதற்கு மேற்கே கூப்பிடு தொலைவில் யானை படுத்திருப்பது போன்ற வடிவில் ஒரு கல்லும் அதற்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்தில் உள்ள 'வியாசமுனிவர் குகையும்' அதனருகில் உள்ள ஓடையைக் கடந்து மேட்டின் மேல் சமதளமான சதம்புத் தரையில் 'சுணங்க விருக்ஷமும்' உள்ளன. சதம்புத் தரைக்கு வடக்கில் மணல் தரையும் அதற்குத் தெற்கில் உள்ள அரியூற்றின் மேல்புறம் பூஞ்சுனை நிரம்பியதுமான 'கன்வமகரிஷிவனமும்' சுனைக்கு வடக்கே "சாயாவிருக்ஷமும்" உள்ளன. விருக்ஷமுள்ள இடத்திற்குத் தெற்கே மிருகப்புடவும் அருகில் உதகச் சுனையும் வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் வசிஷ்டமகரிஷி ஆசிரமமும்' அதற்குக் கீழ்புறம் 'செங்கற்றாழைச்' செடிகளும் உள்ளன, மடல்கள் சிவப்பாயும் பால் இரத்தம் போலும் சோறு சிவப்பாயும் இருக்கும். கீழ்கண்ட மந்திரத்தை

"லா -லி - லூ" எனப் 16 உரு செபித்து இந்த கற்றாழைச் சோற்றைப் பீங்கானிலிட்டுப் பிசைந்து கழுவி உடன் நெய்யும் ,சீனியும் கூட்டி உலர்த்திச் சூரணித்துக்கொண்டு தினமிரு வேளை வெருகடி அளவில் உட்கொள்ள 4 யானை பலம் உண்டாகும் காயசித்தியாகும்..

– போகர் கல்பம் 300.

"கைலாயப் புடவு"

மேற்படி வசிஷ்டர் ஆசிரமத்திற்கு வடக்கே கூப்பிடு தொலைவில் ஒரு ஆறும் ஆற்றின் தென்கரையிலுள்ள சமதளப்பாதையின் வழியில் சற்று தூரத்தில் முண்டகவனமும் வனத்தின் தெற்கே 'கபாலநாதர் குகையும்' அதற்கு மேற்கே சற்றுத் தொலைவில் 'திரிநாள்வேதி உதகம்' சுனைக்கு வடக்கில் கூப்பிடு தூரத்தில் "சோதிவிருக்ஷமும்" உள்ளன. மேற்படி ஆற்றின் வடபுறமுள்ள மலையிலிருந்து கீழ்ப்புறம் வரும் பாதை மலையடிவாரத்தில் ஓடும் ஆற்றோரம் "பூதநாராணசித்தர்" ஆசிரமத்தை முகப்பாகக் கெண்டதுமான "கைலாயப் புடவுக்கு"

செல்லும், இந்தப் புடவுக்குள் அநேகச் சித்தர்கள் இருக்க வல்ல விசாலமான இடம் உள்ளதென்று கேள்விப்பட்ட நாகார்ச்சுன முனிவர்கள் " சுவாமி இதுவரை எத்தனையோ புடவு குகை, பற்றிக்கூறி வந்திருக்க இதனை மட்டும் " கைலாயப்புடவு !? " என்று கூறுவதன் வரலாறு என்னவென்ற வினவ அதற்கு போகர்.

கைலாயத்தில் "இமயகிரிச் சித்தர்" என்றொருவர் இருந்தார் இவர் தினமும் சிவனை வழிபட்டு அவனரள் பெற்றவர் அவ்வமயம் துர்வாசர் . கன்வர் , போன்றோர் சதுரகிரி அடி வாரம் தபோவனமென்ற மாவூற்றில் யாகம் வளர்த்துத் தவம் இயற்றி சிவனின் அருள் பெற்றுத் தேவலோக வாழ்வைப் பெற்றனர். சிவனும் அங்கு மகாலிங்கமாய் எழுந்தருளினார். தேவலோக வாழ்வைப் பெற்ற முனிவர்கள் மகிழ்வுடன் கெவுனக் குளிகையிட்டு ஆகாய வெளியில் செல்கையில் சுருளி மலையில் பல அரிய முனிவர்களும், ரிஷிகளும் அருந்தவம் புரிவதையும் சத்த கன்னியர் சிவனுக்கு மலர் எடுத்துச் செல்வதையும் சிறப்பான அந்த வனத்தின் உதகத்திலிறங்கிய மனிதர்கள் கற்களாக மாறியுள்ளதையும் கண்டு அந்த இடத்தின் மேன்மையை அறிந்து சில்காலம் அங்கு தங்கிப்பின் தேவலோகம் சென்றடைந்தனர். அப்போது ஒரு நாள் இவர்களைச் சந்தித்த இமயகிரிச் சித்தர் அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்பதை வினவி அதன்மூலம் அவர்களின் தவப்பலனையும் சுருளிமலையின் சிறப்பையும் அறிந்து உடன் தாமும் அங்கிருக்க அவாவுடன் புறப்பட்டு வந்து ஆற்றோரம் குண்டு மலையில் வெளியில் தலைமட்டும் நுழையும் படியாக உள்ளே தவமியற்றுவதற்கு விசாலமாயும் புடவுசெய்து கொண்டு குகைக்கு முன்னால் 'பூதநாராயண சித்தரை' காவலிருக்குமாறும் கேட்டுக் கொண்டனர். புடவினுள் நுழையும் முன் இக்குகையுள் வர விரும்பும் தவயோகிகள் மட்டும் வர இயலும் எனவும் மற்றவர் தலை நுழையாது எனவும் கூறி புடவினுள் சென்று தவமியற்றி வந்தார். கைலாயத்தில் தமைத் தினமும் பூசிக்கும் இமயகிரிச் சித்தர் வராமையைக் கண்டு சிவன் ஞானதிருஷ்டியால் சித்தர் சுருளிமலையில்

இருப்பதை அறிந்து அவருக்க நல்லாசியருள விழைந்து தம் துணைவியுடன் அங்கு வந்தார். அம்மையப்பர் வருகை அறிந்த ரிஷி, முனி, சித்தர்கள் அனைவரும் தங்கள் ஆசிரமத்தை விட்டு வந்து தரிசிக்கையில் , சிவன் அவர்களது தவம் முடிந்தவுடன் தேவலோக வாழ்வளிப்பதாகக்கூறிவிட்டு மாயஉருவில் இமயகிரிச்சித்தர் உள்ள குகையுள் நுழைந்தார் அதைக்கண்ட அனைவரும் சிவபெருமானே புடவினுள் நுழைந்தமையால் 'கைலாயப்புடவு' என்ற அழைக்கலாயினர். புடவினுள் நுழைந்த சிவனைக் கண்ட சித்தர் மெய்நடுங்கி அடி பணிந்து வணங்கிட அவரை அழைத்து வெளியேறிய சிவன் உமையவளுடன் சேர்ந்து நின்று சித்தருக்கு வேண்டிய வரம் பற்றி வினவினார். அதற்குச் சித்தர் சுருளிமலைப்புடவில் சில காலம் வசிக்க விரும்பும் தனக்குக் கைலாயத்தில் சிவனைப் பூசித்து வந்த வழக்கப்படியே அவ்விடத்திலும் பூசிக்கும் வரம் வேண்டும் எனக் கோரினார். அவர் வேண்டுகோளுக்கருளிய அம்மையப்பர், லிங்கமாகவும் அம்மையாகவும் அமர்ந்தனர். இமயகிரிச்சித்தரும் அன்புடன் வணங்கித் தவறாது பூசித்து வருகையில் சித்தர்கள் கூடித் திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்து சுவாமிக்கும் "சுருளியான்மர்" என்றும் அம்மைக்கு "சுருளியம்மை" என்றும் பெயரிட்டு அழைத்தனர் என்று சரித்திரம் கூறினார் போகர்.

"சிறியாநங்கைச்செடிகள்"

முன்கூறிய பேச்சி கோவிலின் வடக்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள கொடைக்கானல் மலை மீது ஏறிப்போக நடுவில் பலவகைக் கனிகளையும், மலர்களையும் மலைவேடுவர் குழல்களையும உடைய சமவெளியாய் மண்கண்டமாயுள்ள செல்விமலையும் இதற்கு வடக்கே 1 நாழிகை தொலைவில் உள்ள கருங்கானலுக்குள் " சிவவாக்கிய முனி " ஆசிரமமும் அதனருகிலுள்ள சதம்புத்தரையில் "கல்தாமரை" செடிகளும் உள்ளன. இங்கு இருந்து கிழக்கே 1 நாழிகை தொலைவிலுள்ள கருங்கானலுக்குள் பரத்வாஜர் ஆசிரமமும் அதற்கு மேற்புறமுள்ள மண்திட்டில் விஷ

ஜந்துகளை விரட்டும் ' சிறியாநங்கை ' செடிகளும் மிகுந்துள்ளன. இது 1 அடி உயரத்தில் துளசியிலை போல் சற்று பெரிதாயும் மலர்கள் நடுவில் லிங்கத்தையுடைய நாகப்படம் போன்றும் கொண்டிருக்கும் . இதன் இலையை அரைத்து மிளகளவு குளிகை செய்து உலர்த்திக் கொண்டு தினம் ஒன்று வீதம் உட்கொண்டு வர விஷப்பாம்புகள் ஒரு போதும் தீண்டாது கடித்தாலும் விஷம் ஏறாது தானே இறந்து விடும். -

—கருவூரார் வாத காவியம் 700

" ஆயில் மரம் "

மேற்படி மண் திட்டிற்குத் தெற்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள கருவி மலையருகில் வடக்கே ஒரு வற்றாத சுனையும் இதற்கு வடக்கில் சற்றுத் தொலைவில் ' கூர்மானந்தர் ' ஆசிரமும் இதற்குத் தெற்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள சதம்புத் தரையில் ' ஆயில் மரம் ' உள்ளது. இதனடி கனத்து இலைகள் நவ்வல் இலைகள் போல் சற்று பெரிதாயும் பூ கொத்து கொத்தாகவும் காய் இலந்தையைப்போல் சற்று பெரிதாயும் இருக்கும் இம்மரப்பட்டையின் சாற்றை லிங்கத்திற்கு சுருக்குக் கொடுக்கக் க்கட்டும். இதனைச் செந்தூரமாக்கி உண்ண உடல் சித்தி பெறும்.

" மயிலை மரம் "

மேற்படி சதம்புத் தரைக்குக் கிழக்கே " நாடுகண்டான் மலையும் " இங்கிருந்து பார்க்க நாற்புறமுள்ள ஊர்கள் தெரியும். இதற்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள சமதளப்பாதையில் " அகமலையும் " அதற்குக் கீழ்புறமுள்ள காட்டு மலையைக் கடந்து காணும் வனத்தினுள் " கற்கமுனிவர் " ஆசிரமமும் " இதனைக் கடந்து கிழக்கில் 2 நாழிகை தூரத்தில் தாண்டிக்குடி மலையும் உள்ளன. இதற்குத் தென்கிழக்கேயுள்ள வனத்தில் 'மயிலைமரம்' உள்ளது. இது அடி பெருத்து இலை முக்கவறாயும் மலர்கள் சிறியதாக வெண்மையாகவும் காய் நெல்லியளவிலும் இருக்கும். காயை இடித்துச் சாறுபிழிந்து சங்கு பாஷாணத்திற்கு சுருக்குக் கொடுக்க கட்டும். அதனைப் பற்பமாக்கியுண்ணக் காயசித்தியாகும்.

பிறாய்மரம்

மேற்படி வனத்தின் தெற்கே 1 நாழிகை தூரத்தில் மணலூற்றும், இதற்கு மேற்புறமுள்ள ஓடைக்கு வடக்கே 1 நாழிகை தொலைவிலுள்ள 'பூலாத்தூர்' மலையின் வடபுறப் பாதையில் 1 நாழிகை தூரத்தில் பெரிய காவும் அதில் 'குமரசுந்தரர்' ஆசிரமமும் உள்ளன. இதற்கு வடக்கே சற்றுத் தொலைவில் ஓடும் ஆற்றின் மேற்புறம் உள்ள சதம்புத் தரையில் சிறிய "பிறாய் மரம்" உள்ளது இதன் வேர்ப்பட்டையை எடுத்து இடித்துச் சாறெடுத்து தாளாகச் சட்டிக்க 20 முறை சுருக்குக் கொடுக்கக்கட்டும் அதனை முடி காற்றினுலேயே அரைத்து வில்லைதட்டி உலர்த்தி 10 எருவில் புடமிடப் பற்பமாகும் இதனை நெய்யுடன் உட்கொள்ளக்காயசித்தியாகும்.

— சருவூரர் வாதகாவியம் குருநூல் 150

"கெட்டி வஞ்சி மரம்"

ஆன்டிபட்டி வாசிமலை மீது கூப்பிடு தொலைவில் 'நந்திமலையும், அதற்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் "ஆத்மஞானச்சித்தர்" குகையும் அதற்கு மேற்கே 3 நாழிகை தூரத்தில் ஒத்தக் கோவில் மலையும் இதற்குத் தெற்கே 2 நாழிகை தூரத்தில் பாலைக் கோம்பை மலையும் (இடையே ஒத்தக் கோவில் மலையில் இருந்து சற்றுத் தள்ளி காளிகோவிலும்) கோம்பை மலைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் " மாவூற்று வேலப்பர் மலையும்" உள்ளது. இங்குள்ள வேலப்பர் கோவிலுக்கு சற்று வடக்கே "கெட்டி வஞ்சி மரமும்" உள்ளது இது பெரியதாகக் கப்பும், கவறுமாய் வெள்ளைப்பூக்களும் முக்கவறான இலைகளும் கொண்டிருக்கும் இம்மரப் பட்டையின் சாற்றினால் சூதத்திற்குச் சுருக்கிடக் கட்டும் - அதனைச் செந்தூரமாக்கியுண்ண உடல் சித்தியாகும்.

" கொஞ்சி மரம் "

மேற்படி வேலப்பர் கோவிலுக்கு வடக்கே 3 நாழிகை தூரத்தில் 'பெருமானூற்று' மலையும் அதன் சரிவில் அரியூற்றும் இதற்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் ஒண்டிக் கறட்டு மலையும் இதற்குத் தெற்கே "பொன்மலை" எனப்படும் "கண்டமனூர்" மலையும் உள்ளன. இப்பொன்மலை மீது 1 நாழிகை

தூரத்திலுள்ள 'சவுனகமுனி ஆசிரமத்திற்கு' மேற்புறமுள்ள சமதள இடத்தில் "கொஞ்சிமரம்" உள்ளது. இதன் அடி கனத்து இலை முக்கவறாயும் இருக்கும். இம்மரப்பட்டையைச் சூரணித்து தாளகத்திற்குக் கீழும், மேலும் போட்டுச் சீலைமண் செய்து 10 எருவில் புடமிடப்பற்பமாகும். அதனை நெய்யுடன் உண்ண காசம் நீங்கிக் காயசித்தி உண்டாகும்.

"தொணியாமரம்"

மேற்படி சமதளத்திற்கு வடமேற்குப் பாதையில் கருமலையும், இதற்குத் தெற்கே 2 நாழிகை தூரத்தில் இராமக்கல் வெள்ளைப்பாறையும் இதற்குத் தெற்கேயுள்ள அடர்ந்த கானலுக்கு மேற்புறம் "அறிவானந்த சித்தர்" ஆசிரமமும் இதற்கு வடக்கே "தொனியா மரமும்" உள்ளது. இதன் அடி பெருத்து இலை முக்கவறாயும் சிறிய வெண்நிற மலர்களும் இருக்கும். பெருங்காற்றடித்த போதும் மரத்தினின்றும் சப்தம் கேட்காது. இம்மரக் கிளைகளைக் குடிநீரிட்டுப் பருகக் காயசித்தியாகும். மரத்தை வெட்டி வழியும் பாலைக் காசெடை வீதம் காலைமாலை உண்ண யானை வலுவுண்டாகும்.

"பொனமணல்"

நிற்க ? - 64 திருவிளையாடல் நடந்த மதுரைத் திரு ஆலவாய்ச் க்ஷேத்திரம் எனும் மதுரையம்பதியில் ஆதியில் சுந்தரேசுவரர் கடம்பவனக்காட்டில்வந்து திருவுருக் கொண்டதைக் கண்ட பாண்டிய மன்னர்கள் அம்மை அப்பருக்கு அற்புதமான ஆலயத்தையும் சகல பாவங்களையும் தீர்க்க வல்ல பொற்றாமரைக் குளத்தையும் நிறுவினர். மேலும் முத்தமிழச் சங்கங்கள் இயங்கிய மதுரையின் மாண்பு கணக்கிலடங்கா. மதுரைக்குத் தெற்கே தென்பரங்குன்றம் செல்லும் பாதையில் 2 நாழிகை தூரத்தில் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள பசுமலையில் மேற்கு மலையின் உச்சியில் "பவனிச் சித்தர்" ஆசிரமமும் அருகில் கருப்பண்ணசாமி கோவிலும் உள்ளன. இதற்கு வடக்கே சற்றுத் தொலைவில் 1 முழ ஆழம் வெட்டினால் "பொன்னிறமண்" கிட்டும்

அம்மண்ரணை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து 30 எருவில் புடமிடக் களங்காகும் அதனைக் கல்வத் திலிட்டு மேற்படி சாற்றிலரைத்து வில்லை தட்டி 30 எருவில் புடமிட செந்தூரமாகும். அதனை நெய்யில் குழைத்துண்ணக் காயசித்தியாகும்.

" பிர்ம தரு "

பசு மலைக்குத் தெற்கே பாம்பு மலையும் அதற்குத் தெற்கே திருப்பரங்குன்ற மலையும் மலைக்கு வடக்கே சுப்பிரமணியர் கோவில் உள்ளது. இதன் சன்னதிக்குக் கிழக்கில் சரவணப்பொய்கையும் மேற்கில் மலை மீது செல்லும் பாதையில் 1 நாழிகை தூரத்தில் மரங்களும் மூலிகைளும் கொண்ட சமதளமான இடமும் அதற்குத் தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் மலைச் கரிவோரம் " காசி விஸ்வநாதர் ஆசிரமமும்" அதற்கு வடக்கில் வற்றாத சுனையும் கோவிலுக்குக் கிழக்கே சற்று தூரத்தில் " பிர்மதரு" உள்ளது . இதன் அடி பெருத்து இலை முக்கலறாயும் , மணமிக்க மலர்கள் 4 இதழ்களோடும் இருக்கும் இம்மலரைப்பால் விட்டுக் காய்ச்சி அருந்தக் காயசித்தியாகும்.

" தைலக் கிணறு"

திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே 5 நாழிகை தூரத்திலுள்ள நாகமலை அடிவாரத்தில் ' தாடகை நாச்சியம்மன்' கோவிலுள்ளது . நாகம் போன்ற அமைப்புள்ள மலைமீது 1 நாழிகை தொலைவில்.... " கெவுனச்சித்தர்" ஆசிரமமும் அருகில் குகை போன்ற "தைலக் கிணற்றின்" ஓரம் நின்று பஞ்சாட்சர மந்திரத்தை 1008 உரு செபித்துக் பார்க்க கிணற்றுள் தைலம் தெரியும். அதனை இரும்புக் கிண்ணத்தில் எடுத்துச் செம்பு உருக்கு முகத்தில் கொடுக்கப் பத்து வயதாகும் ' அதனைச் செந்தூரமாக்கித் தேனுடன் உண்ண நரை, திரை மாறும். குகைக்கு வடக்கே புல்லூற்றுச்சுனையும் அதற்கு மேற்கில் பாவகிரி தீர்த்தமும் உள்ளன. இங்கிருந்து மீண்டும் கிழக்கே 7 நாழிகை தூரம் வர மதுரை வந்தடையலாம்.

"கருக்குவாச்சிமரம்"

மதுரையிலிருந்து கிழக்கே 5 நாழிகை தொலைவில் யானைபடுத்திருப்பது போன்று ஒரு மலையும் அதன் முகப்பில் சித்தர்கள் உறையும் குகையும் மலையோரம் 1/2 நாழிகை தூரத்தில் நரசிங்கப்பெருமாள் சன்னதியும் அதனருகில் "பண்டரிநாத சித்தர்" ஆசிரமமும் உள்ளது . மலைமீது கிழக்கே வால்பக்கம் 1 நாழிகை தூரத்தில் " கருக்குவாச்சி" மரமுண்டு , இதன் மூவிரலகல இலையைச் சுற்றிலும் கறுக்குகளாயும் சிறிய காய்களுடன் வெண்ணிற மலர்களுடன் இருக்கும். இதன் காயைத் தட்டிச் சாறெடுத்து வெள்ளித் தகட்டிற்கு 20 முறை சுருக்குக் கொடுத்து கல்வத்திலிட்டு அதே சாற்றாலாட்டி வில்லை தட்டி உலர்த்தி கெசபுடமிட பஸ்பமாகும். அதனை நெய்யில் குழைத்துண்ணக் காயசித்தியாகும்.

"ஊக்குணாமரம்"

மேற்படி மலைக்கு கிழக்கே 2 நாழிகை தூரத்தில் உள்ள " சிவனேச சித்தர்குகையும் " மலைமீது 2 நாழிகை தூரத்தில் வால் போல் குன்றுகளும் உள்ளது. குகைக்கு வடபுறம் உள்ள சரிவுப் பாதையில் "ஊக்குணா மரம்" உண்டு. 4 விரல் அளவு கனத்திலுள்ள சிவப்பான இம்மரப்பட்டையை உதறினால் நீர் தெறிக்கும். இலை வட்டமாயும், பூ சிறிதாயும் சிவப்பாயும் இருக்கும். பசும்பாலில் பட்டையின் சாறுகூட்டி அருந்த மேக நோய்கள் நீங்கி உடல் வலிவுறும்.

"தைலக் கிணறு"

மேற்படி மலைக்கு வடக்கே 2 நாழிகை தூரத்திலுள்ள கிடாரி மலைமீது 1/2 நாழிகை தொலைவில் 'சிவப்பிரகாச சித்தர்' குகையும், குகையுள் சுனையும் 'தைலக்கிணறும்' உள்ளது. குகையினுட் கென்று பஞ்சாட்சரத்தை 1008 உரு செபிக்கத் தைலக்கிணற்றுக்குச் செல்ல வழி கிடைக்கும். அத்தைலத்தை இரும்புக் கிண்ணத்தில் எடுத்துப் பழுக்கக் காய்ச்சி செப்புத் தகட்டிற்குச் சுருக்கிடப் பழுக்கும். இதனைச் செந்தூரமாக்கி யுண்ண நரை, திரை மாறி காய சித்தியாகும்.

" கைவளாக்கை மரம் "

மேற்படி மலைக்கு அருகிலுள்ள அழகர் மலை வடக்கிலும் வடபுறம் குறுகி மேற்புறம் நீண்டு அடர்ந்த கானலும் உள்ளது. கானலுக்கு வடக்கிலுள்ள அத்திக்கோம்பை மலைக்கு வடக்கே சற்றுத் தூரத்தில் " மேருகிரிச்சித்தர் குகையும் " அருகில் சோதி விருக்ஷமும் உள்ளது. அத்திக் கோம்பைக்குத் தெற்கே வரும் பாதையில் அழகர் கோவிலும் அதன் கிழக்கில் காவல் கருப்பன் சன்னதியும் அருகில் சந்திரபுஷ்கரணிப் பொய்கையும் அருகில் மேற்கே 1/2 நாழிகை தூரத்தில் வெள்ளி மலையும் அதன்மீது செல்ல, வருக்கை மலையும் அதற்கு வடபுறம் வன்னியூற்றும் அதற்குக் கிழக்கே ' கடப்பிள்ளைச்சித்தர் குகையும், அதற்குக் கிழக்கே சற்றுத் தொலைவில் களாவனமும் இதற்கு மேற்கே அனுமார் தீர்த்தமும், வைரவின் கானலும் உள்ளது. கானலுக்கு வடபுறமுள்ள சதம்புத் தரையில் " கைவளாக்கை " மரமுள்ளது. அடி பெருத்து முட்களையுடைய கணுக்களுடனும் இலை காசகலத்தில் பூ சிறிதாயும் இருக்கும். இலையை அரைத்துத் தாமிரத்திற்கு கவசித்து ஏழுசீலை மண் செய்து புடமிட்டு பற்பமாக்கி நெய்யுடன் உண்ண காயசித்தியாகும்.

மேற்படி வெள்ளிமலைக்கு மேற்கே 2 நாழிகை தூரத்தில் "இயமலை"யும் அதன் மேல் வடக்கில் சற்றுத் தள்ளி தொலைவில் குளிர் கானலுக்குக் கிழக்கே கசிவுத் தரையும் அதற்கு மேற்கில் உள்ள ஓடைக்கு வடக்கே சற்றுத் தொலைவில் 'முண்டக விருட்சமும் ' உள்ளது . இயமலைக்கு மேற்கில் 1 நாழிகை தூரத்தில் சோலைமலையும் அதற்குத் தெற்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள கானலின் வடபுறம் ' ஞானச்சித்தர்' குகையும் இங்கிருந்து சற்றுத் தூரத்தில் பன்னிப்பாறையும், அதற்கு மேற்புறமுள்ள.... பாம்பூற்றுக் கேணியைக் கடந்து மேடேறக் கானலும் சமதளப்பாதையில் " செங்கொடிவேலி "ச் செடிகளும் உள்ளன. சோலைமலைக்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்தில் கோம்பை மலையும் அதன் மீது 1 நாழிகை தூரத்தில் ஓடு குண்டாற்றின் மேற்புறத்தில் செங்களாவனமும் அதற்கு வடபுறமுள்ள "அகப்பேய்ச்சித்தர்" குகைக்கு மேற்கில் கசிவுத்தரையும் அதற்குச் சற்றுதூரத்தில் "கருநெல்லி" மரமும் உள்ளது.

"பொற் சீந்தில்"

கோம்பைமலைக்கு மேற்கில் 1 நாழிகை தூரத்தில் அருவிமலையும் மலையடி வாரத்திலுள்ள வற்றாத தீர்த்தத்திற்கு மேலே 'ராக்காயி அம்மன் கோயிலும்' கோவிலுக்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் 'உலகமாமுனி' ஆசிரமத்திற்கு தெற்குப்பாதையில் மலைமீது பெருங் கானலும் வடக்கில் ஒரு சுனையும் சுனைக்கு மேற்கே " சுணங்க விருக்ஷம்" உள்ளது. அருவி மலைக்கு மேற்கில் பெரிய கெவியிலிருந்து வரும் ஆற்றின் மணல் அப்பிரகம் போலிருக்கும். இது " வகார" வேலைக்குப்பயன்படும். மேடேறிக் கூப்பிடு தொலைவில் பண்ணை மலையும் அதற்கு மேற்புறமுள்ள தேணியினின்று 1 நாழிகை தூரத்தில் ' வள்ளி மலையும் ' மலைமீது 2 நாழிகை தூரத்தில் மண்டமான மலையும் அதற்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள சுனையின் மேற்கே " அச்மாருத மாமுனிவர்" குகையும் குகைக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் " பொற்சீந்திற் " கொடிகள் படர்ந்துள்ளன. அவை சீந்திற் கொடி போல இருப்பினும் மலர்கள் மட்டும் மஞ்சள் நிறமாயிருக்கும். இக்கொடியின் சமூலச்சாற்றை 1 கோப்பையில் ஊற்றிவைக்க அடியில் பொன்னிறமான சர்க்கரையும் படியும். அதனை உலர்த்திக்கொண்டு சீனி கூட்டி வெருகடியளவு காலை மாலை உண்ண உடல் சித்தியாகும்.

— பேகர் செனன சாகரம்

"வெண்துத்தி"

மேற்படி வள்ளி மலைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள " விமல மலை" மீது பெருங்கானலும் அதற்கு மேற்கே " பூவாடைச் சித்தர்" ஆசிரமமும் உள்ளது. பலமலர்களின் மணமிருக்கும் அதன் வடக்கே சற்றுத் தொலைவில் சதம்புத் தரைக்கு மேற்கே ' கணை விருக்ஷம்' உள்ளது. விமல மலைக்கு மேற்கே 1 நாழிகை தொலைவில் ' கொடுமலை' மீது ஏறி சற்றுதூரம் வர அர்ளியூற்றும் அதற்கு மேற்கே ' லாடசித்தர்' குகையும் அதன் மேற்கே " வெண்துத்தி " ச் செடியுமுள்ளது. இது இடுப்புயரம் வளர்ந்து துத்திச் செடியைப் போல் இருப்பினும் மலர்கள் வெண்மையாய் இருக்கும். செடியின்

சமூலச் சாற்றால் லிங்கத்தைச் சுருக்கிடக் கட்டும். அதைச் செந்தூரமாக்கியுண்ண காயசித்தியாகும்.

— புலத்தியர் கல்பம் —300

" திருகுக்கள்ளி"

மேற்படி அரளியூற்றின் மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள அவுனிமலை மீது 1 நாழிகை தூரம் செல்ல சதம்புத் தரையும் அதற்கு வடக்கில் " கபாடசித்தர்" குகையும் உள்ளது. அதன் வடக்கே சற்று தூரத்தில் " திருகுகள்ளி" முளைத்துள்ளது. ஆளுயரத்தில் திருகிய கொம்புகளுடன் சுண்டையளவு காய்களுடன் மலர் கொத்துக்களுடன் இருக்கும் இம்மரத்தூரில் துளையிட்டு இரசத்தைவிட்டு அதே கள்ளிச் சக்கையால் மூடி 45 நாள் கழித்துப் பார்க்க இரசம் கட்டியிருக்கும் அதனைப்பற்பமாக்கிச் சாப்பிட காயசித்தியாகும்.

— கருவூரார் வாதகாவியம் — 700

" மிளகரணைச்செடி"

மேற்படி அவுனிமலைக்கு மேற்கே 2 நாழிகை தூரத்தில் சுடர்க்கோம்பை மலைமீது நின்று பார்க்க அடிவாரத்தில் முருகன் கோவில், குளம் ஆகியன தெரியும். அங்கிருந்து கூப்பிடு தொலைவில் உள்ள குண்டு மலைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் " பவணந்தி" முனிவர் ஆசிரமமும் அதன் வடபுறமுள்ள ஓடையின் அருகில் கசிவுத் தரையும் ஓடைக்குத் தென்புறம் " மிளகரணை" (மிளகு காரணை) செடிகள் உள்ளன. 1 முழஉயரம் உள்ள மிளகாய்ச் செடி போல் சற்றுச் சிறியதாயும் பூ, இலை, காய்களுடன் இருக்கும். இச்செடியின் சமூலத்தை அரைத்து இரும்புத் தகட்டிற்குச் கவசித்து மேலே சீலைமண் செய்து 20 எருவில் புடமிட நொறுங்கும். அதனைக் குழியம்மியிலிட்டு எலுமிச்சைச்சாறு விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்துப் புடமிட பற்பமாகும். அதை நெய்யில் குழைத்துண்ணக் காயசித்தியாகும்.

" கானற்பலா"

மேற்படி கசிவுத்தரையினின்று 2 நாழிகை தூரத்திலுள்ள "அடவி" மலைக்கு வடக்கே ஓடையும் " அதற்கு வடக்கிலுள்ள" கெவிக்குள் இறங்கி மேடேற " குருபர முனிவர் " ஆசிரமமும்

அதன் மேற்கே " வருக்கை மலை" யிலிருந்து 1/2 நாழிகை தொலைவில் கனிவகை மிகுந்த கானலும் , கானலுக்குள் "கானற்பலா" மரம் உள்ளது இதன் விதையைக் குழித்தைலமிறக்கி பழகிய கலயத்துள் விட்டு மூன்ற கழஞ்சு பசுவின் பாலுடன் அருந்த மூர்ச்சையாகும். பாலும் தேனும் கூட்டிக் கொடுத்து வர மூர்ச்சை தெளிந்து உடலின் சட்டை உறிந்து காயசித்தியாகும் (3 நாள்)

" கெவுனக் குளிகை "

திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கேயுள்ள பொன்மலைக்கு வடக்கே தாயுமான சுவாமிமலையும், அதன் மீது தாயுமான சாமி கோவிலும் உச்சிப்பிள்ளையார் கோவிலும் , கோவிலுனுள் 'சிவத்திஸ்வரர்" ஆசிரமமும் மலைக்கு வடக்கே 1 நாழிகை தூரத்திலுள்ள 'காவேரி நதியின் வடகரையில் " தில்லைமரம்" நதிக்கு மேற்கே 30 நாழிகை தொலைவில் "கொல்லிமலையில் அடிவாரத்தில் " செல்லியம்மன் கோவிலும்" அருகில் உள்ள மலைப்பாதையில் 3 நாழிகை தூரம் செல்ல உச்சியிலிருந்து கிழக்கே கூப்பிடு தொலைவில் " அறப்பளீவரர் சன்னதியும்" மேலும் கிழக்கே சற்றுத் தூரத்தில்" கைலயங்கிரிச் சித்தர்" குகையும் குகைக்குக் கீழ்புறம் "செங்கொடிவேலி" ச் செடிகளும் உள்ளன. சுனைக்கு வடக்கிலுள்ள " குமணமலைக்கு" வடபுறம் "சம்புமகரிஷி" ஆசிரமமும், அதற்குக் கிழக்கே பள்ளிநாதர் கோயிலும் பலிபீடமும் உள்ளன. பீடத்தினடியில் " கெவுனக் குளிகை" உள்ளது. பீடத்திற்குத் தென்புறம் வடக்கு நோக்கியிருந்து தேங்காய் பழத்துடன் தூபதீபம் காட்டி செவ்வரளி மலரால் 108 உரு செபித்து 1 உளியால் அங்குள்ளதொரு கல்லை அகற்றி விலக்க அங்கு குடுக்கைபோல் கல்லடித்து அதனுள் குளிகையைப் போட்டு மேலே மூடியிருப்பதைக் காணலாம். மூடியைத் திறந்து 2 குளிகை யை மட்டும் எடுத்து வாயிலடக்கக் காயசித்தியாகும் " கெவுனம் " போகலாம் அஷ்டமா சித்தியும் , ஞானதிருஷ்டியும் , வாயு மனோவேகமும் உண்டாகும் பத்திய உணவாக

அறுசுவை நீக்கி நெய், பால் கூட்டி பச்சரிசி பாசிப்பயிறு கலந்து சமைத்துண்ணவும் இதற்கு உருச் செய்யும் மந்திரச் சொற்கள் நூலில் குறிப்பிடப்படவில்லை.

"வெள்ளை வேம்பு, கொல்லியம்பாவை"

மேற்படி பள்ளிநாதர் கோவிலின் வடபுறமுள்ள கானலுக்கு மேற்கே " உதரகிரிச்சித்தர்" ஆசிரமமும் அதன் கிழக்கே கருமலைக்கு மேல் புறம் 1 கெவியும் கெவியினுள் " குங்கிலிய மரமும் " உள்ளது. அருகில் உள்ள பீடத்தில் " கொல்லியம் பாவை" என்ற தெய்வம் உள்ளது. இதனை எங்கிருந்து நோக்கினாலும் நேராய் இருப்பது போலவே தெரியும். நாம் மேற்கு முகமாய் நின்று அம்மையைக் கிழக்கு முகமாய் இருக்கச் செய்து அரளிப் பூக்களால் 108 முறை " மாயாரூபி மகாமந்திரரூபி தாயே சுவாஹா" என்று செபிக்க (அர்ச்சிக்க) அம்மன் தோன்றி வேண்டும் வரம் தருவாள் , கோவிலின் வடபுறம் மேடேறி கூப்பிடு தொலைவில் உள்ள கசிவுத் தரையில் " வெள்ளை வேம்பு மரம்" உள்ளது. இக்கசிவுத் தரைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள சிறுமலைக் குண்டுக்கு வடபுறம் 1/2 நாழிகை தூரத்திலுள்ள ஆற்றுக்கு வடக்கே சமதளமான இடமும் கசிவுத்தரையும் அதன் மேற்கே "கமலாகனச்சித்தர்" குகையும் அதன் கிழக்கே சற்றுத் தொலைவில் அடர்ந்த கானலுக்குத் தெற்கே " சுணங்க விருக்ஷம் " உள்ளது. கானலுக்கு வடமேற்கு மூலையிலுள்ள "கஞ்சமலை" மீதேறிக் கூப்பிடு தூரம் செல்ல மணலூற்றும் அதன் தெற்கில் " சுழுமுனைச்சித்தர்" குகையும் அதன் கிழக்கே 1/2 நாழிகை தூரத்தில் காளிக்கானலின் மேல்புறம் மூங்கில் வனமும் அதற்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள சிற்றாற்றுக்குக் கிழக்கே சுனையும் அருகில் "உரோமவிருக்ஷமும்" உள்ளது.

"இரத்தப்பலாசு மரம்"

சுனைக்கு வடக்கில் 2 நாழிகை தூரத்திலுள்ள குமுளிமலையின் தென் புறப்பாதையில் " கொமாரிகோயிலும்"

அதற்கும் கிழக்கில் " தபோதனச் சித்தர் குகை" யும் அதற்கு வடக்கே ஆற்றின் மேற்புறம் 1/2 நாழிகை தூரத்திலுள்ள மண்தரையில் " சோதி விருக்ஷம் " உள்ளது. மண் தரைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள " குடகு மலைக்கு " வடபுறம் குளிர் கானலும் அதற்குத் தெற்கே சற்றுத் தொலைவில் கசிவுத் தரையில் கிழக்கே பூஞ்சுனையும், சுன்னக்கு வடக்கே 1 நாழிகை தூரத்திலுள்ள " ஆதாரச்சித்தர்" குகைக்கு " (குகைவாய் சிறுத்து உட்புறம் விசலாமாய்ப் பல சித்தர்கள் வசிப்பதாக இருக்கும்). வடக்கே "கருநெல்லி மரம் " உள்ளது குகைக்குத் தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் " குருமலைக்கு " மேற்கே சற்றுத் தொலைவில் ஓடையும் ஓடைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள வைரவன் கானலுக்கு மேற்புறம் அரளியூற்றும் அதற்குக் கிழக்கில் சற்றுத் தொலைவில் " கூனக் கண்ணர்" ஆசிரமத்தினருகில் வெள்ளைப்பாறையும் பாறைக்கு வடக்கிலுள்ள கானாற்றின் தென்புறம் மண்கண்டமும் அங்கு "இரத்தப்பலாசு" மரமும் உள்ளது

" முப்பிரண்டை"

கன்னிவாடி மலை மீது 1/2 நாழிகை தூரத்தில் வாழை ஏலக்காய் நிறைந்துள்ள பகுதிக்கு வடமேற்கில் ஒரு சுனையும் சுனையின் மேல்புறம் 1 நாழிகை தூரத்தில்" மெய்கண்டசித்தர்" குகையும் அதன் முன்பு " உரோம வேங்கை விருக்ஷமும் " உள்ளது. குகைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் உள்ள படுக்கை மலைக்குக் கிழக்கே சற்று தூரத்தில் கரும்பாறையும் பாறைக்கு வடபுறமுள்ள பாதாளக் கெவியைக் கடந்து மந்திமலை மீதேறி சற்று தூரம் செல்ல பூஞ்சுனையும், சுனைக்கு வடகிழக்கிலுள்ள மலட்டாற்றில் இருந்து 1/2 நாழிகை தூரத்தில் "ஒணானோடையும்" ஓடைக்குக் கிழக்கில் உள்ள கல்லூற்றுக்குத் தெற்கே சற்றுத் தெலைவில் " குண்டலீச் சித்தர் ஆசிரமம்" அருகிலுள்ள செம்மண்தரையில் " ஏரழிஞ்சில் மரமும் ". உள்ளது ஆசிரமத்திற்குத் தெற்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள ஏணிச்சாந்து மலைக்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் " வெள்ளைப்பாறையும் அதற்கு கிழக்கே சற்றுத் தொலைவிலுள்ள வட்டச்சுனைக்கு மேற்புறம்

"வாலையானந்தர்" ஆசிரமமும் அதற்கு மேற்கே மந்தி ஒடைக்கு வடபுறம் பலாவூற்றும் அதன் கிழக்கே சற்றுத் தூரத்திலுள்ள அடர்ந்த காட்டினுள்ளே "முப்பிரண்டை" கொடிகள் உள்ளன.

"சேர்ந்தாடும் பாவை"

காட்டிற்கு மேற்கே சற்றுத் தொலைவிலுள்ள "மஞ்சனைப்பாறை" மலைக்குக் கூப்பிடு தூரத்தில் "முத்தானந்தர்" ஆசிரமமும் அதற்குக் கிழக்கேயுள்ள மயிலோடைக்குக் கீழ்ப்புறம் 1/2 நாழிகை தூரத்தில் பாலூற்றும் ஊற்றின் மேற்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள மண் கண்டத்தில் " கருநொச்சியும் " உள்ளது . மண்டபத்திற்கு மேற்கேயுள்ள "கூமாமலை" மீது 1/2 நாழிகை தூரத்திலுள்ள " செம்பேரை" மீதேறிப் பார்க்க "வேடசெந்தூர்" தெரியும். பாறைக்கு மேற்கே 1/2 நாழிகை தொலைவிலுள்ள சுனைக்கு வடக்கில் கானலோடையும் ஓடைக்குக்கிழக்கே 1 நாழிகை தொலைவில் பாலாவூற்றின் மேற்புறம் சற்றுத் தொலைவில் " சமயநாதர்" ஆசிரமமும் அதன் கீழ்புறமுள்ள புல் தரையில் " இரும்புவல் செடியும் " உள்ளன. புல்தரைக்கு மேற்கேயுள்ள உச்சமலைக்கு வடபுறம் பாம்புப்புடவும் அதற்கு மேற்கில் சற்றுத் தள்ளி காளிக் கானலுக்கு மேற்கே மண்கண்டமும் அதற்கு மேற்கே சற்று தூரத்திலுள்ள " சந்திரநாதர்" ஆசிரமத்திற்குத் தென்புறம் அடர்ந்த வனமும் " அதன் மேற்கில் " சேர்ந்தாடும் பாவைச் செடிகள்" உள்ளன.

" நேத்திரஞ்சிமிட்டி "

வனத்தின் மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள " அருவி மலைக்கு" வடக்கே மேற்புறம் செல்லும் பாதையில் சிவந்திப்பாறையும் அதற்கு மேற்கேயுள்ள பாம்புச்சுனைக்குத் தென்புறமுள்ள பூசணிக்காய் மேட்டிற்கு மேற்கே ((மேட்டினின்று பார்க்கச் சத்திரப்பட்டி என்ற ஊர் தெரியும்) 1/2 நாழிகை தூரத்திலுள்ள 'பூதானந்தர்' ஆசிரமத்திற்குக் கீழ்ப்புறம் புடவுச்சுனையும் உள்ளது. சுனைக்குச் சற்றுத் தள்ளி சமதளப் புல்வெளியில் "நேத்திரஞ்சிமிட்டி" செடிகள் உள்ளன. இது ஒரு முழ உயரத்தில் முருங்கையிலை போலச் சற்றுக் கூர்மையான இலைகள் கொண்டு சிறிய வெண்மலர்களுடன்

தோன்றும். செடியைத் தொட இலைகள் கண் சிமிட்டுவது போலச் சிமிட்டிக் கொண்டேயிருக்கும் . இச் செடியின் சமூலத்தைச் சூரணித்து வெருகடியளவாக 1/8 படி பாலுடன் சீனி கூட்டி அருந்திவரக் காயசித்தியாகும்.

"வல்லாரை"

புல்தரைக்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள கூனமலைக்கு மேற்புரம் 1 நாழிகை தூரத்தில் கல் சுனையும் , அதற்கு 1/2 நாழிகை தூரத்தில் கானாறின் மேற்புறம் 3/4 நாழிகை தூரத்தில் நொச்சியூற்றும் அதற்கு 1 நாழிகை தூரத்தில் 'கடம்பநாதா' ஆசிரமத்திற்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்தில் சதம்புத் தரையும் அங்கு ' வல்லாரைக் கொடிகளும்' படர்ந்துள்ளன. ஞாயிறும் பூசமும் கூடிய நாளில் கொடியருகில் நின்று "வாவா வைரவி ரங்" என்று 16 உரு செபித்து சமூலத்தை பிடுங்கிச் சூரணித்து வெருகடி யளவு காடியில் உட்கொள்ள 5 மாதங்களில் நரை, திரை, மாறி இளமை திரும்பும் 1 வருடம் உட்கொள்ள 16 வயதுடையவனாக 100 ஆண்டுகள் வாழ்வான் யானைபலமும் அழகும் ஏற்படும் பாலுணவு, தேன் நெய், பழம் , சர்க்கரை கூட்டவும் மற்றவை கூடாது.

— அகத்தியர் பரிபூரணம் 1200

"சிவனார் வேம்பு"

மேற்படி சதம்புத்தரைக்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள 'வராககிரி' மீது 1 நாழிகை தூரத்தில் பூங்காவனமும் அதற்கு மேற்கில் 2 நாழிகை தொலைவில் குடப்பாறைக்கு மேல்புறம் 1/2 நாழிகை தூரத்தில் " தாருகா வனரிசிகள் " ஆசிரமத்திற்குத் தெற்கில் கூப்பிடு தொலைவில் சேங்கைச் சுனையும் அதற்கு மேற்கே ஓடையினருகில் உதகக்குகையும் (இதனுள் நுழையக் கூடாது) உள்ளது. குகைக்கு மேற்புறம் சற்றுத்தூரத்தில் உள்ள கசிவுத் தரையில் " சிவனார் வேம்பு" செடிகள் உள்ளன. இது 2 முழ உயரத்தில் இலை முருங்கை.இலைபோலும் சிறிய மலர்களுடனும் இருக்கும். இதனைச் சூரணித்து சமன் சர்க்கரை கூட்டி வெருகடியளவு உண்டுவரக் காயசித்தியாகும்.

— கருவூரார் வாத காவியம் 700.

"வெள்ளை நீர் முள்ளி"

மேற்படி தரைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள அரளியூற்றுக்கு வடமேற்குப் பாதையில் 'கடம்பமலையும்' அதன் கீழ்புறம் சற்றுத் தூரத்திலுள்ள "மார்க்கண்டேய முனிவர்" குகை மற்றும் ஆசிரமத்திற்கு மேற்கே 1 நாழிகை தூரத்தில் கருங்கானலும் அதற்கு வடபுறம் மேற்கே செல்லும் பாதையிலுள்ள "மண்டலவேதி" உதகச்சுனைக்கு வடக்கே சற்றுத் தொலைவில் வேலவர் கோவிலும் உள்ளது. அதற்கு மேற்கேயுள்ள சதம்புத் தரையில் "வெள்ளைநீர் முள்ளி" ச் செடி உள்ளது பூவும் தண்டும் வெண்மையாய் இருக்கும். இச்செடியை அரைத்துச் சிறுகண் நாகத்திற்குக் கவசித்துச் சீலைமண்செய்து கனபுடமிட நொறுங்கும். அதனை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி 20 எருவில் புடமிடப்பற்பமாகும் அதனை நெய்யிற் குழைத்துண்ணக் காயசித்தியாகும்.

– போகர் கல்பம் –300.

"ஓரிலைத் தாமரை"

முன்கூறிய சதம்புத் தரைக்கு மேற்புறம் 1/2 நாழிகை தூரத்திலுள்ள குத்துப்பாறை மீதேறிப் பார்க்க 'பழனிமலை' தெரியும். பாறைக்கு நேர் வடக்கே வந்து சன்னதிக்கு நேராக ஏறினால் 'தண்டாயுதபாணி' சன்னதிக்குச் செல்லலாம் திரும்பும் வழியில் "போகர், புலிப்பாணி" ஆசிரமமும் வையாபுரிக்குளமும் அதற்கு வடக்கிலுள்ள பழனி யூற்றைத் தாண்டிவர வராககிரி குத்துப்பாறையும், பாறைக்கு மேற்புறம் "சோதி விருக்ஷமும்" உள்ளன. குத்துப்பாறைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்தில் உச்சமலைக்கு வடபுறமிருந்து மேற்கே செல்லும் பாதையில் சற்றுத் தூரத்தில் மயிலாடும்பாறையும் அங்கிருந்து 1 நாழிகை தொலைவிலுள்ள பெரிய கெவியை விட்டு மேடேற அங்குள்ள குமரிமலை மீது 1/2 நாழிகை தூரத்தில் தேசிக முனிவர் ஆசிரமமும் அதற்குக் கீழ்ப்புறம் சற்றுத் தூரத்தில் ஆற்றைக் கடந்து மேற்கே சற்றுதொலைவில் ஒரு சுனையும் சுனையருகில் "ஓரிலைத் தாமரைச் செடிகள்" வளர்ந்துள்ளன. அவை முழஉயரத்தில் துளசிச்செடி

போலிருக்கும். அதன் சமூலத்தைப்பிடுங்கி உலர்த்திச் சூரணித்து சமன் சர்க்கரை கூட்டி வெருகடியளவு உண்டுவர காயசித்தியாகும்.

"பூமி சர்க்கரைக்கிழங்கு"

மேற்படி சுனைக்கு மேற்கிலுள்ள கோம்பை மலையினின்று பெருகி ஓடும் அருவிக்கு மேற்கில் ஓடும் ஐந்து ஆறுகளையும் கடந்து வடமேற்கில் வடகுடப்பாறையும், பாறையின் வடக்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள வற்றாத நீரையுடைய புடவுச்சுனைக்கு வடபுறம் சற்றுத் தூரத்தில் 'கச்சியப்பமுனி' ஆசிரமும் அதற்கு மேற்கில் சற்று தூரத்திலுள்ள ஓடைக்கு 1/2 நாழிகை தூரத்தில் சதம்புத் தரையும் அங்கு "வெண்துத்திச் செடிகளும்" உள்ளன. கசிவுத் தரைக்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள மலையடிவாரத்திலுள்ள ஆறுநதிகள் கூடிய சண்முக நதியைக் கடந்து சற்றுத் தூரத்தில் அடர்ந்த வனமும் வனத்தினுள் 'பிருகு மகரிஷி' ஆசிரமமும் மலை மீதேறவும் அதற்கு வடபுறம் உள்ள வைரவன் கானலுக்கு வடக்கில் கல்தரையும் உள்ளன. அதற்கு வடக்கே சற்றுத் தொலைவிலுள்ள கசிவுத் தரையில் "பூமிசர்க்கரைக் கிழங்குச்செடிகள்" உள்ளன. அதன் தூரிலுள்ள கிழங்கை பாலிலரைத்துண்ண உடல்பொன்னிறமடையும், சித்தி பெறும்.

"பயற்றங்காய்க் கள்ளி மரம்"

மேற்படி கசிவுத் தரைக்கு வடபுறம் 1 நாழிகை தூரத்தில் முகண்ட - கிரி மலைமீது வடக்கே செல்லும் பாதையில் சற்றுத் தொலைவில் வன்னிமலையும் அதற்கு வடக்கிலுள்ள மணியடிப்பாறைக்கு மேற்புறம் வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் உதகச் சுனையும்" (சுனைநீர் அருந்தக் கூடாது) அதற்கு வடக்கே சற்றுத் தொலைவில் உள்ள சிற்றாற்றைக் கடந்து வடக்கு முகமாய் கல்லெறிந்த தூரம் சென்று பார்க்கப் பாவூற்றும் ஊற்றின் தெற்கில் 1 நாழிகை தூரத்திலுள்ள "சுவர்க்கபதமாமுனி" ஆசிரமத்திற்கு வடக்கே சற்றுத்தூரத்தில் சதம்புத்தரையும் உள்ளன. இங்குள்ள கள்ளிச் செடிகளின் நடுவே "பயற்றங்கள்ளிமரம்" உள்ளது. இம்மரப்பாலினால் சங்கு பாஷாணத்திற்குச் சுருக்குக் கொடுக்கக் கட்டும்.

பாலிலரைத்து (கல்வத்திலிரைத்து) வில்லைதட்டி உலர்த்தி 10 எருவில் புடமிடப்பற்பமாகும் தேனில் குழைத்துண்ணக் காயசித்தி ஆகும்.

மேற்படி கள்ளிக் காட்டிற்கு வடக்கில் 1 நாழிகை தூரத்திலுள்ள கருப்பநாச்சி முந்துதலுக்கு வடபுறம் 1/2 நாழிகை தூரத்தில் " சுவாமிமலையும்" அதற்கு மேற்கிலுள்ள குளிர் வனத்தின் வடக்கில் சற்றுத் தொலைவில் சதாசிவன் கோவிலும் கோவிலுக்கு மேற்கிலுள்ள "விண்ணோக்குச் சித்தர்" குகைக்கு மேற்புறம் சுனையும் சுனைக்கு வடக்கிலுள்ள " அகத்தியர்" ஆசிரமத்தின் தெற்கே " புலத்தியர்" ஆசிரமமும் அதற்கு வடபுறமுள்ள கசிவுத்திரையில் " செங்கொடிவேலிச் செடிகளும்" உள்ளன. ஆசிரமத்தின் வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் வெள்ளோடைக்கு கல்லெறி தூரத்தில் தேவிப்பாறையும் அதற்கு வடக்கிலுள்ள " பருவத மலைக்கு" வடக்கே சற்றுத் தொலைவில் " கொங்கணவர்" ஆசிரமமும் அவற்றிற்கு வடக்கிலுள்ள (அருகில் தொழுகண்ணர் ஆசிரமம்) குகையின் உட்புறம் சதம்புத் தரையும் அங்கு " கற்றாழைச் செடியும்" உள்ளன. சதம்புத் தரைக்கு வடக்கிலுள்ள கொங்கு நாட்டு மலைக்கு அருகில் காலாஞ்சிப்பாறை மீதேறிப்பார்க்க அருகிலுள்ள பகுதிகள் தெரியும். அப்பாறைக்கு வடக்கில் 1 நாழிகை தூரத்திலுள்ள கானாற்றைக்கடந்து சற்றுத் தூரத்தில் "சங்கிலிச் சித்தர்" ஆசிரமமும் (இந்த ஆசிரமத்தில்தான் சதுரகிரிக்குச் செல்லும் முன் ஆதியில் கொங்கணவர் வாசம் செய்தார்). அதன் வடக்கிலுள்ள காற்றாடி வனத்திற்குத் தெற்கே. சித்தர் குகையும் குகைக்கு வடக்கே " முண்டகவிருஷமும் உள்ளது. (இதன் உபயோகம் முன்பக்கங்களில் உள்ளது)

" பாம்புக் கெவி"

மேற்படி சித்தர் குகைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள உசிமலை மீது 1 நாழிகை தூரத்திலுள்ள பிளவுப் பாறைமீது நின்று பார்க்க " உடுமலைப்பேட்டை" தெரியும். அப்பாறைக்கு மேற்புறம் சற்று தூரத்தில் உள்ள

மலைக்குவட்டிற்குத் தெற்கில் இறங்கி 1/2 நாழிகை தூரம் செல்ல "கருவூரார் குகையும்" குகைக்கு வடக்கிலுள்ள செவ்வல் தரையில் " கரு நெல்லி" மரம் உள்ளது. செவ்வல் தரைக்கு வடக்கில் பூவூற் மலை மீது சற்று தூரத்தில் " பாம்புக்கெவி " உள்ளது. இந்தக் கெவிமுழுதும் எண்ணற்ற விஷப்பாம்புகள் நிறைந்திருக்கும். அதற்குமேற்குப் பாதையில் செல்ல மேடேறி மலைமீது வர சற்றுத் தூரத்தில் "அகிலாண்டசித்தர்" குகையும், குகைக்கு வடபுறமுள்ள "பாம்பாட்டிச் சித்தர் ஆசிரமத்திற்கு" தெற்கே 1/2 நாழிகை தூரத்தில் துர்க்காக் கானலும் முன்புறம் வடக்கில் செல்லும் பாதையில் சற்றுத் தொலைவில் " சுண்ங்க விருக்ஷம்" உள்ளது. கானலின் வடக்கே 1 நாழிகை தூரத்தில் உள்ள 'மஞ்சமலை' யிலிருந்து 1 நாழிகை தொலைவில் கல்லூற்றுக்கு மேற்புறம் 2 நாழிகை தூரத்தில் " வால்மீகர்" ஆசிரமமும் . அருகில் கருங்கானலின் வடபுறம் " சாயா விருக்ஷம்" உள்ளது. கருங்கானலுக்கு வடக்கே 1 நாழிகை தொலைவில் உள்ள " பொள்ளாச்சி மலை மீது 1/2 நாழிகை தூரம் சென்ற வயிற்றுப் பாதைமீது நின்று பார்க்கப் பொள்ளாச்சி ஊர் தெரியும் பாறைக்கு மேற்கில் உள்ள பாலாற்றுக்கு மேற்புறம் 1/2 நாழிகை தூரத்தில் கானலோடையும், ஓடைக்கு அருகிலுள்ள " அத்தி ஊற்றின்" மேற்புறம் "விளையாட்டுச் சித்தர்" குகையும் அதற்குக் கூப்பிடு தொலைவில் " கணை எருமை விருக்ஷம்" உள்ளது. குகைக்கு மேற்கே 1 நாழிகை தூரத்திலுள்ள "தந்திமலை" வடபுறம் சற்றுத் தொலைவில், " உதகச்சுனையும் " சுனைக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள கல்லூற்றுக்கு வடபுறம் பாலூற்றும் ஊற்றின் மேற்கே 2 நாழிகை தொலைவிலுள்ள "விமலச்சித்தர்" குகைக்கு வடக்கே மணல் தரையும் அங்கு "கருநாரத்தை" மரமும் உள்ளன.

"கைலயாங்கிரி"

விமலச் சித்தர் குகைக்குத் தெற்கில் 2 நாழிகை தூரத்திலுள்ள தேவி மலைக்குத் தென்புறம் ஒரு சுனையும், அதற்கு மேற்கில் உள்ள குண்டாற்றுக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில்

"மந்தியோடையும்" ஒடைக்குச் சற்றுதூரத்திலுள்ள "திரிகோணச் சித்தர்" ஆசிரமத்திற்கு வடகிழக்கில் மூலையில் "வெண்நாவல்" மரமும் ஆசிரமத்திற்கு வடக்கே 2 நாழிகை தூரத்தில் "வெள்ளையங்கிரி மலை" மீது 1/2 நாழிகை தொலைவில் நடராஜன் கோவிலும் அதன் மேற்கே 1 நாழிகை தூரத்தில் " அமிர்தசித்தர்" ஆசிரமத்திற்கு மேற்புரம் ஒரு குகையும் அதன் வடக்கே சற்று தூரத்திலுள்ள கருங்கானலுக்கு மேற்கில் " உரோமவிருக்ஷம்" உள்ளது. கானலுக்கு வடக்கே 2 நாழிகை தூரத்தில் ' செம்பாயிமலை' மீது 1 நாழிகை தூரத்தில் ஒரு ஆறும் ஆற்றின் வடக்கே கூப்பிடு தொலைவிலுள்ள பாலோடைக்கு மேற்புறம், பாம்பூற்றும் ஊற்றுக்கு1/2 நாழிகை தூரத்திலுள்ள " மிருகண்டுய " மகரிஷி ஆசிரமத்திற்கு 1 நாழிகை தூரத்தில் பேச்சிக்கானலும், கானலின் மேற்புறம் "உதிர வேங்கை"மரமும் உள்ளன. கானலுக்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்திலுள்ள" கைலங்கிரி" மலையின் மீது கூப்பிடு தொலைவில் வடக்கே ஒரு ஒடையும் அருகிலுள்ள மாவூற்றுக்கு வடபுறம் சதுரக்கல் பாறையும், பாறைக்கு வடக்கில் "பராபரச் சித்தர்" குகைக்கு வடபுறம் பெருங்கானலும், கானலுக்கு மேற்கில் " சோதி விருக்ஷமும்" உள்ளன.

" சோதிப்புல்"

மேற்படி கானலுக்கு வடக்கில் 1 நாழிகை தொலைவில் உள்ள ஆற்றுக்கு வடமேற்கில் 1/2 நாழிகை தூரத்தில் மணலூற்றும் ஊற்றின் வடக்கே சற்று தூரத்திலுள்ள " பிடி நாக்கீசர்" குகைக்கு (இதனுள் பல சித்தர்கள் தவமியற்றுவர்) வடபுறம் "ஏரழிஞ்சில் மரமும்" உள்ளன. குகைக்கு வடக்கில் " கொஞ்சி" மலைமீது 1 நாழிகை தூரத்திலுள்ள கரும்பாறை மீதேறிப் பார்க்க பாலக்காட்டைச் சேர்ந்த ஊர்கள் தெரியும். அதைக் கடந்து வடக்கே 1 நாழிகை தூரத்தில் " உத்கச் சுனைக்கு" வடமேற்கில் சரளத்தரையும் அதற்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் பெரிய வனத்தின் மேற்புறம் " பரஞ்சோதி முனிவர் ஆசிரமமும்" அதனருகிலுள்ள தொறட்டிக் கானலுக்கு வடபுறம்

திருகைப்பாறையும் , அதற்கு வடக்கே சற்ற தூரத்திலுள்ள கசிவுத்தரையின் " சோதிப்புல்" ஏராளமாக முளைத்துள்ளது. (உபயோகம் முன்பே கூறப்பட்டுள்ளது) பாறைக்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் பெரிய கெவியும், குதிரை மலையும் அருகிலுள்ள கல்சுனையைக் கடந்து வடக்கே கூப்பிடு தொலைவில் ஒரு ஆறும் அதன் வடக்கில் கல்லெறி தூரத்திலுள்ள " சினேந்திர முனிவர்" ஆசிரமத்திற்குத் தெற்கில ஒடையும் அதற்குத் தெற்கில் தேவி வனத்திற்கு வடமேற்கு மூலையில் ' அழுகண்ணிச் செடிகளும்' உள்ளன. வனத்திற்கு வடமேற்கில் சற்றுத் தூரத்தில் கருமலையின் மீது 2 நாழிகை தூரத்தில் ஒரு சுனையும் சுனைக்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்தில் ஆற்றின் வடபுறம் ஒரு நாழிகை தூரத்தில் மலையூற்றும் ஊற்றுக்கு மேல் புறமுள்ள 'அவத்திய மாமுனி' ஆசிரமத்திற்கு மேற்கே கூப்பிடு தொலைவிலுள்ள கசிவுத் தரையில் தொழுகண்ணிச் செடிகள் உள்ளன.

" ஆடுதின்னாப்பாளை"

மேற்படிய மண்கண்டத்திற்கு வடபுறம் 2 நாழிகை தூரத்தில் குண்டு மலைக்கு வடக்கே சற்று தூரத்தில் குழிப்பாறையும் பாறைக்குத் தென் மேற்கில் சற்று தூரத்தில் வடபுறம் 1/2 நாழிகை தொலைவிலுள்ள சுனைக்கு வடமேற்கில் ஒரு நாழிகை தூரத்தில் உள்ள " புவியானந்தர்" ஆசிரமத்தின் பின்புறமுள்ள சரிலியாற்றுக்கு வடக்கே சதம்புத் தரை உள்ளது. அங்கு வட்டமான சாம்பல் நிறஇலைகளுடன் சிறியதாக ஒரு முழ உயரத்திலுள்ள " ஆடு தின்னாப்பாளை" செடிகள் உள்ளன இதன் இலையைச் சூரணித்துச் சமனளவு சர்க்கரை கூட்டி வெருகடியளவு உண்டு வர எவ்வித விஷக்கடிகளானாலும் விஷம் ஏறாது. உடல் வலுக்கும்.

" ஆடாதோடை"

சதம்புத்தரைக்கு வடக்கே 2 நாழிகை தூரத்திலுள்ள பெரிய கெவிக்கு மேற்கே 1/2 நாழிகை தூரத்தில் ஒரு பாறையும் பாறை மீதேறி வடக்கில் ஒரு நாழிகை தூரத்தில் உள்ள ' வெகுளி நாதர்' ஆசிரமத்திற்குக் கீழ்ப்புறம் சுனையும் ஆறும் உள்ளன.

அதனைக் கடந்து வடக்கேயுள்ள சதம்புத்தரையில் "ஆடாதோடை" ச் செடிகள் இருக்கின்றன. ஆள் உயரத்திற்கு நிற்கும் இவற்றின் இலைகள் மாவிலைகள் போல் நீண்டும் வெண்ணிற சிறிய மலர்களுடனுமிருக்கும். இவ்விலைச் சாற்றில் சிலாசத்தை அரைத்து வில்லை தட்டி உலர்த்தி 10 எருவில் புடமிட பற்பமாகும். இதனைத் தேனில் குழைத்துண்ணக் காயசித்தியாகும்.

"புளியம்பிரண்டை"

சதம்புத் தரைக்கு வடக்கில் 2 நாழிகை தூரத்தில் நீலகிரி மலைக்குத் தெற்கில் ஒரு சுனையும் சுனைக்குச் சற்று தூரத்திலுள்ள பெரிய கானலுக்குள் " தத்துவநாதர்" ஆசிரமமும் அதற்கு மேற்கிலுள்ள மண்கண்டத் தரையில் " முப்பிரண்டைக் கொடிகளும் " உள்ளன. (இதன் பயின் முன் பக்கங்களில்) மண்கண்டத்தரைக்கு வடக்கேயுள்ள பெரிய கானலுக்கு மேற்புறம் அடர்ந்த காடும் அதற்கு மேற்கில் ஒரு நாழிகை தூரத்தில் " நாரதமுனிவர்" ஆசிரமத்திற்கு மேல்புறம் சதம்புத்தரையும் அதற்கு வடக்கேயுள்ள கரும்பாறைக்கும் மேற்புறம் மண்கண்டமலையும் (இங்கு அப்பிரகம் பாறை பாறையாய் உள்ளது) உள்ளன. அதற்குச் சற்று தொலைவில் " புளியம் பிரண்டை" கொடிகள் உள்ளன. அவை சிறியதாக இருவிரல் அகல இலைகளுடன் கொடி முற்றும் சுனையுடன் இருக்கும் இதன் சமூலச்சாற்றை பசும்பாலில் கலந்து உண்ண காயசித்தியாகும்.

சீதா செங்கழுநீர்

மேற்படி மண் மலைக்குத் தெற்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள சவ்வாது மலைக்கு (இங்கு சவ்வாதுப்பூனைகள் மிகுந்து காணப்படுவதால் சவ்வாது வாடையுடன் இருக்கும்) வடக்கே 4 நாழிகை தூரத்தில் நச்சுப் பொய்கையும் (வாய்க்கால் போல் ஓடும் இதன் நீரை அருந்த மயக்கம் கண்டு உயிர் நீங்கும்) அதற்கு மேற்கேயுள்ள "காயசித்திநாதர்" ஆசிரமத்திற்குத் தென்புறம் சதம்புத் தரையும் உள்ளன. இங்கு " சீதா செங்கழுநீர்" செடிகள் உள்ளன. அவை சிறியதாய் அழகாய் வேலிப்பருத்தி இலை போன்ற இலைகள் கொடியாய் இருக்கும். இதன் தூரிலுள்ள கிழங்கைப் பாலில் அரைத்துச் சாப்பிட்டுவர

காயசித்தியாகும். மேற்படி சதம்புத் தரைக்கு தெற்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள குண்டாற்றுக்குத் தென்புறம் பெரிய கானலும், கானலுக்கு மேற்கே கூப்பிடு தொலைவிலுள்ள சுனைக்குக் கீழ்ப்புறம் " கொஞ்சிமரமும் " உள்ளது.

"செவ்வாழை"

திருவனந்தபுரத்திற்கு வடக்கே 1 நாழிகை தூரத்தில் "பூரிமலை" என்ற செம்மண்தரை உள்ளது. இங்கு மிளகுச் செடிகள் சிறப்பாயுள்ளது. அதன் வடபுறம் கூப்பிடு தொலைவில் உள்ள வனத்தில் தென்புறம் " அமுத மகரிஷி " ஆசிரமமும் வடக்கே கூப்பிடு தூரத்தில் உள்ள சதம்புத்தரையில் கிராம்புச் செடிகளும் அதற்கும் வடக்கே கூப்பிடு தொலைவில் " செவ்வாழை மரங்கள்" உள்ளன. இதன் பழத்தோல் மட்டும் சிவப்பாய் இருக்கும். இதில் 2 பழம் வீதம் வீரச்சுண்ணம் கூட்டி 3 நாள் 6 வேளை வரை உண்டு பச்சரிசியும் பாசிப்பயறும் சேர்த்துச் சமைத்து உண்ண உடல் சித்தியாகும்.

– புலஸ்தியர் கல்பம் –800

"சிவந்த இலைக் கள்ளி"

மேற்படி பூரிமலைக்கு வடபுறமுள்ள சிங்குளம் என்ற கீழ்ப்பொத்தையருகே ' பரமேசுவரன் கோவிலும்' அருகில் தெற்கிலும் வடக்கிலும் உச்சியிலும் மூன்று சுனைகளுண்டு (உச்சிச் சுனையில் நீராடுவர்) தெற்குச் சுனையருகில் பெயர் இல்லாமரம் அதற்குத் தெற்கில் " சூதமாமுனிவர்" ஆசிரமமும் அருகில் ' சிவந்த இலைக்கள்ளி' மின் வெட்டினாற் போல் நிற்கும். இதன் பாலினால் ஏழுவகை உலோகங்களும் பேதிக்கும். அதன் பாலை எடுத்து " வா ரங் சிவா சிவா" என 16 உரு செபித்துக்கொண்டு பணவெடை வீதம் உண்ண ஏழுவகை உலோகமும் மல நீரில் பேதிக்கும். மூன்று உலகும் தெரியும். பலகாலம் வரை பூமியில் இருக்கலாம் அக்கற்பத்தையுண்டு அங்குள்ள காளிகோவிலில் தவம் புரிய (40 நாள்) கற்பகாலம் வரை உடல் அழியாதிருக்கும்.-

அகத்தியர் பூரண சூத்திரம்– 216

"நெல்லி மரம்"

தெற்குச் சுனைக்குத் தெற்கிலுள்ள பாதையில் ஒரு நாழிகை வந்துபின் வடபுறம் செல்லும் பாதையில் சற்றுத் தொலைவிலுள்ள உச்சமலைக்கு வடக்குப்பாதையில் மலைச்சரிவில் "சிவத் தியானவர்" குகையும் இதற்குக் கிழக்கில் வந்து வடக்கில் உள்ள பாதையில் 1/2 நாழிகை தொலைவில் அடர்ந்த வனமும் உள்ளன. இங்கு "நெல்லிமரங்கள்" உள்ளன மரம் பெரியதாயும் இலை வாதரக் காய்ச்சி இலைபோன்றும் காய் கழற்சிக்காய் அளவிலும் இருக்கும். இதன் பட்டையை அரைத்து உருகக்கூடிய ரசத்துக்குக் கவசித்து புடமிட நொறுங்கும். மீண்டும் நெல்லிப்பட்டைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்திச் சீலைசெய்து கனபுடமிடச் செந்தூரமாகும். இதனை நெய்யுடன் உண்ணக் காயசித்தியாகும்.

– பேகர் கல்பம் 300

"வேலிப்பருத்திச் செடிகள்"

மேற்படி வனத்திற்குக் கிழக்கே சற்றுத் தொலைவிலிருந்து வடக்கே போகும் பாதையில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள ஓடையைத் தாண்டிச் சற்றுத் தொலைவில் அடர்ந்த வனமும் அதற்கு மேற்புரம் "பூபாலமாமுனி ஆசிரமம்" உள்ளது. அதற்கு நேர் வட கிழக்கிலுள்ள சதம்புத் தரையில் "வேலிப்பருத்திச் செடிகள்" சிறப்பாய் வளர்ந்துள்ளன. வெற்றிலை போல் சிறியதாய் உள்ள இலைகளைக் கிள்ளினால் பால் வரும். இதனை சமுலத்தின் சாற்றால் துருசு பற்பத்தை அரைத்து வில்லை தட்டி யுலர்த்தி ஒரு சட்டியில் மேற்கூறிய இலையை நறுக்கி பாதி நிரப்பி அதில் வைத்து மேல்பாதியையும் இலையினால் நிரப்பி மேல் மூடி பொருத்திச் சீலைமண் செய்து புடமிட்டுச் சுண்ணமாக்கி நெய்யுடன் உண்டு வரக் காயசித்தி ஆகும்.

– கருவூரார் வாத காவியம் 700.

"துத்திச் செடிகள்"

மேற்படி சதம்புத் தரைக்கு வடக்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள குண்டாற்றைக் கடந்து கூப்பிடு தொலைவில் "நொண்டி மலையும்" அதன் மீதுள்ள பெருங்கனாலுக்கு வடக்கே "முத்துமாமுனி ஆசிரமமும்" அதற்குக் கீழ்ப்புறம் கூப்பிடு தொலைவில் ஒரு சுனையும் உள்ளன. வடக்கில் கூப்பிடு தூரத்தில் ஆளுயரத்தில் "துத்திச் செடிகள்" உள்ளன. இலை வேலிப்பருத்தி இலைபோலும் பூ மஞ்சள் நிறமாயும் இருக்கும். இதன் இலையை அரைத்து 2 குகை செய்து உலர்த்தி அதில் செப்புத் தொட்டிப் பாஷாணத்தைச் சுத்தித்து அறுவகைச் செயநீரால் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி வைத்து அதே குகையில் மூடிச் சீலைமண் செய்து கனபுடமிடப் பற்பமாகும் இதனை நெய்யுடன் உண்ணக் காயசித்தியாகும்.

– போகர் கல்பம் 300

"செந்நாயுருவி"

முன் கூறிய - சுனைக்கு வடக்குச் சரிவிலுள்ள பெருங்கானலுள் "செயமுனிவர்" ஆசிரமமும் அதற்கு வடபுறம் "செந்நாயுருவி" செடியும் உள்ளன. அதன் தண்டு சிவந்தும் இலை நாயுருவி இலை போலும் இருக்கும் ஒரு சட்டியில் காரீயத்தைப் போட்டு எரித்தும் முன் கூறிய செடியின் சமூலத்தின் துண்டுகளால் தேய்த்துவரச் செந்தூரமாகும். அதனை 10க்கு 1 ஆக செம்பிற்குக் கொடுக்க 10 மாற்றாகும். இதே செந்தூரத்தை அனுபானித்துக் கொடுக்கச் சகல பிணிகளும் தீரும்.

– கருவூரார் வாத காவியம் 700

"வெள்ளைச்சாரை"

முன்கூறிய பொத்தைக்கு வடக்குச் சரிவுக்கு அப்பால் கூப்பிடு தொலைவிலுள்ள "தாடகமலைக்கு" தென் பாரிசத்தில் அமிர்தச் சுனையும் அதற்கு மேற்கில் உள்ள கெந்தமா பர்வதத்திற்கு மேற்கே 'வீரமாமுனி ஆசிரமமும்' அதற்கு மேற்கில் வட்டப்பிளவாயுள்ள பாறைக்கு மேற்கில் ஒரு

குகையும் (அதன் வாயில் மிகச் சிறியதாயும் உள்ளே விசாலமாயும் இருக்கும்) குகையிலிருந்து "வெள்ளைச் சாரைக்குலங்கள்" வந்து அருகில் மேயும், அது சமயம் "ஓம் ரங் ரங் படுபடு" என 1008 உரு செபித்துப் பிடிக்க கையில் அகப்படும். அதனை உடனே சாப்பிட மரணமின்றி அட்டமா சித்தும் கிட்டும் . இவ்வெள்ளைச் சாரைகள் கைக்குக் கிட்டாவிடில் அவை அருகிலுள்ள அமிர்தச் சுனைக்குச் சென்று நீரருந்திச் சென்ற பின் அச்சுனை நீரை 40 நாள் அருந்த முன் கூறியப் பலன் கிட்டும்.

— அகத்தியர் பூரண சூத்திரம் 216.

"சோதிப்புல்"

முன்கூறிய குகையைக் கடந்து 4 நாழிகை தூரத்திலுள்ள முத்துமலைக்கு வடக்கே பெரிய வனமும் அதனுள் உள்ள 'வேதமாமுனி' ஆசிரமத்திற்கு வட்புறமுள்ள சதம்புத் தரையில் "சோதிப்புற்களும்" உள்ளன. இது 4 விரற்கடை உயரத்தில் மஞ்சள் நிறமாயும் இரவில் தீபம் போல் சோதியுடனும் இருக்கும் இதனைப்பாலில் அரைத்து 40 நாளைக்கு பாக்களவில் உட்கொள்ள ஆயுள் கூடும் மற்றும் இதன் விழுதில் குகை செய்து அதனுள் இரசத்தையிட்டுப் பொதிந்து சீலைமண் செய்து 100 எருவில் புடமிட இரசம் கெட்டியாகிச் செந்தூரமாகும். அதை வெள்ளியில் 100க்கு 1 வீதம் கொடுக்க பத்து வயதாகும். மேலும் நெல் எடை வீதம் உட்கொள்ள யானை வலுவும் அஷ்டாங்க சித்தியும் கிட்டும்.

— அகத்தியர் தத்துவம் 300

"சத்திரப்பூடு"

மேற்படி முத்து மலைக்கு வடக்கில் 6 நாழிகை தூரத்தில் உள்ள பத்மனாபன் காவுக்குள் மலையூற்றும் அதற்கு வட்டக்கில் உள்ள ' கொப்பறைமலைக்கு ' வடமேற்கில் ஒரு பொத்தையும் அதற்குத் தென்புறம் உள்ள கருங்கானலுக்குள் 'சங்கமுனி' ஆசிரமமும் உள்ளது. அதற்குத் தெற்குச் சரிவில் (ரிஷி, சித்தர்கள்

தீர்த்தமாடக் கூடிய) " பிரம்ம, விஷ்ணு, சிவ சுனைகள்" அடுப்புக் கூட்டினாற் போலிருக்கும் இதில் நடுவிலுள்ள குடுக்கைச்சுனையைச் சுற்றி " சத்திரப்பூடு " உள்ளது. இது 3 அடி உயரத்தில் எருமை நாவு போன்ற இலைகளுடன் இருக்கும் இதில் நெற்கதிர் போன்றுள்ள தின்அரிசியை உருவியுண்ண ஆகாய கெவுனமாகும். சமைத்துண்ண உடல் அழியாது அச்சுனை நீரை 3 கையளவு அருந்த கல்பமாகும்.

கொங்கணவர் முக்காண்டம் 3000.

" பொற்றலைக் கையான்தகரை"

மேற்படி சுனையைக் கடந்து ஒரு நாழிகை தூரத்தில் ஆயிரங்காவுகத்தில் நிற்கும் பெரிய மலையும் மூலிகைகள் அடர்ந்த வனமும் மலைக்கு வடக்கே கூப்பிடு தொலைவிலுள்ள கசிவுத்தரைக்கு மேல்புறம் "காசிபமுனி ஆசிரமமும்" அதற்குத் தென்புறம் " பொற்றாலைக் கையான் தகரைச் செடிகள்" உள்ளன. அதனை " ஓம்ரங் சிவசிவா கனதேவா' என 16 உரு செபித்துச் சமூலம் பிடுங்கி உடன் சமனளவு " கூத்துக் குதம்பையும்" கூட்டி இடித்துச் சாறெடுத்து இரசத்திற்குச் சுருக்கிடக் கட்டும். அதனைச் செந்தூரமாக்கி 20 க்கு ஒன்று கொடுக்கப் பத்து வயதாகும் .

போகர் கல்பம் 300.

"பாடாணம்"

மேற்படி ஆயிரங்காவிற்கு வடக்கே 3 நாழிகை தூரத்திலுள்ள 'வடகரை' மலைக்கு மேற்கே 'பதஞ்சலிமுனி வனமும்' தெற்கே சரளத்தரையும் உள்ளது. இங்குள்ள "பனங்கொட்டை போன்ற பாடாணங்களை" எடுத்து 3 நாளைக்கு காடாக்கினியாக எரிக்க மிக்க ஒளியாயிருக்கும். அதில் தண்ணீரைவிட மூன்று துண்டாய் உடையும். அதனுள் உள்ள வெண்ணிற பாடாணத்தை எடுத்து தாமிரத் தகட்டில் தடவிப்புடமிடப் பொன்னாகும். அதனைச் செந்தூரமாக்கி காலை மாலை 12 நாள் உண்ண உடலின் சட்டை கழன்று பொன்போலாகும். மலநீரில் உலோகம் பேதிக்கும். கல்பகாலம் இருக்கலாம்.

"செங்கொடி வேலி"

மேற்படி வடகரை மலைக்கு வடகிழக்கே ஒரு நாழிகை தூரத்தில் அடர்ந்த கானலுக்குள் 'வியாக்கிரமமுனி' ஆசிரமமும் அருகிலுள்ள சுனையின் வடப்புறம் சிவப்புத் தண்டுகளையுடைய 'செங்கொடிவேலி' செடிகளுள்ளன. அதன் இலையைக் கசக்கிச் சாறெடுத்து உணவிலிட்டு உண்ண இளமைதிரும்பும். பட்டைதண்டு இவற்றையும் சாதத்தில் கிளறியுண்ண நரை, திரை மாறி உடல் பொன்னிறம் ஆகிக் கல்பகாலம் இருக்கலாம். மலநீர் பேதிக்கும். யானையின் வலுவுண்டாகும். அறுசுவை நீக்கிப் பாலண்ணம் உண்ணவும்.

— கருவூரார் வாத காவியம் 700

"பாற் சொறி மரம்"

மேற்படி சுனைக்கு வடகிழக்கே மாட்டுப் பாதையில் 4 நாழிகை தூரத்தில் சிறு குண்டு மலையும் அதற்குக் கிழக்கே 4 நாழிகை தொலைவில் நீர் விழக் கூடிய பேச்சிப்பாறைக்கு வடக்கே கருமலையும் அதற்குத் தெற்கிலுள்ள பெருங்கானலுக்குள் "சனகமாமுனி" ஆசிரமமும் இதற்குக் கிழக்கே யுள்ள ' புராதிமலைக்கு வடமேற்கு மூலையிலுள்ள சதம்புத் தரையில் "பாற்சொறிமரமும்" உள்ளது. இதன் தூர்பெருத்து வெண்மையாயும் இலை இருவிரலகலத்தில் முனை நீண்டும் இருக்கும். அதைத் தட்டினால் பால் வரும். பால் சாரல் சாரலாய் வழிந்து மரத்தூரில் வெண்மையாய் உறைந்திருக்கும். இந்த அடையாளம் கண்டு பாலைச் சிறட்டையில் பிடித்து வீசம் படிக்குக் குறையாமல் காலை மாலை ஒரு வாரம் உட்கொள்ள காயசித்தியாகி யானை வலுவுண்டாகும். 100 வயது இருக்கலாம்.

"வரை ஆலமரம்"

மேற்படி சதம்புத்தரைக்கு வடக்கே 2 நாழிகை தூரத்தில் உள்ள 'சரளைமலை' யின் மேற்புறம் குண்டாறும் அதற்கு வடக்கிலுள்ள பெரிய ஆரியங்காவினுள் ' சிவப்பிரும்மரிஷி' ஆசிரமமும் காவுக்கு வடக்கே 4 நாழிகை தூரத்திலுள்ள மேல் கீழாய் ஓடும் ஆற்றின் கரையில் நெரிக்கல் சரளையும் உள்ளன. அங்கு தூர் பெருத்த குட்டையான ஆலிலை போன்று சிறிய

இலைகளையுடைய "வரை ஆலமரம்" உள்ளது இம்மரப்பட்டையை 1 வீசையை 4 படி உதகத்திலிட்டுக் கால்பங்காகக் குறுக்கி வீசம் படி யளவில் தினமிரு வேளையாக 8 நாள் சாப்பிட்டு வர காயசித்தியாகும். யானையின் வலு உண்டாகும் நரை, திரை மாறும்.

"செவ்வள்ளிக்கொடி"

முன்கூறிய ஆரியின்காவு ஆற்றின் வடக்கில் ஒரு நாழிகை தூரத்திலுள்ள கருங்கானலின் வடபுறம் தரகம் புற்களடர்ந்த பராசரிஷி வனமும் கீழ்ப்புறம் கூப்பிடு தொலைவில் நீர்க்கசிவுள்ள செம்மண்தரைக்கு மேற்கே "செவ்வள்ளிக் கொடிகளும்" படர்ந்துள்ளன. கொடியை வெட்டிவிட்டுத் தோண்டிப்பார்க்க நாய்க்குட்டி யளவான பெருங்கிழங்குகள் காணும். அச்சிவந்த கிழங்கை அறுத்துண்ண மயக்கம் உண்டாகும். 3 நாளைக்கு மயக்கம் தெளியும் வரை பால்பழம் கொடுத்து 4 ஆம் நாள் பச்சரிசியும் பாசிப்பயறும் கூட்டிச் சமைத்துண்ண நரை, திரை மாறிக் கல்ப தேகமுண்டாகும். இங்ஙனமே இக்கிழங்கினுள் தாமிரத்தையிட்டு வேகவைத்துக் களிம்பை நீக்கிய பின் தகட்டிற்குச் சமனளவு பொன் கூட்ட பத்து வயதாகும். அதனைச் செந்துரமாக்கியுண்ண நரை, திரை மாறி யானை வலுவுடன் காய சித்தியாகும்.

— கருவூரார் வாத காவியம் 700

"பலுனி மரம்"

மேறபடி செம்மண் தரைக்கு வடக்கே ஒரு நாழிகை தூரத்திலுள்ள காளிகானலின் மேற்புறத்தில் வல்லச் சித்தர்கள் உறையும் ஒரு கையும் அதற்குக் கீழே கூப்பிடு தொலைவில் கிழக்கு முகமான தொரு காளிகோயிலுமுள்ளது. அதன் முன் அத்திக்காய்போல் பறவைகள் உண்ணும் பழங்களும், கையகல இலைகளும் அடி பெருத்து முள்ளி 'பலுனி மரம்' உள்ளத. அதன் தூரைக் குடைந்து ஒரு பலம் சூதத்தை இட்டு அதே பட்டையால் மூடி மூன்று மாதம் சென்று எடுக்க ரசம் வெள்ளி போல் உறைந்திருக்கும். அதனை உருட்டி வைக்க மணிபோலாகும் அதனை வாயிலடக்கக் கவுனம் உண்டாகும்.

"செங்குமரி"

மேற்படி கோவிலுக்கு வடக்கே 4 நாழிகை தூரத்திலுள்ள 'அருவிமலையைக் கடந்து வடமேற்குப் பாதையில் பெருங்கானலும் அதன் நடுவிலுள்ள கசிவுத் தரைக்கு மேற்புறம் பால் முதற்கொண்டு சிவப்பாயுள்ள "செங்குமரிச் செடிகள்" உள்ளன. கசிவுத் தரைக்கு வடக்கே 4 நாழிகை தூரத்திலுள்ள உயர்ந்த வட்டப்பாறை மீது ஏறி நின்று பார்க்க "திருக்கனங்குடியும்" "நம்பியாண்டார் கோவிலும் தெரியும்" பாறைக்கு வடமேற்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள மலைச்சரிவில் "குதம்பை" முதலிய சித்தர்கள் உறையும் குகையும் அதற்கு வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் மலைநம்பி கோயிலினருகில் வற்றாத சுனையும் ஆறும் அதன் வடகரையில் "வரையலாமரமும்" நம்பி கோயிலுக்கு வடக்கே 2 நாழிகை தூரத்திலுள்ள "குரும்பை மலைக்கு" வடக்கே 1/2 நாழிகை தூரத்தில் "புண்ணாக்குச் சித்தர்" குகையும் அருகே மண்மலையும் உள்ளது. மலைமீதுள்ள சமதளமான 'இடத்தில் கரிப்பான் இலையை போன்று சற்று பெரிதாயும் பூ தண்டு முதலியன கருப்பாயும் ஒரு முழ உயரத்தில் உள்ள 'கருங்கரிப்பான்' செடிகள் உள்ளன. இதன் சமூலத்தைச் சூரணித்து வெருகடியளவில் காலை, மாலை ஒரு மண்டலம் உண்ண நரை, திரை, மாறி யானைவலுவுடன் 100 ஆண்டு காலம் வாழலாம். பச்சரிசியும் பாசிப்பயரும் கூட்டிச் சமைத்துண்ணவும்

– சூரியானந்தர் கல்பம் 25

கருங்கழுகு

மேற் படி சமதளத்திற்கு இடப்புறமுள்ள ஆற்றின் வடக்கே வந்து மேற்கே செல்லும் பாதையில் கூப்பிடு தொலைவில் 'யோக சித்தர் குகையும்' அங்கிருந்து 1/2 நாழிகை தூரத்திலுள்ள சிறு குண்டு மலையினருகில் பெரியதொரு ஆலமரமும் காணும். அதில் 'கருங்கழுகுகள்' மிகுந்திருக்கும். அவை ஆளைக் கண்டால் பறந்தோடிவிடும். நாவற்பழ நிறமுடைய அவற்றின் சிறகுக்கள் கீழே உதிர்ந்து கிடக்கும் அதனை எடுத்துக்

கண்ணுக்கு நேரே பிடித்துப் பார்க்க வானத்தின் பதினாறு உலகும் தோன்றும் -சிறகை எரித்துக் கருக்கி நெய், புனுகு, சவ்வாது கூட்டி அரைத்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு நெற்றியில் திலகமிடத் தூரத்தில் உள்ளவையும் அருகில் தோன்றும் , தன்னுருவைப் பிறர் காண இயலாது. ஞானம் கிட்டும்.

– கருவூரார் வாத காவியம் 700.

"செந்தும்பை"

மேற்படி ஆலமரத்துக்கு வடபுற மேற் சரிவுப்பாதை மலையாளத்திற்குச் செல்லும். மலையடிக்குறிச்சியின் சரிவில் பல சுற்றுக்களையுடைய பாதாள வாசல் மிருகப்புடவு உள்ளது . அதன் ஒரத்தில் சிவப்புக்கதிர் வாங்கி மலரக்கூடியதாயுள்ள செந்தும்பைச் செடிகளுள்ளன" 'ஓம் ரங் கொன்றை சூடி வருக' என 108 உரு செபித்து அதனிலையைப் பிடுங்கி அரைத்துத் தாமிரத்திற்குக் கவசித்துச் சீலை செய்து புடமிடச் செந்தூரமாகும். அதனை வெள்ளியிலிடப் பத்து வயதாகும். 3 நாளுண்ணக் காயசித்தியாகும். இலைச்சாற்றில் வீசம் படி வீதம் 3 நாள் உண்ண முயல் கண்ட வலிப்புத் தீரும்.

"கருந்தாமரை"

மேற்படி புடவிற்கு மேற்கே 4 நாழிகை தூரத்திலுள்ள ஒற்றை யூருக்கு மேற்கில் 'திருமூலர் குகையும்' அதன் வடக்கே ஒரு நாழிகை தூரத்தில் மவுனச்சித்தர் குகையோரம் சரசை ஆற்றின் மேற்கரையில் வெண்ணாவல் மரமும் உள்ளது. ஆற்றுக்கு மேற்கே 5 நாழிகை தூரத்தில் உள்ள வனச்சரிவில் உள்ள வன தேவதைகளும் , வைரவன் கோவிலும் அடுத்து அதன் வடகீழ் மூலையிலுள்ள குட்டத்தினருகில் சதம்புத்தரைமீது "கருந்தாமரை" உள்ளன. தாமரைக் கிழங்கை "அரகரசிவசிவா லெட்சுமிதேவி" என 16 உரு செபித்து எடுத்து 40 துண்டுகளாக்கித் தினம் ஒன்றாக உண்ண இளமை திரும்பும் ,கிழங்கின் சாற்றில் சுருக்குக் கொடுக்க ஏழுவகை உலோகத்தின் களிம்பும் நீங்கும்.

– புலஸ்தியர் கல்பம் 200.

" கார்போக அரிசி"

மேற்படி குட்டத்தினருகிலுள்ள காளிகோயிலின் பக்கம் 'தேகசித்தர்குகை' உள்ளது அருகில் சதம்புத்தரையில் "கார்போகரிசிச்செடிகள்" உள்ளன. அதன் அரிசியைச் சூரணித்து வெருகடியளவில் தேனுடன் கொள்ள வாந்தி, குட்டம், ஈளை, நெய்யுடன் உண்ண மூலம், பவுத்திரம், விப்புருதி சூரணத்துடன் சமஅளவு வாய்விளங்கச் சூரணம் கூட்டி கோமூத்திரத்தில் அல்லது சூரணத்துடன் திப்பிலி கூட்டி தேனுடன் உட்கொள்ளக் சகல குட்டமும் முறையே நீங்கும்.

" வல்லாரை"

முன்கூறிய காளிகோயிலினைக் கடந்து 4 நாழிகை தூரத்தில் " வரரிஷி" ஆசிரமமும் குகைக்குத் தெற்கில் சிறுமலைக் குண்டும் உள்ளது. அதன் வடக்கிலுள்ள கமலநாதன் காவினுள் " வல்லாரை" படர்ந்துள்ளது இதனை ஞாயிறும் பூசமும் கூடிய நாளில் " வாவா வைரவி ரங் " என 16 உரு செபித்துச் சமூலம் பிடுங்கி நிழலில் உலர்த்திச் சூரணித்து வெருகடி அளவில் காடியில் 5 மாதம் உட்கொள்ள நரை, திரை மாறி இளமையுடனும் 1 ஆண்டு கொள்ள யானை வலுவுடனும் 100 வயது வரை அழகு மிளிர இளமையுடனும் இருக்கலாம். பழம் சர்க்கரை பாலன்னம் உண்ணலாம்.

— அகத்தியர் 1200

" பேய்ச்சுரை"

மேற்படி மலைக் குண்டுக்கு வடக்கே 10 நாழிகை தூரத்திலுள்ள நாத மலையினருகில் ' கவுபாலர் குகையும்' அதற்குத் தெற்கில் ' கானற்பலா' மரமும் உள்ளன. நாத மலைக்கு வடக்கே 4 நாழிகை தூரத்தில் முடக்கம்பாறையின் வடபுறம் " மதிராசரிஷி" ஆசிரமமும் அதற்கு வடக்கிலுள்ள சதம்புத் தரையில். கரிப்பான் செடிகளுள்ளன. முடக்கம் பாறையினின்றும் 3 நாழிகை தூரத்திலுள்ள திருகைக் கேணியைக் கடந்து மேடேற இராக்காயி அம்மன் கோயிலும் அதன் வடபுறம் ' கௌதமர்' ஆசிரமமும் உள்ளது. அதற்கத்

தெற்கில் "பேய்ச்சுரை மண்டியுள்ளது" அதன் விதைகளைக் குழித்தைலமிறக்கி 3 கழஞ்சு வீதம் சமனளவுபால் தேன், நெய் கூட்டி உண்ண மூர்ச்சையாகும். உடன் இத்தைலத்தை தொட்டு உள்ளங்கை, கால்களில் தடவ மயக்கம் தெளியும். இப்படி 21 நாள் சாப்பிட உடல் ஒளிரும். 3 மாதம் உண்ண 16 வயது இளமை திரும்பும். ஒரு ஆண்டு சாப்பிட ஆயுள் நீடிக்கும். பாலன்னம் மட்டும் உண்ணவும்.

– கருவூரார் வாதகாவியம் 700.

"அவுரி"

மேற்படி அம்மன் கோவிலினருகிலுள்ள "தோரணமலைக்கு மேற்கில் மூங்கிலூற்றும் அதன் வடபுறமுள்ள 'தேரையர் ஆசிரமத்திற்கு' மேற்குச் சதம்புத் தரையில் "கற்றாமரையும்" உள்ளன. மூங்கிலூற்றின் வடக்கே 2 நாழிகை தூரத்திலுள்ள "ஊற்றுமாமலைக்கு" மேற்கில் கிணறு போன்ற கெவியும் அதற்கு வடக்கில் மணற்சாரியான குண்டு மலைக்குக் கிழக்கில் உள்ள வறட்டாற்றுக்கு மேற்கில் சீலக்காரன் புடவுமுள்ளது. சற்றுதூரத்திலுள்ள "விசுவினித்தேவர் ஆசிரமத்திற்கு" வடக்கில் "மாமாங்குறிச்சியும்" அதற்குத் தெற்கேயுள்ள ஒப்பநின்றான் பொத்தையின் மேற்சரிவில் "செம்புனல் முருங்கைமரம் உள்ளது" பொத்தையின் வடமேற்கு மூலைச் சரிவிலுள்ள காட்டின் நடுவில் 'அம்பிகானந்தர் ஆசிரமமும்' அருகில் கோபுரம் போன்ற முண்டகவிருக்ஷமும் உள்ளன. ஆசிரமத்திற்கு மேற்கில் 1/2 நாழிகை தூரத்திலுள்ள பொன்னறியான் காவினுள் 'டமரானந்தர் ஆசிரமமும்' அதற்குத் தெற்கிலுள்ள கசிவுத் தரையில் 'அவுரிச்செடிகள்' முளைத்துள்ளன. அவற்றை 'வங்ரங்' என 16 உரு செபித்துச் சமூலம் பிடுங்கி நிழலில் உலர்த்திச் சூரணித்து சீனி கூட்டி வெருகடியளவில் 6 மாதம் கொள்ள முதுமை மாறி இளமை திரும்பும். ஒரு ஆண்டு உண்ண யானை வலுவுடன் சகல சித்தியும கிட்டும்.

– கருவூரார் வாதகாவியம் 700.

"குமரிக்கற்றாழை"

மேற்படி குருநாக்கல் மலைக்குத் தென்மேற்கில் ஒரு நாழிகை தூரத்தில் உள்ள வட்டப்பாறை மீது ஏறிப்பார்க்க "மலையடிக்குறிச்சி " தெரியும். அதற்கு வடக்கிலுள்ள 'கையாட்டிச்சித்தர் குகை' ஓரம் " குமரிக் கற்றாழை" உள்ளது. அனுஷமும் ஞாயிறும் கூடிய நாளில் " வாவா வைரவா " என 16 உரு செபித்து கற்றாழைச் சோறெடுத்து வெருகடியளவு திரிகடுகு சூரணம், சீனி, நெய் கூட்டி ஒரு மண்டலம் உண்ண குட்டம், மூலம் , பவுத்திரம் , நீங்கி உடல் ஒளிரும். ஒரு ஆண்டு உட்கொள்ள பிணியின்றி வலுவுண்டாகி ஞானம் கிட்டிச் சித்தனாவான். எச்சில் விட்டுச் சூதத்தை மத்திக்கக் குளிகையாகும்

– சூரியானந்தர் கல்பம் 25

"பொற்பூ தை வேளை"

மேற்படி குகையினின்றும் ஒரு நாழிகை தூரத்திலுள்ள கூடவநல்லூர் மலைக்கு மேற்புறம் " தாடகைமலையும் " அருகிலுள்ள ' மகாதேவர் கோவிலின் ' முன்னால் "கண்ணாநந்தார் " ஆசிரமமும் அதற்கு வடபுறம் ' ஏரழிஞ்சில்' மரமும் உள்ளது. கோவிலிலிருந்து ஒரு நாழிகை தூரத்தில் உள்ள கொடு முடி மலையடிவாரத்தில் சிறு குண்டுமலையும் அருகிலுள்ள 'சித்தானந்தர்' ஆசிரமத்திற்கு வடக்கே "பொற்பூ தை வேளையும்" உள்ளது. அது தைவேளைச் செடிபோல் மஞ்சள் பூவுடனிருக்கும் , செடியின் சமூலச்சாற்றில் சுருக்கிட சூதம் கட்டும். அத்துடன் செப்புத் தகட்டை உருக்கக் கண்விட்டாடும். அதைக் கட்டியாக எடுத்து நொறுக்கி மூடி சாற்றிலரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். அதைப்பத்துக்கு ஒன்று வெள்ளியில் இட பத்து மாற்றாகும் ' அதனைப் பற்பமாக்கி உண்ண உடல் சித்தி பெறும். செடியின் சமூலச் சாற்றில் வீசும் படி வீதம் ஒரு வாரம் அருந்த உடல் பொன்னிறமுடன் கல்பமாகும்.

– சூரியானந்தர் கல்பம் 25

" நாகதாளிக்கள்ளி"

மேற்படி குண்டுமலைக்கு வடக்கில் ஒரு நாழிகை தூரத்திலுள்ள முன் கூறிய " இங்கிலாசபர்வத" மலையின் வடபுறம் சிறிது தூரத்தில் " சச்சிதானந்தர்" ஆசிரமத்திற்கு மேற்புறம் ' நாகதாளிக் கள்ளி' உள்ளது . அதனைப் பிடுங்கி வந்து அரைத்துத் துணியில் சிறு பொட்டலம் கட்டி நல்லெண்ணெயிலிட்டு சூதத்தைவிட்டு ஒரு சாமம் எரிக்க இரசம் சுத்தியாகும் அதனை எடுத்துமேற்படி நாகதாளி விழுதினால் செய்த குகையுள் வைத்து விழுதினால் மூடி பொன் ஊமத்தங்காயுள் வைத்துச் சீலை செய்து புடமிட இரசம் உருகிக் குளிகையாகும். இக்குளிகைக்கு சமனளவு, மனோசிலை, நாகம் பறங்கி, ஊசிக் காந்தம், வெடியுப்பு, சீனம், புத்தொட்டி, தோட்டி தீமுறுகல், பொன் நிமிளை ஆகியனவும் 2 பங்கு கெந்தியும் கூட்டி செம்புளி நடலைக் கிழங்குச் சாற்றிலரைத்து 24 உருண்டை செய்து மேற்படி குளிகையை உருக்கு முகத்தில் ஒவ்வொன்றாய்க் கொடுக்க செந்தூரமாகும். அதில் அரிசி எடை வீதம் நெய்யுடன் உண்ண நரை, திரை மாறி யானை வலுவுடன் உடல் சித்தி பெறும்.


" முதல் சித்தன்"

மேற்படி பர்வதத்திற்கு வடகிழக்கிலுள்ள அடர்ந்த காந்த நாதன் காவின் நடுவிலுள்ள வெள்ளைப்பாறை மீது நின்று பார்க்க " வள்ளியூரும், முருகன் கோவிலும்" குளமும் தெரியும் ஆலயத்தினுள் சென்று இங்கிலாச பர்வதமாகிய மலைவளங்கள் கண்டுவர அருளிய இறையை வணங்கி விடைபெற வேண்டுகிறேன். நிற்க!"

இக்கட்டுரையை முடிக்கும் முன் எல்லாம் வல்ல இறைவனையும் முதல் சித்தனையும் எனது ஆசான் யோகஸ்ரீ **A-P-Y** ஆனந்தம் அவர்களையும் சிரம் தாழ்த்தி வணங்குவதுடன் நி஠ைவு செய்கிறேன்.

ஓம் நமசிவாய நம

திருச்சிற்றம்பலம்.



சட்டைமுனி.சீர்காழி- ஓர் கற்பனை வடிவம்

இந்தநூலில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகளின் பெயர்களும் தொடர்புடைய மலைகள் சித்தர்களும்.

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
1.	அழுகண்ணி	வள்ளியூர் இங்கிலாசபர்வதம்	கணநாதர்	
2.	தொழுகண்ணி	சித்தர்மலை	சிவானந்தர்	
3.	கணைஎருமைவிருக்ஷம்	வைரவன் காவற்பாறை	சூரியானந்தர்	
4.	தில்லை விருக்ஷ்ம்	செண்பகநாதன் காவு	சொரூபானந்தர்	
5.	நாள்வேதி உதகம்	மண்மலை	தக்ஷிணாமூர்த்தி	
6.	சதுர மரம்	குடைக்காரன்கல்	ஏகநாதர்	
7.	சத்தவேதிக்கற்கள்	களக்காடுமலை	மதிசிலமாமுனி	
8.	தும்புராமரம்	வராகிமலை	அகத்தியர்	
9.	காட்டாமணக்குமரம்-உதகம்.	மண்கண்டம்	கம்பளிநாதர்	
10.	அரிநெல்லி மரம்	காட்டாறு	புலஸ்தியர்	
11.	ஆச்சாமரம் – திரிவேதிஉதகம்	தேனருவி அருவிமலை	திரிகாலக்ஞான-முனி	
12.	சரள தேவதாருமரம்	குண்டு மலை	அருட்சித்தர் (கெவுனக்குளிகை)	
13.	சோதிவிருக்ஷம்	செங்கோட்டைமலை	இராகரிஷி	
14.	கருவாழை	குண்டாறு-குற்றாலமலை	வசந்த மாமுனி	
15.	கருஊமத்தை	எல்லைக்குட்டம்	போதமுனி	
16.	மலை அரளி	மதியமான் மலை	காங்கேயர்	
17.	பப்பரப்புளியமரம், – பஞ்சவேதி	சுரண்டையூர் மலை	காஞ்சனர்	
18.	சோமவிருக்ஷம்	புலிமலை	சமாதி சித்தர்	
19.	எட்டிமரம்	புளியங்குடி ஆறு	காந்தமகரிஷி	
20.	வெள்ளெருக்குமரம்	வட்டப்பாறை	வாசியோகச்சித்தர்	
21.	சிவப்புகீழ்க்காய்நெல்லி	தசவேதிஉதகம்	வாதசாந்திமகரிஷி	
22.	குங்கிலியமரம்	குமரிமலை	காலாட்டிச்சித்தர்	
23.	தான்றிமரம்	கண்ணாற்றுமலை	சத்தரிஷி	
24.	காயாமரம்	வெள்ளைக்கல்பாறை	தேவமகரிஷி	
25.	சிவப்புத் தூதுவேளை	குளிர்கானல் – மண்மலை	பற்பமகரிஷி	
26.	செங்கரிப்பான்	கலமலை, இருநாள் வேதி உதகம்	நவநாதர்	
27.	சர்க்கரை வேம்பு	பாதர் மலை	அடவிச்சித்தர்	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
28.	வன்னிமரம்	கல்லூற்று	நாதாந்தர்	
29.	கற்புடையாள் ஊற்று	சங்கரன் கோவில் கோவில்	கருப்பண்ணசாமி	
30.	சேம்புஊற்று	-do -	-	
31.	பாப்பாத்தி கெசம்	-do-	-	
32.	வட்டப்புடவு	முஞ்சி மலை	–	
33.	நம்பிமான்பாறை	இராஜபோபாலபேரி	ராமர் கோவில்	
34.	கீரிவிருட்சம்	குமரிக்குட்டம் –சிவகிரி	செகராசரிஷி	
35.	தேவதாருமரம்	வாசிமலை	நாதமுனிவர்	
36.	இந்திரவீரமரம்	சவரிமலை	வாசுதேவ மகரிஷி	
37.	வேம்பின் மேற்புல்லுருவி	பேமலை	பாலையானந்தர்	
38.	கல்லத்திமரம்	-do-	தொழுகண்ணிச் சித்தர்	
39.	குருக்கத்திமரம்	குண்டுமலை	சாங்கியமகரிஷி	
40.	சேங்கொட்டைமரம்	கோட்டைமலை	மார்நாட்டுச்சித்தர்	
41.	சீந்தில் கொடிகள்	பெரியமலை	கிராமரிஷி	
42.	வேர்ப்பலாமரம்	அரியூற்று	பிராணாயாமச்சித்தர்	
43.	கருங்கொடுவேலி	குண்டாறு	மணிகட்டிச் சித்தர்	
44.	கருந்துத்தி	வாரணமலை	கணையாழிச் சித்தர்	
45.	செந்தகரை	மல்லநாட்டு மலை வத்திராயிருப்பு	கலிங்கநாதர்	
46.	செங்கடுக்காய்மரம்	தாணிப்பாறைமலை	அத்திரிமகரிஷி	
47.	வெள்ளைப்பணல் முருங்கை	பசுமிதிப்பாறை	–	
48.	பேய்ச்சுரை	மண்கண்டம்	–	
49.	குறுவரிக்கற்றாழை	அடர்வனம்	–	
50.	மஞ்சள்பூ தை வேளை	வற்றாத பொய்கைக் கரை	சூரியனாந்தர்	
51.	செங்கற்றாழைகள்	ஓடைக்கரை மேல்புறம்	–	
52.	செந்நாயுருவி	மண்கண்டம்	–	
53.	அமிர்தவள்ளி	கரும்பாறை	–	
54.	உரோமவிருட்சம்	மேடு– இரட்டை லிங்கம்	இராமதேவர்	
55.	கருநெல்லிமரம்	நகவல் தரை	–	
56.	நாகப்படக்கற்றாழை	நகவல் தரை	–	
57.	தைலக்கிணறு	தேக்கப்பண்ணைமலை	காலாங்கிமுனிவர் துர்வாசர்	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
58.	வெண்நாவல்	சதுரகிரி சந்தனமகா – லிங்கம்	சட்டைமுனி	
59.	வனப்பிரமி	மண்மலை	–	
60.	முப்பிரண்டை	-do-	-	
61.	கரிப்பான்	கும்பமலை.	அகத்தியர்	
62.	சோதிப்புற்கள்	மண்கண்டம்	–	
63.	சிவந்த இலைக்கள்ளி	கங்கண ஆறு, குளிராட்டி பொய்கை.	போகமுனிவர்	
64.	ஏரழிஞ்சில் – மாதவேதி	எல்லைக் குட்டம் மண்மலைக்காடு	புகண்டர் உரோமரிஷி	
65.	செங்கொடிவேலி	பேச்சிப்பாறை	–	
66.	சாயா விருட்சம்	மண்மலைச்சரிவு	யூகிமுனிவர்	
67.	சேர்ந்தாடும் பாவை	மண்மலைச்சரிவு	–	
68.	பஞ்சதரு	மகாலிங்கர் சன்னதி	சுந்தரானந்தர்	
69.	சஞ்சீவி மூலி	வட்டச்சுணை	–	
70.	பறவைப்பாம்பு, கருங் குரங்கு	சன்னாசி வனம்	அழகானந்தர்	
71.	ரோம வேங்கைமரம்	சங்கிலிப்பாறை	பிரம்மமுனி	
72.	இருப்பவல் செடி	– do-	-	
73.	சுணங்கவிருட்சம்	கற்கண்டுமலை, தசவேதி	காலாங்கி	
74.	பவளத்துத்தி	கன்னிமார்கோவில்	நந்தீஸ்வரர்	
75.	கருநொச்சி	வெள்ளைப்பிள்ளையார் கோயில்	குருராசரிஷி	
76.	கருநாரத்தை	-do-	-	
77.	நாகதாளி	மண்மேடு	கொங்கணவர்	
78.	சிவந்த புனல் முருங்கை	உதயகிரி	உதயகிரிச் சித்தர் பிரிஞ்சவ முனிவர்	
79.	பால்ப்பட்டை	சதுரகிரி	மேகசஞ்சாரரிஷி தத்துவஞானசித்தர் கன்னிமார்கோயில் காலமகரிஷி வீடணமுனிவர்	
.80.	அகில் மரம்	குபேரகிரி	யாகோபுமுனிவர்	
81.	பாதிரிமரம்	கட்டளைலிகசம்	பிருங்கி முனி	
82.	கடுக்காய்மரம்	வருஷநாட்டுமலை	காளிங்கர்	
83.	தேற்றான்மரம்	கடமலைக்குண்டு	மார்ச்சாலமாமுனி	
84.	சுரப்புன்னை	எருதுவிரட்டிமலை	கருங்காலமாமுனி	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
85.	கல்தாமரை	சுருளிமலை எல்லை	கமலமாமுனி	
86.	முண்டகவிருக்ஷம்	வன்னியூற்று	வேதாந்தச் சித்தர்	
87.	செங்கற்றாழை	காணூற்றுக்கரை	பூத நாராயணச் சித்தா	
		காளிக்கானல்		
		யானக்கல்	வியாசமுனிவர்	
		அரியூற்று, மிருகப்புடவு	கன்னுவமகரிஷி	
			வசிஷ்டமகரிஷி	
88.	கைலாயப்புடவு	சுருளிமலை	கபாலநாதர்	
89.	சிறியாநங்கை	செல்விமலை	சிவவாக்கியர்	
			பரத்துவாசர்	
90.	ஆயில் மரம்	சருவிமலை	கூர்மானந்தர்	
91.	மயிலைமரம்	நாடுகண்டான் மலை	கற்கமுனிவர்	
92.	பிறாய் மரம்	பூலாத்தூர்மரம்	குமரசுந்தரர்	
93.	கெட்டிவஞ்சிமரம்	வாசிமலை	ஆத்மஞானசித்தர்	
		(ஆண்டிப்பட்டி)		
		நந்திமலை		
		ஒத்தக்கோவில்மலை		
		பாலைக்கோம்பைமலை		
		மாவூற்றுவேலப்பர்மலை		
94.	கொஞ்சிமரம்	பெருமானூற்று மலை	சௌனகமுனி	
		ஒண்டிக்கறட்டு மலை		
		கண்டமனூர் மலை		
95.	தொனியாமரம்	கருமலை	அறிவானந்தர்	
96.	பொன்மணல்	பசுமலை	பவனிசித்தர்	
97.	பிர்மதரு	திருப்பரங்குன்றம்	காசிவிசுவநாதர்	
98.	தைலக்கிணறு	நாகமலை	கெவுனசித்தர்	
99.	கருக்கு வாச்சிமரம்	யானைபடுத்தது	பண்டரிநாதர்	
		போன்ற மலை		
100.	ஊக்குணா மரம்	நரசிங்கமலை	சிவனேசர்	
101.	தைலக்கிணறு	கிடாரிமலை	சிவப்பிரகாசர்	
102.	கைவலாக்கை மரம்	அத்திக்கோம்பைமலை	மேருகிரிச்சித்தா	
		வருக்கைமலை	கடப்பிள்ளை	
		வெள்ளிமலை		
	முண்டகவிருட்சம்	இயமலை		
	செங்கொடிவேலி	சோலைமலை	ஞானச்சித்தர்	
	கருநெல்லி	கோம்பை மலை	அக்ப்பேய்ச்சித்தர்	
103.	சுணங்கவிருட்சம்	அருவிமலை	உலகயிமுனி	
	கருநாரத்தை	பண்ணைமலை	சலற்காரர்	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
104.	பொற்சீந்தில்	வள்ளிமலை	அசமாருதர்	
105.	வெண்துத்தி	விமலமலை	பூவாடைச்சித்தர்	
		கொடுமலை	லாடசித்தர்	
106.	திருகுக்கள்ளி	அவுனிமலை	கபாடசித்தர்	
107.	மிளகரணை	சுடர்க்கோம்பைமலை		
		குண்டுமலை	பணநந்தி முனி	
108.	காணற்பலா	அடவிமலை	குருபரர்	
		உருக்கை மலை		
109.	கெவுனக் குளிகை	உச்சிப்பிள்ளையார்	சிவத்திசுவார்	
		கொல்லிமலை	கைலையங்கிரியர்	
		குமணமலை	சம்புமகரிஷி	
110.	வெள்ளைவேம்பு	பள்ளிநாதர் கோயில்	உதரகிரிச்சித்தர்	
		கருமலை	கொல்லியம்பாவை	
	கணங்கவிருட்சம்	சிறுமலை	கமலாகனசித்தர்	
	உரோமவிருட்சம்	கஞ்சமலை	சுழிமுனைச்சித்தர்	
111.	இரத்தப்பலாசமரம்	குமளிமலை	தபோதனச்சித்தர்	
		ஜோதிவிருட்சம்		
	கருநெல்லி	குடகுமலை	ஆதாரச்சித்தர்	
	-do-	குருமலை	கூனக்கண்ணர்	
112.	முப்பிரண்டை	கன்னிவாடி மலை	மெய்கண்டார்	
		படுக்கைமலை		
	ஏரழிஞ்சில்	மந்திமலை	குண்டலிச்சித்தர்	
		ஏணிச்சாந்துமலை	வாலையானந்தர்	
113.	சேர்ந்தாடும் பாவை	மஞ்சனப்பாறைமலை	முத்தானந்தர்	
	கருநொச்சி	மண்கண்டம்		
	இருப்புவல்	கூமாமலை	சமயநாதர்	
	,,	(வேடசுந்தூர்		
		உச்சமலை)	சுந்திரநாதர்	
114.	நேத்திரஞ்சிமட்டி	அருவி மலை		
		சிவந்திப்பாறை		
	,, (சத்திரப்பட்டி)	பூசணிக்காய்மேடு	பூதானந்தர்	
115	வல்லாரை	கூனமலை	கடம்பநாதர்	
116.	சிவனார் வேம்பு	வராககிரி	தாருகாவனரிஷி	
117.	வெள்ளைநீர்முள்ளி	கடம்பமலை	மார்க்கண்டேயமுனி	
118.	ஓரிலைத்தாமரை	பழனிமலை	போகர்	
	ஜோதிவிருட்சம்	வராகக்கிரிப்பாறை	புலிப்பாணி	
	,,	குமரிமலை	தேசிகமுனி	
119.	பூமிசர்க்கரைக்கிழங்கு	கோம்பை மலை	கச்சியப்பமுனி	
		மலைஅடிவாரம்	பிருகு மகரிஷி	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
120.	பயற்றங்காய்க்	முண்டகிரிமலை	சுவர்க்கபதமாமுனி	
	கள்ளிமரம்	வன்னிமலை		
	சதாசிவன் கோவில்	சுவாமிமலை	விண்ணோக்குசித்தர்	
		”	அகத்தியர்	
	செங்கெடிவேலி	”	புலத்தியர்	
		பருவதமலை	கொங்கணவர்	
	கற்றாமரை	”	தொழுகண்ணர்	
	முண்டக விருக்ஷம்	கொங்கு நாட்டுமலை	சங்கிலிச் சித்தர்	
121.	பாம்புகெவி (கருநெல்லி)	வடுமலை (உ.பேட்டை)	கருவூரார்	
		பூவூற்றுமலை	அகிலாண்டசித்தர்	
	சுணங்கவிருக்ஷம்		பாம்பாட்டிச் சித்தர்	
	காயாவிருக்ஷம்	மஞ்சமலை	வால்மீகர்	
	கணைஎருமை விருக்ஷம்	பொள்ளாச்சி மலை	விளையாட்டுச்சித்தர்	
	உதகசுனை	தந்திமலை	விமலசித்தர்	
	(கருநாரத்தை)			
122.	கைலயங்கிரி	தேவிமலை	திரிகோணசித்தர்	
	உரோமவிருக்ஷம்	வெள்ளையங்கிரி	அமிர்தசித்தர்	
	உதிரவேங்கை	செம்பாயிமலை	மிருகண்ட மகரிஷி	
	ஜோதிவிருக்ஷம்	கைலயங்கிரி	பராபரச்சித்தர்	
123.	சோதிப்புல் (ஏரழிஞ்சில்)	மணலூற்று	பிடிநாக்கீசர் குகை	
	சோதிப்புல்	கொஞ்சிமலை	பரஞ்சோதிமுனி	
	அழுகண்ணி	குதிரை மலை	சினேந்திரமுனி	
	தொழுகண்ணி	கருமலை	அவத்தியமாமுனி	
124.	ஆடுதின்னாப்பாளை	குண்டுமலை	புவியானந்தர்	
125.	ஆடாதேடை	”	வெகுளிநாதர்	
126.	புளியம்பிரண்டை	நீலகிரிமலை	தத்துவநாதர்	
	(முப்பிரண்டை)	”	நாரதர்	
	அப்பிரகப்பாறை	மண்கண்டமலை		
127.	சீதா செங்கழுநீர்	ஜவ்வாது மலை	காயசித்திநாதர்	
128.	செவ்வாழை	பூரிமலை	அமுத மகரிஷி	
129.	நெல்லிமரம்	உச்சமலை	சிவத்தியானவர்	
130.	வேலிப்பருத்திக் கொடிகள்	அடந்தவனம்	பூபால முனி	
131.	துத்திச் செடிகள்	நொண்டிமலை	முத்துமாமுனி	
132.	செந்நாயுருவி	பெருங்கானல்	செயமுனிவர்	
133.	வெள்ளைச்சாரை	தாடகமலை	வீரமாமுனி	
134.	சோதிப்புல்	முத்துமலை	வேதமாமுனி	
135.	சத்திரப்பூடு	கொப்பரைமலை	சங்கமுனி	

வஎண்	மூலிகையின் பெயர்	மலையின் பெயர்	ஆசிரமம்	பக்கம்
136.	பொற்றலைக்கையான்	பெரியமலை	காசியமுனி	
137.	பாடானம்	வடகரைமலை	பதஞ்சலி	
138.	செங்கொடி வேலி	,,	வியாக்கிரமுனி	
139.	பாற்சொரிமரம்	புராதிமலை	சனகமாமுனி	
140.	வரைஆலமரம்	சரளைமலை	சிவப்பிரும்மரிஷி	
141.	செவ்வள்ளிக்கொடி	கருங்கானல்	பராசரிஷி	
142.	பலூனிமரம்	காளிக்கானல்		
143.	செங்குமரி	அருவிமலை	குதம்பைச்சித்தர்	
	வரைஆலமரம்	மலைநம்பிகோயில்		
		குரும்பைமலை	புண்ணாக்குச்சித்தர்	
	கருங்கரிப்பான்	மண்மலை		
144.	கருங்கமுகு	ஆற்றின் கரை	யோகச்சித்தர்	
		சிறுகுண்டுமலை		
145.	செந்தும்பை	மலையடிக்குறிஞ்சி	மிருகப்புடவு	
146.	கருந்தாமரை	ஒற்றையூர்	திருமூலர்	
	வெண்ணாவல்	சரசைஆறு	மவுனச்சித்தர்	
147.	கார்போகஅரிசி	காளிகோயில்	தேகசித்தர்	
148.	வல்லாரை	,,	வரரிஷி	
		சிறுமலைக்குண்டு	கமலநாதன் காவு	
149.	பேய்ச்சுரை (கானற்பலா)	நாதமலை	கவுபாலர்	
	கரப்பான்	முடக்கம் பாறை	மதிராசரிஷி	
	,,	திருகைக்கேணி	கௌதமர்	
150.	அவுரி (கர்தாமரை)	தோரணமலை	தேரையர்	
	செம்புனல் முருங்கை	ஊற்றுமாமலை	விசுவனித்தேவர்	
	முண்டகவிருக்ஷம்	ஒப்பநின்றாள் பொத்தை	அம்பிகானந்தர்	
	அவுரி	பொன்னறியான் காவு	டமரானந்தர்	
151.	குமரிக்கற்றாழை	குருநாக்கல் மலை	கையாட்டிச்சித்தர்	
152.	பெற் பூதைவேளை	கொடிமுடிமாலை	சித்தானந்தர்	
153.	நாகதாளிக்கள்ளி	இங்கிலாசபர்வதம்	சத்சிதானந்தர்	


தாமரை
நூலகம்